



www.tamilarangam.net



## வவுனியா: புலராத பொழுதுகள்







## மட்டக்களப்பு: ரிவி'ரண'ம்

# சரிநிகர்

இதழ் - 89
ஜன.25 - பெப்.07, 1996
விலை - 7.00

சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தமிழ் இயக்கங்களுக்கும் உட்கொலைகளுக்கும் அப்படி என்னதான் தொடர்போ தெரியவில்லை. அதுவும் குறிப்பாக புளொட்டுக்கும் உட்கொலைக்குமான தொடர்பு பிரசித்தமானது.

இவ்வருடத்தின் ஜனவரி முதல் வாரத்தில் அர்ச்சுனா என்றழைக்கப்படுகிற செல்வராஜா என்ற இளைஞர் காணாமல் போயிருக்கிறார். புளொட் இயக்கத்தின் மத்திய கமிட்டி உறுப்பினராக இருந்தவர். வேலணையைச் சேர்ந்தவர். வவுனியா கோவில் குளத்தில் மணமுடித்தவர். ஒன்றரை வயதுக் குழந்தை ஒன்றுக்கு தந்தை.

ஜனவரி முதல் வாரத்தில் காணாமல் போன இவரைத் தேடிவந்த மனைவிக்கும், உறவினருக்கும் அவர் 'டம்' பண்ணப்பட்டு விட்டார் என்று புளொட்டில் இருந்து கசிந்த தகவல் மூலமாகத் தெரியவந்தது. இதற்கிடையே அர்ச்சுனா கொல்லப்பட்டது தொடர்பாக புளொட்டின் ஒரு குழுவினரிடையே அதிருப்தி நிலவுவதாகவும், அவர்கள் மூலமாகவே இத்தகவல் வெளியுலகிற்குத் தெரிய வந்ததாகவும் கூறப்படுகிறது.

அர்ச்சுனா கொல்லப்பட்டது தொடர்பான தகவல் தெரியவந்ததும் அவரது மனைவியும் உறவினரும் வவுனியாவிலுள்ள

# புளொட் அர்ச்சுனா படுகொலை- ஒரு உள் வீட்டுச் சதி!

புளொட் முகாமுக்கு சென்று விசாரித்திருக்கிறார்கள். உண்மை வெளித்தெரிந்து விட்டதை மறைக்க முடியாது என்றுணர்ந்த புளொட்டினர், தாங்கள் தான் அர்ச்சுனாவிற்குத் தண்டனை வழங்கியதாகவும், அர்ச்சுனா புளொட் முக்கியஸ்தர் ஒருவரைக் கொல்வதற்காக 15 லட்சம் ரூபா பணம் பெற்றிருந்தது கண்டுபிடிக்கப்பட்டதாகவும் கூறினராம்.

இந்தப் பதில் சிலவேளைகளில் அர்ச்சுனாவின் மனைவியையும், உறவினர்களையும் வாய்மூடப்பண்ணியிருக்கக் கூடும். ஆனால் புளொட்டினது வரலாறு தெரிந்தவர்கள் இந்தப் பதிலைக்கேட்டு நகைப்பதைத் தவிர வேறேது செய்வர்

புளொட்டின் முதல் உட்படுகொலையான சிவநேசன் (காக்கா)இலிருந்து தமிழ்நாட்டில் சந்ததியார், திருமலையில் செல்வன், அகிலன் என்று நீள்கிற பட்டியலில் உள்ள அனைவர் மீதும் இயக்கத்திற்கு எதிராகச் செயற்பட்டதாக - ஏறத்தாழ இதே மாதிரியான குற்றச்சாட்டே சுமத்தப்பட்டிருந்தது என்பதனை அனைவரும் அறிவர்.

புளொட்டினது இவ்வாறான உட்படுகொலைகளை எதிர்த்து புளொட்டிலிருந்து வெளியேறிய தீப்பொறி குழுவைச் சேர்ந்த கேசவன் அவர்களால் 'புதியதோர் உலகம்' எனும் நாவல் எழுதப்பட்டிருந்தது. அந்நாவல் புளொட்டினது உட்கட்சி ஜனநாயகமின்மையையும், உட்கட்சிப்படுகொலைகளையும் துலாம்பரமாக விவரித்துச் செல்கிறது. அந்நாவலை எழுதிய கேசவன் இப்போது புலிகள் சிறையில்! புளொட்டினர் அவருக்கு வழங்கவிருந்த மரணதண்டனையை புலிகள் வழங்கிவிட்டார்களா இல்லையா என்பதுவும் தெரியாது.

'புதியதோர் உலகம்' விவரித்துச் செல்கிற புளொட்டினது உட்படுகொலைகள் சில புளொட்டின் தலைவராக இருந்த உமாமகேஸ்வரனின் கண்சாடையிலும், கண்டு கொள்ளாமையிலும் நடைபெற்றதாகக் கூறப்படுகிறது. அதன் தர்க்கரீதியான விளைவு என்னவென்றால் எல்லா தமிழ் இயக்கத்தலைவர்களும் புலிகளால் கொல்லப்பட உமாமகேஸ்வரன் மட்டும் அவரில் மிகவும் நம்பிக்கை வைத்திருந்த அவர் மிகவும் நம்பிக்கை வைத்திருந்த அவருடைய தோழர்களாலேயே தெருவினில் வைத்துச் சுட்டுக்கொல்லப்பட்டார்.

அரசின் கட்டுப்பாட்டுப் பிரதேசமான வவுனியாவில் புளொட்டிலிருந்து வெளியேறி அரச படைகளுடன் இயங்கி வந்த சிலர் கொல்லப்பட்டிருக்கிறார்கள். வவுனியா யு.என்.எச்.ஆர்.சி. முகாமில் கடமையாற்றி வந்த சிறிதரன் எனும் இளைஞர் கொல்லப்பட்டிருக்கிறார். அர்ச்சுனா கொல்லப்பட்டிருக்கிறார். இப்படி நீள்கிற பட்டியல் நமக்கு உணர்த்துவது தான் என்ன? பாசிஸம் புலிளிடமிருந்துமட்டும் தானா வருகிறது? ஜனநாயக வழிக்கு வந்த தமிழ்க்கட்சிகளின் ஜனநாயகம் என்பது தான் என்ன? என்று கேள்வியெழுப்புகிற போது இந்த 'ஜனநாயக வழிக்கு' வந்த தமிழ்கட்சிகளையெல்லாம் தமிழ் மக்களிடம் இருந்து அந்நியப்படுத்தத் தான் நாங்கள் இப்படிக் கேள்வியெழுப்புகிறோம் என்று கூறும் 'ஜனநாயக வாதி' களைப்பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

பி.வி

# அன்ரனோக்களை புலிகள் தாக்கவில்லையாம்!

கடந்த வருடம் ஜா-எலவுக்கு அண்மையிலும், பலாலிக்கு அருகாமையிலும் கடலில் வீழ்ந்து நொருங்கிய அன்ரொநொவ் விமானங்கள் மீது தாம் தாக்குதல் நடத்தவில்லையெனத் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் கூறுகிறது.

அதன்படி இவ் விமானங்கள் இரண்டிற்கும் என்ன நடந்ததென்பது இன்னும் மர்மமாகவே இருக்கிறது.

சமாதானப் பேச்சுவார்த்தைகள் முறிவடைந்து கடந்த ஏப்ரல் மாதம் மீண்டும் யுத்தம் ஆரம்பித்ததன் பின்பு தம்மால் அழிக்கப்பட்ட பாதுகாப்புப் படைகளின் விமானங்கள், கப்பல்கள், படகுகளின் பட்டியலொன்று புலிகள் இயக்கத்தினால் வெளியிடப்பட்டுள்ளது.

அப் பட்டியலின்படி அவ்ரோ விமானங்கள் இரண்டும், புக்கார விமானமொன்றும், வை-8 விமானமொன்றும், பெல் ஹெலிகொப்ரர்கள் இரண்டும், யுத்தக் கப்பல்கள் இரண்டும், தாக்குதல் கப்பலொன்றும், டோறா படகுகள் ஐந்தும், யுத்தத் தாங்கிகள் எட்டும், பபீல் வாகனங்கள் பன்னிரெண்டும், வேறு இராணுவ வாகனங்கள் ஆறும் அழிக்கப்பட்டன.

கடந்த செ[illegible]ர் 13ஆந் திகதி ஜா-எலவிற்கு [illegible]மயில் கடலிலும், நவம்பர் 22ஆ[illegible] [illegible]பலாலிக்கு அண்மைக் கடலிலும் வீழ்ந்து நொருங்கிய அன்ரொநொவ் விமானங்கள் இரண்டும் புலிகள் இயக்கத்தின் தாக்குதல்களிற்கு உட்பட்டிருக்க இடமுள்ளதாக முன்பு தெரிவிக்கப்பட்டது.

லக்பிம -1996-01.21

# பொலிசாரிற்கு எதிராக மனித உரிமைகள் பணிக்குழு குற்றச்சாட்டு!

ஆட்களைக் கைது செய்யும் போதும், அவர்களைத் தடுத்து வைக்கும் போதும் கடைப்பிடிக்கப்பட வேண்டிய அறிவுறுத்தல்கள் பலவும் பொலிசாரினால் மீறப்படுவதாக மனித உரிமைகள் பணிக்குழு தெரிவிக்கின்றது.

நபர்கள் எவரையாவது கைது செய்து, தடுத்து வைப்பதனால் முதல் இருபத்தி நான்கு மணித்தியாலங்களிற்குள் அது பற்றி மனித உரிமைகள் பணிக் குழுவிற்கு அறிவிக்க வேண்டியுள்ளது. இது தொடர்பாக குழுவினால் ஒவ்வொரு பொலிஸ் நிலையங்களுக்கும் தனித் தனியாக அறிவிக்கப்பட்டிருப்பதுடன், ஜனாதிபதியினால் தனிப்பட்ட முறையிலும் பொலிசிற்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆனாலும் இவ் ஆரம்பக் கோரிக்கை கூட இன்னும் உரிய விதத்தில் நிறைவேற்றப்படவில்லையெனப் பணிக் குழு தெரிவிக்கிறது.

''நபரொருவரைக் கைது செய்வது சந்தேகத்தின் மீது என்பது உண்மையே, ஆனாலும் அச் சந்தேகத்திற்கான காரணத்தை எம்மிடம் தெரிவிக்க வேண்டும். ஆனாலும் எக் கைது தொடர்பாகவும் இவ் விடயத்தை எப் பொலிசுமே எமக்குத் தெரிவிக்கவில்லை'' என அப் பேச்சாளர்கள் கூறினர்.

எவ்வாறெனினும் கடந்த சில மாதங்களாகக் கொழும்பு மட்டக்களப்பு மாவட்டங்களிலிருந்து அதிக எண்ணிக்கையான காணாமற் போனோர் பற்றிப் புகார் கிடைத்துள்ளதுடன், அம்பாறை, அனுராதபுர மாவட்டங்களில் குறிப்பிடத்தக்களவு கைதுகளும், காணாமற் போனமையும் பற்றி பணிக் குழுவிற்கு தகவல்கள் கிடைத்துள்ளன.

பணிக்குழு அமைக்கப்பட்ட பின்பு நடைபெற்ற எல்லாத் தேர்தல் காலங்களிலுமே நாட்டின் அனைத்து பிரதேசத்திலுமே கைதுகளும், காணாமற் போனவர்களதும் எண்ணிக்கை உயர்ந்து சென்றதுடன், இம்முறை மாகாண சபைத் தேர்தலிலும் இந்நிலைமை தொடரலாமெனத் தாம் நம்புவதாகப் பணிக் குழுவின் அப் பேச்சாளர் மேலும் தெரிவித்தார்.

லக்பிம -1996-01-14

# விளங்கிக் கொள்வோம் கேள்வி எழுப்புவோம்

''யுத்தத்தை யுத்தத்தால் வெல்ல முடியாது. அரசியல் தீர்வு யோசனைகளை விளங்கிக் கொள்வோம். கேள்விகள் எழுப்புவோம்'' என்ற தலைப்பில் பகிரங்கக் கருத்தரங்கொன்று ஜனவரி 20ம் திகதி அன்று பதுளை, அட்டம்பிட்டி மகா வித்தியால மண்டபத்தில் காலை 9.00 மணிக்கு நடைபெற்றது.

இக் கருத்தரங்கில், லூஷன் ராஜகருணா நாயக்க, சுனந்த தேசப்பிரிய, ஜோ செனெவிரத்ன, எஸ்,மனோரஞ்சன் ஆகிய பத்திரிகையாளர்கள் உரையாற்றினர்.

யுக்திய -1996-01-21

# உள் வீட்டுச் சதி!

ஜனாதிபதி பிரதம மந்திரி போன்ற அரசாங்கத் தலைவர்களுடன் நடைபெறும் முக்கிய இரகசியப் பேச்சுவார்த்தைகள், தகவல்களை ஐக்கிய தேசியக் கட்சிக்கு வழங்குவது அரசாங்கத்திலுள்ள அமைச்சரொருவரே என ஜனாதிபதியினால் அண்மையில் நடைபெற்ற ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி மத்திய குழுக் கூட்டத்தில் வெளிப்படையாகக் கூறியதன் பின்பு அவ் அமைச்சர் தொடர்பாக என்ன தீர்மானம் எடுப்பதென ஸ்ரீ..சு. கட்சியினர் ஆராய்ந்து வருகின்றனர்.

றாவய -1996-01-14

# சிறைச்சாலையைத் தாக்கப் புலிகள் திட்டமாம்

எதிர்வரும் சில தினங்களினுள் வெலிக்கடை, மகசீன் சிறைச்சாலைகள் மீது கடுந் தாக்குதலொன்றை நடத்த ஆயத்தமாக இருப்பதாகத் தகவல் கிடைத்துள்ளதால் ஜனவரி 19 பகல் முதல் அச் சிறைச்சாலைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ள பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

சிறைச்சாலையின் பாதுகாப்பிற்காகத் தற்போது ஈடுபடுத்தப்பட்டுள்ள பொலீஸ் பாதுகாப்புகள், மேலதிகமாக ஜனவரி 19 முதல் விஷேட இராணுவப் பாதுகாப்பு வழங்க பாதுகாப்புப் பிரிவுகளினால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.


முன்னணி வரிசைப் புலிப் பயங்கரவாதிகள் 60 பேர் தடுத்து வைக்கப்பட்டுள்ள மகசீன் சிறைச்சாலை மீது தாக்குதல் நடத்துவதற்காகப் புலிகள் இயக்கத்தின் விஜி எனப்படும் விஜயகுமார் என்ற தற்கொலைப் புலித் தலைவர் உட்படப் பலரும் தற்போது கொழும்பில் நடமாடுவதாக இராணுவ புலனாய்வுத் தகவல்கள் பிரிவுக்கு அறியக் கிடைத்துள்ளது.

இதே சமயம் சில தினங்களாகவே தாக்குதல் தொடர்பான தகவல்கள் பாதுகாப்புப் பிரிவுகளுக்குக் கிடைக்கப் பெற்றுள்ளதுடன் களுத்துறைச் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள முன்னணி வரிசைப் புலி உறுப்பினர்கள் சிலர் இதே சமயம் உண்ணா விரதமொன்றிற்குத் தயாராகி வருவதாகவும் தகவல்கள் கிடைத்துள்ளதாகச் சிரேஷ்ட பாதுகாப்பு அதிகாரியொருவர் தெரிவித்தார்.

தாமோதரம்பிள்ளை சிவகுமாரன் என்ற சிவா எல்லது சிவா அண்ணா அல்லது நியூட்டன் தாக்குதலை நடத்துவது தொடர்பான திட்டங்களுக்குப் பொறுப்பாக இருப்பதாகவும் இரகசிய புலனாய்வுச் சேவைக்குத் தகவல்கள் கிடைத்துள்ளது.

வெலிக்கடை, மகசீன் சிறைச்சாலைகள் மீது தாக்குதல்கள் நடத்தப்படலாம் என்ற தகவல் வெளிவந்ததுடன் சிறைச்சாலை முன்னாலுள்ள பெருந் தெருவை முழுமையாகவே மூடிவிடும் யோசனையொன்றும் பாதுகாப்புச் சபைக்குக் கிடைக்கப் பெற்றுள்ளதுடன் கிடைக்கும் தகவல்களினதும், வரும் நிலைமைகளுக்கேற்ப தேவையான நடவடிக்கை எடுப்பதற்காகப் பாதுகாப்புப் படைகளும், சிறைச்சாலை அதிகாரிகளும் உஷார் நிலையில் வைக்கப்பட்டுள்ளதாகவும் சிரேஷ்ட பாதுகாப்பு அதிகாரியொருவர் தெரிவித்தார்.

லங்காதீப -1996-01-20



'இலக்கிய உலகின் அண்மைய தொடர் மரணங்களில் ஈழத்தின் மூத்த எழுத்தாளர் எஸ். அகஸ்தியரும் சேர்ந்து விட்டார்.

ஆனைக்கோட்டை உயரப்புலத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட அகஸ்தியர், கீரிமலை வலித்தூண்டலில் திருமணம் செய்து இலங்கையை விட்டுப் புலம்பெயரும் வரை அங்கேயே வசித்துவந்தார்.

1983ம் இனக்கலவரத்தின் போது கீரிமலையிலிருந்த இவரது வீடும் இராணுவத்தால் தாக்குதலுக்குள்ளானது. எல்லா அழிவுகளுடன் இவரது இலக்கிய பொக்கிஷங்களும் அழிந்து போயின. இந்த இழப்பின் துயரை மேற்கு நாடொன்றில் இருந்து இடைவிடாது எழுதுவதன் மூலம் ஓரளவு அவர் தணித்துக்கொண்டிருக்க கூடும்.

இலங்கை இராணுவத்தில் கிளார்க்காக சேவையாற்றிய அகஸ்தியர் கம்யூனிஸ்ட் கட்சி நடவடிக்கைகளில் அதிக ஈடுபாடு கொண்டிருந்தார். சிலுவைராசா என்கிற தனது தமையனுடன் சேர்ந்து பல ஆர்ப்பாட்டங்களையும், போராட்டங்களையும் நடத்தியிருந்தார். இவரின் இந்த கம்யூனிஸ தொடர்பு காரணமாக தேவாலயத்திலிருந்து விரட்டப்பட்டார்.

''இருளினுள்ளே..' என்பது இவரது முதல் நாவலாகும். ''எரிநெருப்பில் இடை பாதையில்லை'' என்ற இவரது இறுதிநாவல். அண்மையில் வெளிவந்தது குறிப்பிடத்தக்கது. இவை தவிர பத்துக்கும் மேற்பட்ட நூல்களை பல்வேறு பதிப்பகங்கள் ஊடாக வெளியிட்டிருக்கிறார்.

தன் முதிர்ந்த புலம்பெயர் வாழ்விலும் ஓயாது எழுதிக்கொண்டிருந்த அகஸ்தியர் முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் செயற்கமிட்டி உறுப்பினராக இருந்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

பாரிஸ் நகரில் காலமான இவரின் பூதவுடல் டிசம்பர் 8ம் திகதியிலிருந்து 15ம் வரை அஞ்சலிக்காக வைக்கப்பட்டு அடக்கம் செய்யப்பட்டது.

இவரின் இழப்பின் துயரங்களில் சரிநிகரும் பங்குகொள்கிறது.

# விமானப் படைக்கு மூன்று புதிய விமானங்கள் கடற் படைக்கு மூன்று புதிய கப்பல்கள்

இலங்கை விமானப் படைக்கு நவீன தொழிநுட்ப வசதி கொண்ட விமானங்கள் மூன்றும், கடற்படைக்குப் புதிதாகக் கப்பல்கள் மூன்றும் கொண்டுவர அரசு தீர்மானித்துள்ளதுடன் இப் புதிய விமானங்கள், கப்பல்களும் ஜனவரி மாத முடிவில் ஆரம்பிக்க உத்தேசிக்கப்பட்டுள்ள கிழக்கு நடவடிக்கையில் ஈடுபடுத்தப்படலாம் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

கடந்த வருடம் ஏப்ரல் 19ஆந் திகதி முதல் ஆரம்பித்த மூன்றாவது ஈழப் போர் காரணமாக விமானப் படையிடம் இருந்த விமானங்கள் ஐந்து அழிந்ததுடன், கடற் படையிடம் இருந்த தாக்குதல் படகுகள் இரண்டும், டோறா மற்றும் சுப்பர் டோறா இனப் படகுகள் இரண்டும் பொருட்களை ஏற்றிச் செல்ல உபயோகிக்கும் கப்பல்கள் இரண்டும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கக் கடற் புலிகளின் தாக்குதல்களிற்குள்ளாகின. தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தாக்குதல்கள் காரணமாக அரச படைகளின் விமான கடற் பலம் குன்றியிருந்ததுடன் அந் நிலைமையிலிருந்து மீள்வதற்காகவே இப் புதிய விமானங்களும், கப்பல்களும் [illegible]ரவழைக்கப்படவுள்ளன. விமான, கடற் படைகளின் இராணுவ பலத்தை அதிகரிக்கும் நோக்கத்துடன் கடந்த வரவு -செலவுத் திட்ட யோசனைகளில் 1996ஆம் ஆண்டுக்கான பாதுகாப்புச் செலவினத்திற்காக ஆறு பில்லியன் ரூபாய் பணம் மேலதிகமாக ஒதுக்கப்பட்டது.

இப்புதிய விமானங்களும், கப்பல்களும் எதிர்காலத்தில் ஆரம்பிக்கப்பட உத்தேசிக்கப்பட்டுள்ள இராணுவ நடவடிக்கைகளில் உபயோகப்படுத்தவுள்ளதால் காலாட் படையின் பலம் பாரியளவில் உறுதிப்படும் என்பது இராணுவ உயர் அதிகாரிகளின் கணிப்பீடாகும். முடிவடைந்த ''றிவிரச'' நடவடிக்கையின் போதும் கூட விமான மற்றும் கடற் படையின் ஈடுபாடு மிகக் குறைந்தளவிலேயே இருந்ததென்பது இராணுவ ஆய்வாளர்களின் கருத்தாகும்.


யுக்திய -1996-01-24

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஜன.16ம் திகதி பொ.ஐ.மு அரசாங்கம் இனப்பிரச்சினைத் தீர்வுக்கான சட்ட ஆவணத்தை வெளியிட்டுள்ளது. அது தொடர்பான நீதியமைச்சர் ஜி.எல்.பீரிஸினதும் எதிர்க்கட்சி தலைவர் ரணில் விக்கிரமசிங்கவினதும் நேர்காணலின் சில பகுதிகளைக் கீழே தருகிறோம். இப்பேட்டிகள் அவ் ஆவணத்தின் நோக்கை தெளிவாக வெளிப்படுத்துகின்றன.



## "பௌத்த மதத்துக்கு இப்போதும் முன்னுரிமை உண்டு"

**பாதுகாப்புப் படையினர் புலிகளைத் தாக்கித் துரத்தி விட்டிருக்கின்றனர். இராணுவத்தினரின் ஒழுங்கு நிலையும் சிறப்பானதாக இருக்கின்றது. இந்த நேரத்தில் வடக்கு - கிழக்கில் இடம் பெயறும் இராணுவ நடவடிக்கைகளில் எவ்வகையான தாக்கத்தை அரசாங்கத்தின் தீர்வு யோசனைகள் ஏற்படுத்தும்?**

அரசாங்கத்தின் நடவடிக்கைகளில் மூன்று விடயங்களை அதிமேதகு ஜனாதிபதி அழுத்திச் சொல்லியிருக்கிறார். முதலாவது இராணுவ நடவடிக்கை. இது தமிழ்மக்களுக்கெதிரானதல்ல. சமாதானத்தின் எதிரிகளான புலிகளுக்கெதிரானது. இரண்டாவது அரசியல் தீர்வு யோசனைகள். இந்தப்பிரச்சினையின் தீர்வுக்கு யுத்தம்தான் ஒரு நிரந்தர முடிவல்ல என்பதால் யோசனைகள் முன்வைக்கப்படுகின்றன. அரசியல் தீர்வு ஒன்று இருக்கவே வேண்டும். மூன்றாவது பொருளாதார அபிவிருத்தி. எம்மிடம் ஏராளமான பொருளாதார வளங்கள் இருக்குமென்றால் இந்தப் பிரச்சினைகளை இன்னும் இலகுவாகத் தீர்த்துவிடலாம். இந்த மூன்றினையும் பொருந்தச் செய்வதே எங்களுடைய நோக்கம். தீர்வு யோசனைகள் எந்த வகையிலும் இராணுவ நடவடிக்கைகளில் தாக்கத்தை ஏற்படுத்தாது.

**13வது திருத்தச்சட்டம் இன்னும் முழுமையாக அமுல்படுத்தப்படவில்லை. அது அதிகாரப்பரவலாக்கலை சிறப்பாக செய்யும் விதத்தில் மேலும் மேம்படுத்தப்படலாம். மக்களும் மாகாணசபைக்குப் பழகிவிட்டார்கள். எனவே, உங்களது சொந்தப் பிரேரணைகளை முன்வைப்பதற்குப் பதிலாக, 13வது திருத்தச்சட்டத்தை இன்னும் சற்று மேம்படுத்தி நடைமுறைப்படுத்தியிருக்கலாமே. ஏன் நீங்கள் அதைச் செய்யவில்லை?**

13வது திருத்தச்சட்டம் வெளியிடப்பட்டிருக்கும் முறையில் அது மத்திய அரசாங்கத்தால் வழங்கப்பட்டுள்ள எந்த அதிகாரங்களையும் திருப்பி எடுத்து விடும் நிலைமையே உள்ளது என்ற ஒரு பதிலையே தருகிறது. உதாரணமாக மாகாணசட்டங்களை பாராளுமன்றம் தனது 2/3 பெரும்பான்மை வாக்குகளால் செயலிழக்கச் செய்துவிடமுடியும். மேலும் தேசியக் கொள்கையொன்றை உருவாக்குதலுடனும் நடைமுறைப்படுத்தலுடனும் சம்பந்தப்பட்டவிடயம் ஒன்று காரணமாக ஒருகையால் அரசாங்கம் எதை வழங்கியுள்ளதோ அதை மறுகையால் எடுத்துவிட முடியும். எனவே 13வது திருத்தச்சட்டத்தில் பல ஓட்டைகள் உள்ளன். அது ஒரு நேர்மையான முயற்சி அல்ல. அவர்கள் இதை ஒரு பலமான அத்திவாரமாக கருதவும் இல்லை. தவிரவும் ஒதுக்கப்பட்ட பட்டியல் (Concurrentlist) தொடர்பாக பல சந்தேகங்கள் உள்ளன. இந்தப்பட்டியல் போடப்பட்ட நாடுகள் பலவற்றில் அது அவ்வளவாக வெற்றியளிக்கவும் இல்லை.

இந்தியாவில் இது பல பிரச்சினைகளை ஏற்படுத்தியுள்ளது. பாகிஸ்தானில், ஒதுக்கப்பட்ட பட்டியலில் உள்ள விடயங்கள் 10 வருடங்களுக்கு மட்டும் இருக்கும் என்றும் அதன் பின் அதிலுள்ள பல விடயங்கள், பகிரப்பட்டபட்டியல் (Devolved list) சேர்க்கப்படும் என்றும் கருதப்பட்டன. ஆகவே முதலாவதாக மத்திய அரசாங்கத்திற்கு ஆரம்பத்திலேயே அதிகாரப்பரவலாக்கலை வீணாகக்கூடிய வாய்ப்புக்கள் நிறைய வழங்கப்பட்டுள்ளன. இது விவசாய சேவைகள் சட்டமூலத்தின் போதும், தேசிய போக்குவரத்து ஆணைக்குழு சட்டமூலத்தின் போதும் கடந்த ஆட்சிக்காலத்தில் நடந்தது.

இரண்டாவதாக, அங்கு நிறையவே நியாயமான குழப்பங்கள் உள்ளன. இத்கைய பல சந்தேகங்கள் பயனற்றவை. எனவே, இவ்வளவு குறைபாடுகளைக் கொண்ட ஒன்றை அடிப்படையாக வைத்து செயற்படுவதை விட புதியதான ஒன்றை முன்வைக்கவும், அதனூடாக பொருத்தமானவற்றை மத்திக்கும் பிராந்தியத்துக்கு மிடையில் மிகத் தெளிவாக வரையறைக்கின்ற கொள்கைகளை வெளியிடவும் நினைத்தோம்.

**உங்களால் பத்திரிகைகட்கு வெளியிடப்பட்ட பரிந்துரைகளில் ஒரு பிராந்தியத்தின் ஆளுகையிலுள்ளவர்கள் அரச எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டால் அதைக் கட்டுப்படுத்தவுள்ள ஜனாதிபதிக்கான அதிகாரம் பற்றி எதுவும் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. இது உங்களது ஆரம்ப பரிந்துரைகள் பெருமளவுக்கு மாறியுள்ளதை காட்டுகின்றன. உங்களை இவ்வாறு செய்யத்தூண்டியது என்ன?**

உண்மையில் இப்போதைய பரிந்துரைகட்கும், முன்பு ஓகஸ்டில் வெளியிடப்பட்டவைகட்கும் இடையில் எத்தகைய வேறுபாடும் இல்லை. உண்மையில் இவையிரண்டும் இருவேறு அறிக்கைகள் என்பதை விளங்கிக் கொள்ளத்தான் வேண்டும். ஓகஸ்டில் வைக்கப்பட்ட அறிக்கை மிகவும் எளிய வார்த்தைகளில் வெளியிடப்பட்டுள்ளது. இந்தவாரம் நாம் வெளியிட்டிருப்பது ஒரு சட்டரீதியான அறிக்கை. அதாவது அரசியலமைப்பின் அத்தியாயங்களாக வருவதற்கான நகல்கள். அதனால் அது மிகவும் விரிவாகவும், திருத்தியும் வெளியிடப்பட்டுள்ளது. இது ஒரு சட்ட எழுத்துருவாகும்.

முன்னையது நான்கோ ஐந்துபக்கங்களைக் கொண்டது. இதுவோ 35 பக்கங்களைக் கொண்டது. இது ஒரு விதத்தியாசமான முயற்சியாகும். இதற்கும் முன்னையதற்கும் இடையில் எந்த முரண்பாடுகளும் இல்லை. ஓகஸ்ட்டில் வெளியிடப்பட்ட அறிக்கையில், நாம் மிகவும் தெளிவாக இதைத் தெரிவித்திருந்தோம். அதாவது, எல்லாவிதமான பகிர்வு முயற்சிகளும் இலங்கையின் ஐக்கியத்தையும் பிரதேச ஒருமைப்பாட்டையும் பேணும் விதத்திலேயே அமையும் என்று குறிப்பிட்டோம்.

இவை முக்கியமான வழிநடத்துகின்ற கொள்கைகளாகும் என்பதில் எமது எல்லா நடவடிக்கைகள் இதற்கு உட்பட்டே இருக்கும். எனவே எமது ஓகஸ்ட் மாத அறிக்கையில், நாட்டின் எந்தப்பகுதியையாவது பிரித்துக்கொண்டு போவதை அனுமதிக்கமாட்டோம் என்பதை தெளிவாக்கியிருந்தோம். நாம் நாட்டை பிரிப்பதற்கோ சிதறிப்போவதற்கோ ஒரு போதும் காரணமாக இருக்க மாட்டோம். எனவே நாம் அத்தகைய நிலைமைகளிலிருந்து பாதுகாப்பதற்கு ஏற்ற விதத்தில் எல்லா விதமான முற்பாதுகாப்பு நடவடிக்கைகளையும் எடுக்கவேண்டும்.

நாம் வேறு அரசியல் சட்டங்களைப் பார்த்து எமது சூழ்நிலைக்கு ஏற்றவிதத்தில் அவற்றில் உள்ள சில ஏற்பாடுகள் ஒரு நாடு பிரிந்து போகிற நிலைமையை எப்படி பாதுகாக்கின்றன என புரிந்துகொண்டு சேர்த்துள்ளோம்.

பிரிக்கமுடியாத (Indissoluble) ) என்ற சொல் அவுஸ்திரேலியா சட்டத்தில் பாவிக்கப்பட்டுள்ளது. நாம் அதைப்பாவித்துள்ளோம். நாம் கனேடிய அனுபவத்தை மிகவும் கவனமாகப் பார்த்தோம், குறிப்பாக கியுபெக்கில் நடைபெற்ற கருத்துக்கணிப்பை. இந்தக் கருத்துக்கணிப்பு கியுபெக் பிரிய வேண்டுமா என்பதற்காக நடத்தப்பட்டது. அது மாகாண சட்டத்தின் கீழ் நடந்தது; மத்திய சட்டத்தின் கீழ் அல்ல.

நான் கனேடிய உயர் ஸதானிகருடன் கலந்துரையாடல் ஒன்றை நடாத்தினேன். அவர் கனடாவிலிருந்து சில அறிக்கைகளை தருவித்துத் தந்தார். நாம் நாட்டின் எந்தப்பகுதியிலாவது பிரிந்து செல்வதற்கான வாய்ப்பை ஏற்படுத்தக்கூடிய நிலைமையை தருவிக்கும் வித்தியாசமான ஏற்பாடுகளை புதிய சட்டத்தில் சேர்த்துள்ளோம். எனவே இது ஒரு பிராந்தியங்களின் கூட்டு. அது பிரிக்க முடியாது.

ஏன், எமது ஓகஸ்ட் அறிக்கையில் கூட நாம் இதுபற்றி தெளிவாகவே இருந்தோம். அங்கே எந்த வேறுபாடும் இல்லை. ஒன்று ஒன்றோடு பொருந்துவதுதான்.

**நீங்கள் உங்கள் பரிந்துரைகளில் இலங்கையின் தேசியக்கொடி 'சிங்கக்கொடி' என்றும், இலங்கையின் தேசியகீதம் 'நமோ நமோ மாதா' என்றும் குறிப்பாகக் கூறியுள்ளீர்கள். நீங்கள் ஒற்றையாட்சி முறையில் இருந்து பிராந்தியங்களின் கூட்டாக மாறுவதை இதே தேசிய கீதத்துடனும், கொடியுடனும் தான் செய்யப்போகிறீர்கள் என்று நாம் கொள்ளலாமா? நீங்கள் சிங்கள தீவிரப்போக்காளர்களை சமாதானப்படுத்த முயலவில்லையா?**

இல்லை. இவை இன்றைய அரசியல் அமைப்புச்சட்டத்தின் அங்கங்கள் இவை தொடர்பாக பல ஆழமான தவறான புரிதல்கள் நிலவுகின்றன. அரசாங்கம் இவற்றை இல்லாமல் செய்ய முனைகிறது என்ற நம்பிக்கையும் இருந்தது. இவ்வாறான ஒரு எண்ணம் எமக்கு ஒரு போதும் இருந்ததில்லை. பிரச்சினை உருவாகுவதற்கான காரணம் நாம் முழு அறிக்கையையும் பிரசுரிக்காததே.

நாம் அவற்றில் ஒருசில பகுதிகள் தயாரானதும் பிரசுரத்துக்குக் கொடுத்தோம். ஆனால் முதலாவது அத்தியாயம் தேசியகீதம் கொடி என்பவற்றைக் கொண்டது - அப்போது வெளியிடப்படவில்லை.


**நீங்கள் பௌத்தமதம் பற்றிய அத்தியாயத்தையும் வைத்திருக்கப் போவதாக கூறியுள்ளீர்கள். அது பௌத்த மதத்திற்கு முன்னுரிமை வழங்குவதாக குறிப்பிடுகிறது. பல்லின பல்மத பாங்கான நாடொன்றில் இவ்வாறு முன்னுரிமை கொடுப்பதை எவ்வாறு உங்களால் செய்ய முடியும்? அப்படி செய்து கொண்டே ஒருமத சார்பற்ற அரசை எப்படி பேண முடியும்? இத்கைய ஒருசட்ட ஏற்பாடு இந்த 'பிராந்தியங்களின் கூட்டமைப்பை' ஒரு கற்பனை விவகாரம் ஆக்கிடாதா?**

நான் இதை முக்கிய பிரசச்னையாக கருதவில்லை. இன்றைய சட்டத்திலும் கூட பௌத்த மதத்துக்கு முன்னுரிமை இருக்கவே செய்கிறது. கடந்த 17 வருடங்களாக, 1978ல் கொண்டுவரப்பட்டு நடைமுறையில் இருக்கும் இந்தச்சட்டம் எந்த விதமான அசௌகரியங்களையும் மற்றைய மதங்களுக்கு ஏற்படுத்தவில்லை. மற்றைய மதங்களை நீதியாக நடாத்த இன்னொரு ஏற்பாடு அங்கு உள்ளது. இது இன்றைய யதார்த்த நிலைமையில் ஒன்று. இதை மாற்ற வேண்டும் என்ற ஒரு தேவை நிலவுவதாக கருதவில்லை. அவ்வாறு செய்வது தேவையற்ற உணர்வலைகளை கிளப்பிவிடக்கூடும். எமது நோக்கம் பிரச்சினையைத் தீர்ப்பதே!

**பரிந்துரைகளில், ஐந்தாவது அட்டவணைப்படி ஒருவர் சத்தியப்பிரமாணம் செய்யும்வரை, தெரிந்தெடுக்கப்படும் பிரதிநிதிகள், உத்தியோக பூர்வ பிரதிநிதிகள் ஆகமாட்டார்கள் என்று கூறப்படுகிறது. இது என்ன? ஆறாவது திருத்தச்சட்ட மூலம் போன்ற ஒன்றா?**

இல்லை. இதை நாம் சத்தியப்பிரமாணத்துக்கான வார்த்தைகளை தெளிவாக தயாரிப்போம். ஆனால் அது எந்த இனத்தையும் பாதிக்காத விதத்தில் தயாரிக்கப்படும்.

நன்றி THE ISLAND.



## பொ.ஐ.ஐ.முவும் முரண்பாடான வாக்குறுதியும்

**அசாங்கம் அரசியல் பொதிக்கான சட்டவரைவொன்றை கடந்த வாரம் வெளியிட்டிருக்கிறது. இது பரந்தளவில் வெளியிடப்பட்டுமிருக்கிறது. இந்தப் பொதிபற்றி நீங்கள் என்ன கருதுகிறீர்கள்?**

நாம் இந்தப் பிரேரணைகள் பற்றி கூடி ஆராய்ந்து கலந்துரையாடவுள்ளோம். அதன் பின்னர் எமது அவதானங்களையும், கருத்துக்களையும் தெரிவுக்குழு கூடும் போது தெரிவிக்கவுள்ளோம்.

**★ குறிப்பாக வடக்கு-கிழக்கு இணைப்புப் பிரச்சினையுடன் தொடர்பாக, பரவலாக்கல் அலகு, பற்றி சட்ட நகலில் எதுவுமே குறிக்கப்படவில்லை. எந்தளவு தூரத்துக்கு அதிகாரங்கள் பரவலாக்கப்படுகின்றது என்று தீர்மானிப்பதற்கு முன்னர், குறித்த பரவலாக்கல் அலகுகள் என்ன என்பதை அறிவது அவசியம் என்று நீங்கள் சொல்வீர்களா?**

அதிகாரப் பரவலாக்கத்தைப் பொறுத்தவரை எமது நிலைப்பாடு கூடியளவு அதிகாரங்களைப் பரவலாக்குவதே மாகாணங்கள், உள்ளூர் அதிகாரம் கொண்ட நகரசபைகள் பிரதேச சபைகள் என்ற சாதாரண நடுத்தர அதிகாரங்களைப் பரவலாக்குவது அல்ல. அதைவிடக் கூடுதலானது. அதிகாரம் மக்களுக்கு நெருக்கமானதாக இருக்கவேண்டுமென நாம் நினைக்கிறோம். அவர்கள் சொல்வதைப்போல் அதிகாரங்களின் செயற்பாடு மாகாணங்கள் பிராந்தியங்களுக்கு பரவலாக்குவதாக இதே நாம் பார்க்கவில்லை. இணைந்த இரண்டு பரவலாக்கமாகவே இதைப் பார்க்க விரும்புகிறோம்.

பரவலாக்கல் அலகுகளைப் பொறுத்தவரை அதை இன்னும் அரசாங்கம் தீர்மானிக்கவில்லை என்றே பத்திரிகைச் செய்திகள் கூறுகின்றன. அவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளில் இதுவும் ஒன்று. அவர்கள் முரண்பாடான வாக்குறுதிகளை வழங்கியும் அவற்றை நிறைவேற்றாமலும் இருக்கிறார்கள். யுத்தம் முடியும் வரை எந்தப்பிரேரணைகளையும் முன்வைப்பதுமில்லை. நடைமுறைப்படுத்துவதுமில்லை என்று மகாசங்கத்தினருக்கு அரசாங்கம் வாக்குறுதியளித்திருந்தது. அவ்வாறே தமிழ்க் கட்சிகளுக்கும் -ரிவிரெச நடவடிக்கை; இதை டிசம்பரில் அவர்கள் நடத்தவில்லை.- முடிவு பெறும் வரை எந்தத் தீர்வையும் முன்வைப்பதில்லை என்றும்வாக்குறுதியளித்திருந்தார்கள்.

அரசு அதிகாரப்பரவலாக்கலைப் பற்றிக் பேசிக்கொண்டே வடமத்திய, சப்பிரகமுவ மாகாணசபைகளைக் கலைத்ததை நாம் பார்த்துக் கொண்டுதானிருக்கிறோம்.

இரண்டு வாரங்களுக்கு முன்னர் வடமத்திய, சப்பிரகமுவ மாகாண சபைகளை யாப்புக்கு முரணான முறையில் அதன் ஆளுநர்கள் கலைத்தார்கள். முதலமைச்சர்கள் எல்லாம் 'கோர்ட்டு'க்குச் செல்ல வேண்டியியேற்பட்டது. இந்த அரசாங்கத்தின் செயற்பாடுகள் குறித்து நாம் ஆச்சரியப்படுகிறோம். அவர்களின் நடவடிக்கைகள் எல்லாம் அதிகாரங்களை வழங்க அவர்கள் விரும்பவில்லை என்பதையே காட்டுகிறது. உண்மையில் அவர்கள் அதிக அதிகாரங்களை தக்கவைத்துக் கொள்வதையே விரும்புகிறார்கள்.

பிரதேச சபைவிவகாரமும் கோட்டுக்குச் சென்று அவற்றைக் கலைக்கும் அதிகாரத்தை அரசுக்குப் பெற்றுக்கொடுத்தது. யாப்பின்படி பிரதேச சபைகள் தொடர்பான விவகாரம் மாகாண சபையின் கீழேயே வருகிறது. இருந்தும் ஒரு மாகாண சபை அமைச்சரால் பிரதேச சபையைக் கலைக்கமுடியாது. ஒரு தலைவர் மீது ஊழல், நிர்வாகச் சீர்கேடு போன்ற குற்றங்கள் சுமத்தப்பட்டிருந்தால் இன்னொருவர் மூலம் அவரின் இடத்தை நிரப்பியிருக்கலாம்.

நன்றி. SUNDAY LEADER

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# கிழட்டு யானைகளிடமிருந்து விடுதலை தேவை!

ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் அங்கீகரிக்கப்பட்ட ஒரு அரசியல் கட்சியாகிய பின்பு நடைபெற்ற பல்வேறு தேர்தல்களின் போதும் குறிப்பாக முஸ்லிம் காங்கிரஸ் தலைவரின் அரசியல் சூதாட்டத்தினால் கல்குடாத் தொகுதியை உள்ளடக்கிய முஸ்லிம் பிரதேசங்களான ஓட்டமாவடி, வாழைச்சேனை, மீராவோடை போன்ற கிராமங்கள் பெருமளவு புறக்கணிக்கப்பட்டுள்ளன. அதை இன்னும் தெளிவாகக் குறிப்பிடின் கடந்த 17 வருடங்களாக பேரினவாதக் கட்சிகளுக்கு இந்த மூன்று முஸ்லிம் பிரதேசங்களையும் குறிப்பாக ஐக்கிய தேசியக்கட்சிக்கு அதன் தரகர்கள் தாரை வார்த்துக் கொடுத்தனர். இதற்கு பிரயச்சித்தமாக இந்த தரகர்களுக்கு கூட்டுறவுச் சங்கத்தில் பணிப்பாளர், தலைவர் பதவி போன்றன வழங்கப்பட்டன. இதே போன்றுதான் முஸ்லிம் காங்கிரஸ் தலைவரின் சட்ட விவாத திறமையால் இந்தப் பிரதேசங்கள் மூன்றும் மிகமோசமாகப் பாதிக்கப்பட்டன. இதன் பிரதிபலிப்புதான் அண்மையில் அமைச்சர் அஷ்ஃரப் அவர்களுக்கு எதிராக கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மான நாளன்று கிழக்கில் ஹர்த்தால் அனுஸ்டிக்கப்பட்ட போது ஓட்டமாவடியில் மட்டும் கடைகள் திறக்கப்பட்டு வழமையான அலுவல்கள் நடைபெற்றன.

இப்பிரதேச மக்கள் மட்டுமின்றி முஸ்லிம் காங்கிரஸின் அமைப்பாளரை கூட கட்சித்தலைவரான அஷ்ரஃப் அவர்கள் மிக நாகரீகமற்ற முறையில் புறக்கணித்துள்ளார். ஏனெனில், சென்ற பொதுத் தேர்தலில் கல்குடாத் தொகுதி வேட்பாளர் எஸ்.ஐ.முஹம்மது தம்பி அவர்கள் - இவரே இப்பிரதேசங்களின் அமைப்பாளரும் கூட - தேர்தலில் தோல்வியுற்றாலம் அதிகப்படியான வாக்குகளைப் பெற்று இரண்டாம் இடத்தைப் பெற்றார். மூன்றாம் இடத்தை ஈரோஸ் பஷீர் அவர்களும் ஐந்தாம் இடத்தை புகாரி மௌலவியும் பெற்றுள்ளனர். பஸீருக்கும், புஹாரி மௌலவிக்கும் தலைவரால் கொடுக்கப்பட்டுள்ள பதவிகளும் சலுகைகளும் கல்குடா அமைப்பாளர் எஸ்.ஐ.முஹம்மது தம்பி அவர்களுக்கு வழங்கப்படவில்லை. பஸீர் சேகுதாவூர்த் அவர்கட்கு இரண்டு வாகனங்கள் வழங்கப்பட்டுள்ளன. அவற்றில் ஒன்று (Land Rover) அது தற்போது அவருடைய நெருங்கிய ஆதரவாளர்களின் சாரதி பயிற்சி வாகனமாக பாவிக்கப்படுகின்றது. ஆனால் கல்குடா அமைப்பாளருக்கு ஒரு வாகனம் கூட வழங்கப்படவில்லை. இதிலிருந்து விளங்கப்படுவது என்னவென்றால் யார் அஷ்ரஃப் அவர்களின் பின்னால் சுற்றுகிறார்களோ அவர்களே இலாபமடைவர். எவர் கௌரமாக நடந்து கொள்கிறார்களோ அவர்கள் நட்டமடைவர். இது முஸ்லிம் காங்கிரஸில் உள்ள ஒரு விதியும் கூட.

தற்போது இப்பிரதேச மக்களின் அத்தியாவசியத்தேவை கிழட்டு யானைகளிடமிருந்து விடுதலையே. கடந்த 17 வருடங்களாக இருந்த ஐக்கிய தேசியக்கட்சி அரசாங்கம் தன்னுடைய தரகர்களை பல பொது ஸ்தாபனங்களுக்கு தலைவர்களாகவும், பணிப்பாளர் சபை உறுப்பினர்களாகவும் நியமித்தது. அதாவது கூட்டுறவுச் சங்கங்கள் பள்ளிவாசல்கள், பாடசாலைகள் போன்றவற்றில் பொறுப்பு வாய்ந்த பதவிகளில் அமர்த்தப்பட்ட இவர்கள் பொதுஸ்தாபனங்களின் சொத்துக்களை சூறையாடுபவர்களாகவும், கடும் சுரண்டல் வாதிகளாகவும் காணப்படுகின்றனர். உதாரணமாக ஓட்டமாவடி ப.நோ. கூ. சங்கத்தை மூடுவிழா நடத்தும் அபாயம் தென்படுகிறது. இதற்காக மாற்று வழிகளை முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் பெற்றுத்தர வேண்டும்.

இதே போன்றுதான் பள்ளிவாசல் நிர்வாகம், இதையும் ஐக்கிய தேசியக்கட்சியின் தரகர்கள் ஆட்சி செய்து வருவதால் பள்ளிவாசல் சொத்துக்கள் பெருமளவு சூறையாடப்பட்டுள்ளன. இதுவரையும் 17 வருடங்களாக நிர்மாணம் செய்யப்பட்டு வரும் கட்டிட வேலைகள் பூர்த்தி செய்யப்படவில்லை. நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டவர்களும், கொலைக்குற்றம் சாட்டப்பட்டவர்களும் வட்டிக்கு கொடுப்பவர்களும் நிர்வாக சபை உறுப்பினர்களாக இருந்து வருகின்றார்கள். தயவு செய்து இவர்களனைவரையும் துரத்தியடிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

முஸ்லிம் காங்கிரஸ் தலைவர்கள் அவர்களே! முஸ்லிம் மாகாண சபையின் போராளிகளே! புனர்வாழ்வு அமைச்சை வேலியிட்டிருக்கும் போராளிகளே! எங்கள் கிராமத்திற்கு உங்களுடைய அபிவிருத்தி எதுவும் தேவையில்லை. எதிர்கால சந்ததியின் நிம்மதியான வாழ்க்கையின் பெயரால் கேட்கிறோம் எங்கள் கிராமம் ஐக்கிய தேசியக்கட்சியின் தரகர்களால் இன்னமும் சூறையாடப்பட்டுக் கொண்டிருக்கின்றது. இதிலிருந்து விடுதலையும், விமோசனத்தையும் எங்கள் கிராமத்திற்கு பெற்றுத் தாருங்கள். நீங்களும் மீண்டுமொரு தடவை வாக்கு வேட்டையாடுவதற்கு இலகுவாகயிருக்கும் என்பதையும் கூறிக்கொள்ள விரும்புகிறோம்.

*ஓட்டமாவடி நௌபல்*

---

## மாகாண சபைத் தேர்தலும்

# மாயமாய் மறைந்த ஹெலியும்!

1987 நவம்பர் 16ல் இந்திய அமைதிப்படையின் 'சென்றிக்குள் வடக்குக்கிழக்கு மாகாண சபைத்தேர்தல், கிழக்கில் மட்டும் நடந்தது. முஸ்லிம்களைக்கடைக் கண்ணாலாவது கவனத்தில் எடுத்துக் கொள்ளாத இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் ஓர் அம்சமான மாகாண சபைத் தேர்தலில் முஸ்லிம் காங்கிரஸ் போட்டியிடுவதில்லை என ஏற்கெனவே தீர்மானம் எடுத்திருந்தது. இருந்தாலும் 'முஸ்லிம்கள் தமக்கென ஓர் அரசியல் கட்சியின் ஜனனத்தை விரும்புகிறார்களா?' என்பதற்கான அபிப்பிராய வாக்கெடுப்பாகக் கருதியே இந்தத் தேர்தலில் குதிப்பதாக இறுதி முடிவுவெடுத்தது எமது கட்சி.

கற்குடாத்தொகுதி முஸ்லிம் பகுதிகளில் நான்கு பெனர்களை நான் தொங்க விட்டேன். பொதுக்கூட்டம் ஒன்றை நடாத்துவதற்கு பலரும் தங்கள் காணிகளைத் தருவதாக வாக்குறுதி வழங்கிவிட்டு, பின்னர் கையை விரித்து விட்டனர். சிலர் இரவோடிரவாக கம்பி வேலியும் போட்டனர். அந்த நாள்களில் புலிகளின் இரவுக்கோட்டையாக ஓட்டமாவடி திகழ்ந்தது. இந்தியப் படைகளின் பிரஜைகள் குழுக்கூட்டங்களுக்கு எங்களில் பலர் செல்வோம். இந்தியப்படையினர் வழங்கும் 'அமுல்' பாலையும் பலவகை பலகாரங்களையும் வயிறு முட்டப்பிடித்து விட்டு வந்து, நடந்தவைகள், நடப்பவைகள், கேட்டவைகள், பார்த்தவைகள் அனைத்துயும் இரவோடிரவாக தம்பிமார்களிடம் ஒப்புவித்து விடுவோம்!

இப்படியான நாள்களில் தான் அந்த மாகாண சபைத்தேர்தல் நடந்தது. பொதுக் கூட்டம் நடாத்துவதற்கு காணியில்லாமல் கடைசியில் ஓட்டமாவடி மத்திய கல்லூரியின் மைதானத்தைப் பார்த்த மாதிரி வீதியின் மருங்கில் இரண்டு மேசைகளைப் போட்டு கூட்டத்தை நடாத்தினேன். கூட்டத்திற்கு தலைவர், ஏற்பாட்டாளர், பேச்சாளர் எல்லாம் நானே. கதையும், பேச்சும் பாடலுமாக மழையிலும் வெய்யிலிலும் கூட்டம் நடந்தது.

அனைத்து இயக்கங்களாலும் குட்டப்பட்ட முஸ்லிம்கள் முஸ்லிம் காங்கிரஸுக்கு வாக்குப் போட துடித்து நின்றனர்.

தலைவர் அவர்கள் இந்தியப்படையின் ஹெலியில் காலை 10மணிக்கெல்லாம் வருவதாக வாக்களித்திருந்தார். காலை 10 மணி மாலை 4மணியாகியம் தலைவர் வரவில்லை. பசியிலும் மழையிலும் மக்கள் தலைவரின் தரிசனத்திற்காகத் தவம் கிடந்தனர். மேசைக்குப் பின்னால் போடப்பட்ட கதிரைகளும் வெறுமனே கிடந்தது. ஊர்ப்பிரமுகர்களுக்கு ஐயாவுக்கு ஒருபக்கம் பயம். மறுபக்கம் இரவுத் தம்பிகளுக்குப் பயம். மக்களோ யாருக்குமே பயமில்லை என்பது போல் திரண்டு கிடந்தனர். இதைக்கண்ணுற்ற இந்தியப்படை சிவா (தஞ்சாவூர்க்காரர் இவரைப்பற்றித்தனியாக எழுதவேண்டும்) ''முஸ்லிம்கள் பயங்கரக் கார்ப்பரேசன் சார்'' என்றார்.

அந்தத்தருணத்தில் தான் புத்தளத்திலிருந்து நண்பர் டாக்டர் இல்யாஸ் அவர்கள் தமது 'பஜ்ரோ' வில் வாராது வந்த மாமணியாய் வருகை தந்தார்கள். சனத்திரளுக்கு ஒரு 'டொனிக்' போல அவர்கள் முகம் மலர்ந்தது. 'எப்படியோ கூட்டம்' ஸலவாத்துடன் முடியும் தருவாயில் சலனம் தொடங்கியசு.

''தலைவா வநத ஹெலி திசைதிருப்பி பாகிஸ்தானின் எல்லைக்குச் சென்றுவிட்டதாம். இந்திய ஹெலி! பாகிஸ்தானில்.....''

காட்டுத்தீ போல் செய்தி பரவியது என்பார்களே அதை அன்றுதான் நான் அறிந்தேன். பெண்களெல்லதாம் முந்தானையை வானோக்கி ஏந்தியவர்களாக ''கடலில் தாண்ட கப்பலை கரை சேர்ந்த நாதாக்களே நீங்கள்தான் தலைவரைக் காப்பாத்த வேணும்'' கண்ணீரும் கம்பலையுமாக மக்களெல்லாம் வீடுகளை நோக்கினர். நானோ மேசையையும், கதிரையையும் வீட்டிற்குக் கொண்டு போக ஆயத்தமானேன்.

சரியாக 5 வருடங்களுக்குப்பிறகு 1994ல் தான் திசைதப்பிய ஹெலி, கதையின் மூலம் தெரியவந்தது. அது ஸ்ரீ.ல.மு.காங்கிரஸ் தலைமையகத்திலிருந்து வெளிவந்த இட்டுக் கட்டப்பட்ட செய்தி என்பது. செய்தியை அற்புதமாகச் சோடித்தவரே 'லொட்ஜ்'ஜில் வைத்து ஹாஸ்யமாகக் கூறிய போது நான் அசந்து போனேன்.

மக்களின் உணர்வுகள் இவர்களின் காலடியில் மிதிபட்டுப் போனதுவோ?

'பொய்'யே! உன் பலம் தான் என்ன?!

*எஸ்.எல்.எம்.ஹனீபா*

---

# இனப்பிரச்சினைத் தீர்வுக்கு சோஷலிசம் தடையாம்!

## சொல்வதற்கு வேறு வழியில்லை.

சிறுபான்மையினருக்கு அதிகாரங்களைப் பகிர்ந்தளிப்பதற்கென்று பொய் சொல்லிக்கொண்டே புதிய அரசியல் அமைப்பு சீர்திருத்தங்கள் அறிவிக்கப்பட்டுவிட்டன; இனப்பிரச்சினைத் தீர்வுக்காக; இனப்பிரச்சினையின் அடியாழங்களை உணர்ந்து இத்தீர்வு யோசனைகள் முன்வைக்கப்பட்டதாகத் தெரியவில்லை.

சந்திரிகா அதிகாரத்திற்கு வருவதற்கு முன்னர்; சமாதான தேவதையாகத் தோன்றி - பதவிக்கு வருவதாக கொடுத்தவாக்குறுதிகள் எதுவும் இதுவரை காப்பாற்றப்படவில்லை. காப்பாற்றப்படுவதற்கான அறிகுறிகளும் இல்லை. சிறுபான்மை மக்களை முற்றாக பின்தள்ளி - சிங்கள மேலாதிக்கத்தை நிலை நிறுத்துவதற்காகவும், பௌத்த புத்தசாசனத்திற்குரிய மேலான இடத்தை வழங்குவதற்காகவும், பௌத்தமதத்தை பாதுகாப்பதற்காவும் திருத்தம் செய்யப்பட்ட ஒரு புதிய அரசியல் அமைப்பு திருத்தமாகவே இதனை நாம் பார்க்க வேண்டியிருக்கிறது.

தமிழ் பேசும் மக்களைப் பொறுத்தவரையில் மீந்திருந்த இறுதி நம்பிக்கையையும் இத்தீர்வு யோசனைகளின் ஊடாக கொன்று போட்டாகி விட்டது. சந்திரிகா அரசினால் சிங்கள மக்களையும்; சிங்கள இனவாத அரசியல் வாதிகளையும் பௌத்த பிக்குகளையும் திருப்திப்படுத்துவதற்காக மட்டுமே இன்றைய இந்த நாடகபாணிமிக்க அரசியல் தீர்வு என்பது புரியாதவர்கள் நம்மில் இன்னும் இருப்பின் அது துரதிர்ஷ்டமே!

பிரச்சினையின் தீவிரத்தை இத்தீர்வு யோசனைகள் குறைத்து விடும் என்பது வெறும் கனவானதே! இத்தீர்வு யோசனையானது சிங்கள அரசியல்வாதிகள் மீதிருந்த அபிப்பிராயங்களை வரலாற்றின் ஊடே; இன்னும் அதிகமாக்குவதுடன் அவர்கள் எமக்கு தருவார்கள் என்று இனியும் காத்திருப்பது தமிழ்பேசும் மக்களை அடிமைக்கூடாரங்களுக்கும் கல்லறைகளுக்கும் அனுப்பி வைக்கும் நம்பிக்கையாகவே இருக்கப்போகிறது.

தமிழ் பேசும் மக்களின் அடிப்படைத் தாயார் கோட்பாடு இத்தீர்வுயோசகைளால் முற்றுமுழுதாக நிராகரிக்கப்பட்டு விட்டது. இத்தீர்வு யோசனைகள் இலங்கை - இந்திய ஒப்பந்தத்தில் உள்ளவற்றை விட மிகவும் குறைவானதாகவே உள்ளது. அண்மையில் ''இந்து' பத்திரிகைக்கு லெப்-ஜெனரல் ''கல்கட்'' அளித்துள்ள பேட்டியொன்றில் குறிப்பிட்ட அம்சமொன்றை நாம் உணர்தல் அவசியம.

சந்திரிகா முன்வைத்துள்ள அதிகாரப் பரவலாக்கல் யோசனைகளை உன்னிப்பாக அவதானித்தால்; இந்திய - இங்கை சமாதான உடன்படிக்கையில் உள்ள அதிகாரப்பரவலாக்கல் ஏற்பாடுகளை விட கூடுதலாக அதில் ஒன்றும் இல்லை. அதைவிட குறைவானதே என்று கூறலாம்!

இலங்கை - இந்திய சமாதான உடன்படிக்கை தங்களுக்கு கொடுத்த அதிகாரங்களையே எதிர்த்த பிரபாகரனும் புலிகளும்; எவ்வாறு அதனிலும் குறைந்த சந்திரிகாவின் யோசனைகளை ஏற்றுக்கொள்ள முடியும்?'' இக்கூற்றைப்பற்றி நாம் அதிகம் யோசிக்க வேண்டியவர்களாக உள்ளோம். தொடர்ந்தும் தவறுகளை சிங்கள அரசியல்வாதிகள் திருத்திக் கொள்ளாதவரை நாம் எப்படி ஐக்கிய இலங்கையை பாதுகாக்க கோஷமிடுவது? அதற்காக உழைப்பது?

மக்கள்கட்சித் தலைவர் காலம் சென்ற ''ஒஸி அயகுணசேகர'' அவர் படுகொலை செய்யப்படுவதற்கு முன் ''சரிநிகர்'' பத்திரிகைக்கு அளித்தள்ள பேட்டியொன்றில் கேள்வியொன்றுக்கு அளித்த பதில் விசேட கவனிப்புக்குரியது.

***கேள்வி:- இனப்பிரச்சினை தொடர்பாக சந்திரிகா எப்படி நடந்துகொள்வார் என எதிர்பார்க்கிறீர்கள்?***

***பதில்: சந்திரிகாவுக்கு மூன்று பாசைகள் கதைக்க தெரியும். அது தமிழ், சிங்களம் போன்ற மொழிகளல்ல. சிறுபான்மையோர் சந்தித்தால் அவர் விஜயகுமாரணதுங்கவின் மொழியில் கதைப்பார். தெற்கிலுள்ள சிங்கள பௌத்தர் சந்தித்தால் அவரது அம்மாவின் பாஷையில் கதைப்பார். இருசாராரும் சந்தித்தால் அவரது அப்பாவின் மொழியில் கதைப்பார். இவரது அப்பா செய்ததைப் போல்தான் இவரும் செய்கிறார். பதவிக்கு வருவதற்காக இவரது அப்பாவைப்போல் மக்களுக்கு வாக்குறுதி கொடுத்த இலங்கையர் எவரும் இல்லை. எல்லோருக்கும் எல்லா வாக்குறுதியும் அளித்தார். தமிழருக்கு, சிங்களவருக்கு, கத்தோலிக்கருக்கு, முதலாளிகளுக்கு, விவசாயிகளுக்கு எல்லோருக்கும் வாக்குறுதி அளித்தார். ஒன்றைக்கூட அவரால் செயல்படுத்த முடியவில்லை.***

1978ம் ஆண்டு ''இலங்கை ஜனநாயக சோஷசிச குடியரசு '' அரசியலமப்பை அதிகாரங்களை பகிர்ந்தளிப்பதற்காக மாற்றுவதற்கு இப்போது தயாராகிக் கொண்டிருக்கும் சந்திரிகாவின் அரசு 1978ம் ஆண்டின் அரசியலமைப்பில் உள்ள சிறுபான்மையினரை அடக்கியாளும் அனைத்து அம்சங்களையும் அச்சொட்டாக கொப்பி அடித்து விட்டு மிகவும் முக்கியமான திருத்தமொன்றை செய்திருக்கிறார்கள். அதுதான் ''சோஷலிஸம்'' என்ற பதத்தை எடுத்துவிட்டு ''இலங்கை ஜனநாயக குடியரசு ஆக்கியிருக்கிறார்கள். அதன் அரசியலமைப்பையே அரசியலமைப்பு'' தரப்போகிறோம் என்கிறார்கள்.

இவர்கள் நினைத்து விட்டார்கள் போலும், ''சோஷலிசம்'' என்ற பதம்தான் இனப்பிரச்சினைக்கு காரணம் என்றும் இப்பதத்தை எடுத்துவிட்டால் அனைத்தும் தீர்ந்து விடும் என்றும்

> பால்நிலவினில் கூத்தும் பாட்டும் இசைந்து வர
> நாள் பார்த்து ஏர்கால் நடாத்தி
> பயிர் வளர்த்து முற்றி சரிந்ததும்
> கூடிப்பாடி; வெட்டியனுப்பிய விளைபூமி,
> காற்றும் கடலும் கழனிப் பெருவெளியும்
> நேற்றெமக்கு சொந்தமென நின்றது!
> யானை, குதிரை அழகுரதம் என்றெல்லாம்
> வானில் போகும் பெரிய வாழ்வொன்று இருந்தது.
> பாராளும் வேந்தருக்குரிய பல்லக்கும்
> அத்தாணி மண்டபமும்; அழகுமணி வாயிலும்
> கொச்சுப்பந்தலும்; கோலமணிக் கோபுரமும்
> கொண்டிருந்த வாழ்வொன்று
> எம்மோடு கூட இருந்தது.
> ஈழத் தமிழருக்குக்கோர் இறைமை இருந்தது!
> வாழவொரு நாடு இருந்தது. நல்லாட்சி இருந்தது!
> கூடும் குருவியுமாய் கூட வாழ்ந்த சுற்றமிருந்தது
> எல்லாமே எங்கே?
> இவற்றை எப்படி இழந்தோம்?

என்று உரத்துப்பாடும் தமிழர்கள் எப்படி இத்தீர்வு யோசனைகளை ஏற்றுக் கொள்வார்கள். சிங்கள அரசியல் தலைமைகள் எப்போதும் பிழையான வழியினிலே போய்க்கொண்டிருக்கிறார்கள்.

இதுவே தொடர்கதையானால் தமிழ் பேசும் மக்கள் என்ன செய்வது?

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# தேர்தலும் மலையகத் தலைமைகளின் கடமைகளும்!

எலிப்படையூரான்

1996ம் ஆண்டும் இன்னொரு தேர்தல் ஆண்டாகப் போவதற்கான ஆரம்ப சமிக்ஞையாக வடமத்திய, சப்பிரகமுவ மாகாண சபைகளின் கலைப்பும், புதிய தேர்தலுக்கான அறிவிப்பும் வெளிவந்துள்ளது. இதனைத் தொடர்ந்து இன்னும் பல மாகாண சபைகள் கலைக்கப்படுவதற்கான பிரயத்தனமும், தேர்தல்களும் நடைபெறவாய்ப்பிருப்பதோடு, உள்ளூராட்சித் தேர்தல்களும் வருவதற்கான சாத்தியக்கூறுகளை கொண்ட ஒரு ஆண்டாக இவ்வாண்டு இருக்குமென எதிர்பார்க்கலாம்.


வரவிருக்கின்ற தேர்தல்கள் எதுவாயினும் மலையக அமைப்புகளைப் பொறுத்தவரை தீர்மானகரமானவையாக அமைய வேண்டும். ''கரணம் தவறினால் மரணமென்ற நிலையில்'' இருக்கும் மலையகத்தின் எதிர்காலத்தை நிர்மூலமாக்குவதும், நிலைநிறுத்துவதும் மலையக அமைப்புகளின் கரங்களில் தான் இருக்கிறது. தலைமைத்துவப் போட்டி, அதிகாரப்போட்டி, தொழிற்சங்கப் போட்டி எனப் பல போட்டிகளில் ஈடுபட்டிருக்கும் அமைப்புக்கள் ஒரேஒரு தடவை மலையகத்தின் எதிர்காலத்துக்காக தீர்மானமாக சிந்திக்கவும், ஒன்றிணையவும் முன்வரல்வேண்டும். தேர்தல் கால கூட்டணிகள் குறித்தான பேச்சுக்கள், அமைச்சு பதவிகள், குத்தகை பேரங்கள், சாராய விற்பனை அனுமதிப்பத்திரங்களுக்கான பேரங்கள், காணி வியாபாரங்கள் என ஏகப்பட்ட சோலிகளில் மூழ்கியிருக்கும் மலையகத்தின் தலைவர்கள் வரப்போகின்ற மாகாணசபை, உள்ளூராட்சிசபை, தேர்தல்களில் தேசிய கட்சிகளின் தொங்கு தசையாக ஒட்டிக் கொள்ளாதிருப்பின் தனித்துவமான மலையக சக்தியாக தம்மை நிலைநிறுத்துவதற்கான வாய்ப்புச்கள் இருக்கின்றன.

மலையக மக்களின் நெருக்கடிமிக்க இக்கால கட்டத்தில் அவர்களுக்கு நம்பிக்கை அளிக்கக் கூடியது கூட்டு குரலும், கூட்டுசெயற்பாடும்தான். சகல விடயங்களிலும் மலையக அமைப்புக்கள் ஒன்றிணைய முடியாவிட்டாலும் பொதுவானதும் முன்னுரிமைக்குரியதுமான அம்சங்களை இனங்கண்டு அவற்றை வென்றெடுக்கும் நோக்குடன் ஒரு நீண்ட கால கூட்டணியை உருவாக்க முடியும்.

மலையக மக்களது....

1. வாழ்வுரிமைப் பிரச்சினைமீதான அநீதிகளை நீக்குதல்.
2. சகல மக்களுக்குமான, வாக்குரிமை, பிரஜாவுரிமையை வென்றெடுத்தல்.
3. தனியார் மயப்படுத்தலை தடுத்து நிறுத்தல்.
4. மாத சம்பள கோரிக்கையை வென்றெடுத்தல்.
5. வீடமைப்பு, மின்விநியோகம் காணிப்பங்கீட்டை துரிதமாக, இலவசமாக மலையக தமிழ் மக்களுக்கு கிடைக்கச் செய்தல்.
6. கல்வி, சுகாதார தேவைப்பாடுகளை வென்றெடுத்தல்
7. போக்குவரத்து, அஞ்சல்வழி சேவைகளைப் பெற்றுக்கொடுத்தல்.
8. மலையக தோட்டத்துறை அபிவிருத்திக்கான வங்கியொன்றை நிறுவுதல்,
9. விஞ்ஞான, தொழிநுட்ப பயிற்சியை மலையக இளைஞருக்கு பெற்றுக்கொடுத்தல்.
10. நிர்வாகத்தில் உரிய பங்கை வென்றெடுத்தல்.

ஆகிய அம்சங்களின் மீது கவனத்தை குவித்து தமது பொதுவேலைத்திட்டமாக இதனைக்கொண்டு சகல மலையக அமைப்புகளும் ஒன்றிணைய வேண்டும். சகல பேச்சுவார்த்தையின் போதும், அரசாங்கத்துடனான பேரங்களின் போதும், இக்கோரிக்கைகள் முன்வைக்கப்படல் வேண்டும்.



மேலும் மலையக தமிழ் தேசியம், உருவாக்கம் பெறவும் வலுப்பெறவுமான கோரிக்கைகள் சகல மலையக அமைப்புகளினதும் அடிப்படை நிகழ்ச்சித்திட்டமாக அமைய வேண்டும்.

1. மலையக தமிழ் மக்களது தாயகம் மலையகம்.
2. மலையக தமிழ் மக்கள் தனியான தேசிய இனப்பிரிவினர்.
3. மலையக தமிழ் மக்களுக்கான அதிகாரப் பரவலாக்கல்.
4. ''மலையக தமிழ் மக்கள்''என்ற சொற்றொடர் இனைப்பெயராக மாற்றம் பெறல்.
5. அநீதியான இலங்கை, இந்திய ஒப்பந்தங்களால் பிரிந்த மக்களை இணைத்தல்.

என்றஅம்சங்கள் சகல மலையக அமைப்புகளுக்கும் இருக்கவேண்டும். இவை எல்லாவற்றுக்கும் அடிப்படையானது. ''அரை நூற்றாண்டுகால தொழிற்சங்கஅமைப்பையும், தலைமையுயையும் மாற்ற அரசியல் அமைப்பாகவும், தலைமையாகவும், வேண்டியதாகும்.

மலையக அமைப்புகள் ஒன்றுபட்ட நிலையில் பொதுவான வேலைத்திட்டத்தின் கீழ் பொதுவான கோரிக்கை அடிப்படையில் மலையக தமிழ் மக்களைசிந்திச் சிதறாமல் ஒன்றுபடுத்தி வழிநடத்த முன்வருமானால் தேசிய அரசியலில் தீர்மானகரமானதோர் சக்தியாக மலையகம் தலைநிமிர முடியும். ''தலைவர்களின் சாணக்கியம் மக்களை விலைபேசி பிழைப்பதில் அல்ல, மாறாக மக்களுக்கு என்ன தேவையோ அதனை வென்றெடுப்பதற்கு மக்களோடு சேர்ந்து போராடுவதாகவும், மக்களுக்கு வழிகாட்டுவதாகவும், இருக்க வேண்டும்''.

இன்றைய மலையக அமைப்புக்களதும் தலைமைகளதும் கையில் இருக்கின்ற மலையகத்தின் எதிர்காலம் சிதைக்கப்படுமானால் நாளைய தலைமுறையினரிடம் தம் கடமையை தவறிய மலையக தலைமைக்ள் பதில் சொல்லிஆக வேண்டியிருக்கும்.

---

## சிவனொளிபாதமலை புனித பூமிப் பிரகடனம்;
# புதிய சிங்களக் குடியேற்றங்களுக்கான சதி?


தோட்டக்காட்டான்

வீடமைப்பு, நிர்மாணத்துறையமைச்சு சிவனொளிபாதமலையமைந்திருக்கும் பகுதியையும், அதன் சூழலையும் ''புனித பூமியாக'' பிரகனப்படுத்தியிருக்கின்றது.

புராண இதிகாச கதைகளின் அடிப்படையில் சிவனொளிபாத மலை தமிழர்களின் சிவ கடவுள் கால்பதித்த பூமியாகவும், பௌத்தர்களின் புத்தபிரான் கால் பதித்த பூமியாகவும், இஸ்லாமியரின் ஆதம் (நபி) கால்பதித்த பூமியாகவும், கிறிஸ்தவரின் ஆதாம் கால் பதித்த பூமியாகவும் கருதப்பட்டு வருகின்றது. இதன் அடிப்படையில்தான் ''சிவனொளிபாதம்'', ''சிறிபாத'', ''பாவாதமலை'', ''அடம்ஸ்பீக்'' போன்ற பல்வேறு பெயர்களில் இம்மலை அழைக்கப்பட்டு வருகின்றது.

உல்லாசப் பயணிகளுக்கும், நாட்டின் பெரும்பாலான மக்களுக்கும் அது ஒரு யாத்திரைத் தளமாக இருந்து வருகின்றது. இலங்கைத் தீவின் வரலாறு இரண்டாயிரத்து ஐநூறு ஆண்டு கால, புனைகதைகளால் ஆனதும், மதவாத இனவாத அடிப்படையிலான மேல்நிலை கருத்துடையதுமான ஒரு வரலாறாக இருந்து வந்திருக்கின்றது. இதற்கு புராண இதிகாச கட்டுக்கதைகளும் சேர்ந்து வலுசேர்த்து விடுகின்றன.

சிவனொளிபாதமலை மலையக தமிழரின் தாயகமாகிய வாழ்வாதாரப் பிராந்தியத்தின் இதயப்பகுதியில் அமைந்திருக்கின்றது. வரலாறும், புராணங்களும் அம்மக்களின் இருப்பைக் கேள்விக்குள்ளாக்கும் காரணிகளுக்கு துணை போவதை அனுமதிப்பது புத்திசாலித்தனமல்ல.



இலங்கையின் ஆட்சிப்பீடத்தை அலங்கரித்து வரும் சிங்கள, பௌத்த, பேரினவாத கருத்தியலும், ஆட்சியாளர்களும், - தேசபிதாவென சிங்கள மக்களால் புகழ்மாலை சூடப்படும் டி.எஸ். சேனநாயக்கா முதல், இன்றைய ஜனாதிபதி சந்திரிகாவரை - இலங்கையின் சிறுபான்மை இனங்களின் உணர்வுகளை மதிக்காது நடந்து கொள்வது வரலாறு.

வட - கிழக்கு, மலையக தமிழ் பகுதிகளில் சுதந்திர இலங்கையின் பேரினவாத ஆட்சியாளர்கள் தூரநோக்கற்ற தமிழ் தலைவர்களின் அனுசரணையுடன் மேற்கொண்ட குடியேற்றத் திட்டங்கள் யாவும், பௌத்த மத வழிபாட்டு தளங்களை மையமாகக் கொண்டமைந்தவை ஏ்ன்பதும் (இதற்கு உதாரணமாக பலாவி, திம்புலாகல, மணலாறு குடியேற்றத்திட்டங்கள்) இவை புனித பூமியாக பிரகடனப்படுத்தப்பட்டதோடு இப்பிரதேசங்களில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களை மேற்கொண்டு வந்துள்ளது. தமிழ் மக்களின் வாழ்வாதாரப் பிரதேசங்களின் மீதான தந்திரோபாயத்தின் அடிப்படையில் அமைந்த, பௌதீக, சமூக, பொருளாதாரக் கட்டமைப்பு திட்டமிட்டவகையில் துண்டாடப்பட்டு, குடியேற்ற முற்றுகை பிரதேசங்களாக மாற்றப்பட்டுள்ளதோடு அவற்றைச் சூழவுள்ள தமிழ் மக்களின் நிலங்கள் தொடர்ச்சியாக கைப்பற்றப்பட்டு வருகின்றன.



மலையகத்தின் மத்திய, ஊவா, சப்பிரகமுவ மாகாணங்களில் செறிவாகவும், கூட்டாகவும், பெரும்பான்மையாகவும், வாழ்ந்து வந்த மலையக தமிழ் மக்கள் குடியேற்றத் திட்டங்களின் மூலம் சிதைக்கப்பட்டு துண்டாடப்பட்டுள்ளனர்.

இரு நூற்றாண்டுகளாக இந்நாட்டின் பொருளாதார முதுகெலும்பாக திகழும் மக்கள் கூட்டமொன்றுக்கு, ஒருதுண்டு நிலமோ, வீடோ, எவ்வித மானிட் மரியாதையோ இல்லாமல் அம்மக்கள் தம் தலைமுறைகளை அர்ப்பணித்து வளப்படுத்திய மண்ணை ஆக்கிரமித்து மக்களை விரட்டியடித்து வருகின்றனர் சிங்கள, பௌத்த, பேரினவாத ஆட்சியாளர்கள்.

சிவனொளிபாதமலைப் பிரதேசம் புனித பூமியாக பிரகடனப்படுத்தப்பட்டதன் நோக்கம் அப்பிரதேசத்தின் இரண்டு மாவட்டங்களில் (நுவரெலியா, இரத்தினபுரி) சிங்கள -குடியேற்றங்களை ஏற்படுத்தி அம்மாவட்டங்களில் அற்ப சொற்ப அளவில் தலையை நிமிர்த்தி நிற்கும் மலையக தமிழ் மக்களை நிர்மூலமாக்கும் சதி அடங்கியிருப்பதாகக் கருத நிரம்பவே காரணமிருக்கிறது. வரலாறு அதை பல தடவை மெய்ப்பித்துமிருக்கிறது.

சிவனொளிபாதமலை மலையக தமிழ் மக்களை அழித்தொழிக்கும், சின்னாபின்னப்படுத்தும் திட்டத்தின் தலைமை நிலையமாக மாறப்போகின்றது. இது தொடர்பாக மலையக தலைமைகளும், புத்திஜீவிகளும், இளைய தலைமுறைகளும் என்ன செய்யப் போகின்றார்கள்?

இப்போதே சிவனொளிபாதமலைக்கு யாத்திரை போகும் தமிழர்கள் பல்வேறு சோதனைக் கெடுபிடிகளையும், கேள்விக் கணைகளையும் சந்திக் வேண்டியிருக்கிறது. புனிதப் பூமியில் குடியேற்றங்கள் உருவாக்கப்பட்டு சூழல் ஆக்கிரமிக்கப்படுமானால் அங்கே தமிழ் மக்கள் தம் பிடியை இழந்தது மட்டுமன்றி, இருப்பையும் இழக்க வேண்டியிருக்கும்.



இந்நிலையில் மலையக தமிழ் தலைமைகள் முன் ஒரு வரலாற்று பணியிருக்கிறது. சிவனொளிபாதமலைத் தொடரை சூழவுள்ள பகுதிகளில் புதிய குடியேற்றங்கள் எந்த சூழ்நிலையிலும் ஏற்படுத்தப்படாத ஒரு நிலையை தோற்றுவிக்க வேண்டியதே அப்பணியாகும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



திருமலை - மூதூர்:

# கடல் பயணங்களில்

எம்.முஹம்மத் ஜவாத்



அக்கரை சேர்வதெப்போ?

ஓர் அரசு தன் பிரஜைகளின் அடிப்படைத்தேவைகளைப் பூர்த்தி செய்யும் கடப்பாட்டை அடிப்படையிலேயே உடையது. குறிப்பாக பல்லின சமூகங்கள் வாழ்கின்ற ஒரு நாட்டில் இதற்குக் கொடுக்கப்படும் முக்கியத்துவம் ஒப்பீட்டு ரீதியில் மேம்பட்டிருப்பதுவே அரசினதும், ஆட்சியாளர்களினதும் தொடர்ச்சிக்கு வகை செய்யும் எனும் உண்மை வரலாறு நெடுகிலும் விரவிக்கிடக்கிறது. சலுகைகள் ஒருபுறமிருக்க உரிமைகளாவது உரிய முறையில் மக்களைச் சென்றடைகின்றனவா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளும் விடயத்தில் அரசின் குறிப்பிடத்தக்க அவதானம் இன்றியமையாதது. தனிமனிதனினதோ அல்லது சமூகத்தினதோ அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்யும் சாதனங்கள் தம்மளவில் பரிபூரணமானவையாக மிளிர்கின்றனவா என்பதை அடிக்கடி பரிசீலனை செய்து கொள்வது குறித்த தனிமனிதனது, அல்லது சமூகத்தினது உரிமைக்கும் உணர்வுக்கும் மதிப்பளிப்பதாக அமையும்.அது மாத்திரமின்றி, நியாயமான கோரிக்கைகள் நிறைவேற்றப்படுவதும், மக்களின் பிரச்சினைக்கு உடனடியாகப் பரிகாரம் காணப்படுவதும் அரசின் மீதான மக்களின் நல்லெண்ணத்தை வளர்க்க பெரிதும் உதவுகின்றன.

**போக்குவரத்து**
***ஓர் அடிப்படைத் தேவை.***

மக்களின் அடிப்படைத் தேவைகளினுள் ஒன்றாக போக்குவரத்து விளங்குவதைக் காணலாம். சமூகங்களிடையிலான தொடர்புகள், பிரதேச ஒருமைப்பாடு, மக்கள் நல நடமாட்டம் போன்ற இன்னோரன்ன சமூகவியல் அடிப்படைகளை ஒன்றிணைக்கின்ற முக்கிய தொழிற்பாடாக போக்குவரத்து அமைந்துள்ளது. இந்த வகையில் தொடர்பான மக்களின் தேவைகளை வேண்டப்படுகின்ற அமைப்பில் பூர்த்தி செய்யும் வல்லாண்மையை குறித்த பிரதேசத்தின் புவியல் நிலையம், பௌதீகச் சூழல், சமூகக் கட்டுக்கோப்புக்கள், சாதனங்களின் தொழிற்படுதிறன் என்பன நிர்ணயிக்கின்றன. இருந்தபோதிலும், காலத்தின் தேவைகளை வென்று வாழும் விஞ்ஞானம் காலதேச வர்த்தமானங்களால் இந்த உலகின் எல்லைகளையே குறுக்கி விட்டிருக்கும் இந்த நவீன யுகத்தில் மேற்போந்த தடைகள் வெறும் கோட்பாடு ரீதியானவை மாத்திரமே என்பது புலனாகும். எனவே சாதனங்களையும், அதன் மீதான நிர்வாக முகாமைத்துவத்தையும் நெறிப்படுத்தி விடுவதே இன்றைய சூழலில் ஆள்வோரின் கடப்பாடாகவுள்ளது.

இவ்விகாரத்தில் எழும் குழறுபடிகள், ஊழல்கள், இருட்டடிப்புக்கள் என்பன குறித்த துறையின் பெறுமானத்திற்கு இழுக்கை ஏற்படுத்துவதுடன் சமூகவியல் ரீதியான பல அசௌகரியங்களையும் இககட்டுக்களையும் மக்களின் மீது கட்டவிழ்த்து விடவும் காரணமாயமைகின்றன. இந்தப் பின்னணியின் வெளிச்சத்தில் கிழக்கு மாகாணத்தில் அமைவு பெற்றுள்ள திருமலை-மூதூர் பிரதேச இணைப்பகமும், கேந்திர முக்கியத்துவம் வாய்ந்ததுமான கொட்டியாரக் குடாக் கடற் பாதையினூடாக பயணத்தின் தன்மை பற்றி பக்கச் சார்பின்றி அலசுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**திருமலை-மூதூர்**
***கடற்பயணமார்க்கமும், தேவையும்:***

திருமலை மூதூர் கடற்பாதைசுமார் 13கிலோ மீற்றர் இடைத்தூரததைக் கொண்டது. இப்பாதையே இவ்விரு பிரதேசங்களுக்குமான சுமுகமான பிரயாணத்தின் நடுநாயகமாக நின்றிலங்குகிறது. ஒப்பிட்டு நோக்கின் இக்கடல் மார்க்கப் பயணத்தை முற்றுமுழுதாகச் சார்ந்திருப்போர் மூதூர் மக்களும், அங்கு கடமை புரியும் பொலிஸ், இராணுவ உத்தியோகத்தவர்களுமாவர் என்பது ஈண்டு குறிப்பிடத்தக்கது. இவ்விரு பிரதேசங்களுக்குமான பரஸ்பர தரைவழிப்பயணத்தோடு ஒப்பிடும் போது இக்கடல் வழிப்பயணம் அதிக சௌகரியம் மிக்கதாகும். மூதூரிலிருந்து திருமலைக்கும், திருமலையிலிருந்து மூதூருக்குமான பயணத்தை மேற்கொள்ள வேண்டிய அவசியமுள்ளவர்களுள் ஏறத்தாழ அனைவருமே இவ்வழிப்பயணத்தை நம்பியிருப்பதற்கு பல நியாயங்களை கோடு கிழித்து காட்டமுடியும்.

1. இவ்விரு பிரதேசங்களுக்குமிடையேயான தரைவழிப்பயணம் ஏறத்தாழ 4 அல்லது 5 மணித்தியாலங்களை வேண்டி நிற்பதோடு மாத்திரமின்றி இவற்றுக்கிடையில் 6-8வரையிலான சோதனைச் சாவடிகளையும் கடந்து செல்ல வேண்டியிருத்தல்

2. முக்கிய அரச அலுவலகங்கள், பிரதான மருத்துவ மனைபோன்றன திருமலை நகர எல்லைக்குள் அமைவு பெற்றுள்ளமை.

3. திருமலையில் தொழில் புரியும் மூதூரைச் சேர்ந்த அரச உத்தியோகத்தர்கள் அனைவரும் திருமலை நகர எல்லைக்குள் அமைந்துள்ள அலுவலகங்களில் தொழில் புரிதல்.

4.மூதூரிலிருந்து திருமலைக்கு உயர்கல்விக்காகச் செல்லும் மாணவர்கள் அனைவரும் திருமலை நகர எல்லைக்குள் அமைந்துள்ள பாடசாலைகளில் தம் கல்வியைத் தொடர்தல்,

5.மூதூரிலிருந்து ஏனைய பிரதேசங்களுக்கான போக்குவரத்துச் சேவையின் சீரின்மை நிலை, அல்லது பற்றாக் குறை காரணமாக திருமலை நகர எல்லைக்குள் அமைந்திருக்கும் பஸ் நிலையத்தை நாடிச்செல்ல வேண்டியிருத்தல்.

இன்னோரன்ன காரணங்களால் திருமலைக்கான பயணமார்க்கமாக இக்கடல் வழியை தெரிவு செய்வதே மூதூர் வாழ்மக்களுக்கு மிகவும் சாதகமானதாகக் காணப்படுகின்றது. மூதூரின் மத்திய எல்லைக்குள் வசிக்கும் மக்களைத் தவிர்த்து பிரதேச கரையினுள் அடங்கும் இடங்களைச்சேர்ந்த மக்களினது பயணமும் இதுவே என்பதையும் இங்கு குறிப்பிடாமலிருக்க முடியாது. இவ்வகையில் மூதூரின் தெற்கு, தென்கிழக்கு எல்லைகளில் அமைந்துள்ள கிளிவெட்டி போன்ற பகுதிகளிலும், கிழக்கெல்லையில் அமைந்துள்ள சேனையூர், சம்பூர், கூனித்தீவு போன்ற தமிழ்ப்பிரதேசங்களிலும் வாழ்கின்ற பெருந்தொகையான மக்களுக்கு இப்பாதையே தஞ்சமெனக் கூறின் அது மிகையன்று. எனவே சுமார் 60,000 மக்களைக் கொண்டுள்ள இப்பிரதேசத்தின் போக்குவரத்துத் தேவையைப் பூரணமாக நிறைவு செய்யும் வகையில் சாதனங்களில் சாதகத் தன்மை நிலவுகிறதா என்பதே இங்கு எழுகின்ற வினாவாகும்.

***படகுகளும், பயணிகளும்:***

1993க்கு முற்பட்ட சில தசாப்தங்களாக இப்பயணமார்க்கத்துக்காகச் சேவையில் ஈடுபடுத்தப்பட்ட இயந்திரப்படகுகளுள் இ.போ.சபைக்குச் சொந்தமான ஒரு படகைத் தவிர ஏனையவை தனியாருக்குச் சொந்தமானவையாகும். 1993 ஏப்ரலில் 45 பேர் மாத்திரமே பயணம்செய்யப் போதுமான ஒரு சிறிய தனியார் படகு 125 பேரை ஏற்றிக் கொண்டு மூதூரை நோக்கி வந்துகொண்டிருந்த வேளை கோர விபத்துக்குள்ளானது யாவரும் அறிந்ததே. இச்சம்பவத்தைத் தொடர்ந்து தனியார் படகுகள் அனைத்தும் சேவையிலிருந்து இடைநிறுத்தப்பட்டு இ.போ.ச. வுக்குச் சொந்தமான படகு மாத்திரம் சேவையில் ஈடுபடுத்தப்பட்டது. தேவையுடன் ஒப்பிடும் போது இது மிகக் குறைவானதாகும். இதனைத் தொடர்ந்து மூதூர் பலநோக்கு கூட்டுறவுச்சங்கக்கிளையின் ஆதரவில் சுமார் 60 பேர் பயணஞ்செய்யக்கூடிய படகொன்று சேவைக்கு விடப்பட்டது. இதன் மூலமும் பற்றாக்குறையைத் தீர்க்க முடியாது போகவே அமைச்சர் அஷ்ரப்பினால் ''மகாவலி தேவி'' என்ற பெயரில் புதியபடகொன்று சேவையில் ஈடுபடுத்தப்பட்டது. இம்மூன்று படகுகளும் ஏககாலத்தில் தம்பணியை மேற்கொண்டுவந்த மிகவும் குறுகிய காலப்பகுதியில் இப்பயண மார்க்கத்தின் போக்குவரத்து நிலைமை ஓரளவு சுமுகமாகக் காணப்பட்டது. ஆனால் இந்நிலமை தொடராமைக்கான அடிப்படைக்காரணம் என்ன? என்ற வினாவுக்கான விடையே புதிராகவுள்ளது.

இம்மூன்று படகுகளும் அடிக்கடி இயந்திரக் கோளாறுக்குட்படுவதன் மர்மம் என்ன என்பதே அப்புதிராகும். இவ்வியந்திரக்கோளாறு இயல்பானதுதானா? அல்லது திட்டமிடப்பட்ட சதியா? என ஐயுறும் அளவுக்கு நிலைமை மோசமடைந்துள்ளது. இந்நிலையினால் இவ்வழிப்பயணம் சில வேளைகளில் முற்றாக ஸ்தம்பிதமடையும் நிலை கூட ஏற்படுவதுண்டு. இம்மூன்று படகுகளும் ஏககாலத்தில் சேவையில் ஈடுபட்ட சந்தர்ப்பங்கள் அரிதிதினுமரிதாகும். இவ்விடைவெளி உடனடியாக நிரப்பப்படாமையால் தற்போது போக்குவரத்து தேக்கநிலையடைந்திருப்பதைக் காணக்கூடியதாகவுள்ளது. திருமலையிலிருந்து மூதூருக்குச் செல்ல விரும்பும் ஒருவர் ஆகக் கூடியது 4மணித்தியாலங்கள் திருமலைத் துறைமுகத்தில் காத்திருந்த பின்னரே தனது பிரயாணம் உறுதியானது என்பதை உத்தரவாதப்படுத்திக் கொள்ள வேண்டியேற்படும் சந்தர்ப்பங்கள் அனந்தம். இவ்வேளையில் உள்ளே சென்று அமர எவருக்கும் அனுமதி கிடையாது. கியூவில் நின்று பொலிஸாரின் அனுமதியைப் பெற்றுக்கொண்டதன் பின்னரே உள்நுழைய முடியும். வாழ்க்கையின் எந்தக்கால கட்டத்தில் வாழ்ந்து கொண்டிருக்கும் ஒருவரும் இவ்விதிக்கு விலக்கல்ல.

சேவையில் ஈடுபடும் படகுகளில் பொலிஸார், இராணுவத்தினர் போன்றோருக்கு குறித்தளவு இருக்கைகள் பிரத்தியேகமாக [illegible] ஒரு பொலிஸார் உயரதிகாரி அல்லது இராணுவ அதிகாரியின் வருகைக்காக படகும், அதிலுள்ள நூற்றுக்கணக்கான பிரயாணிகளும் எவ்வளவு நேரமாயினும் காத்திருக்க வேண்டுமென்ற எழுதாத சட்டம் இடையிலே புகுத்தப்பட்டிருப்பது ஆரோக்கியமான அறிகுறியல்ல என்பது பலரது அபிப்பிராயமாகும். இங்கு மக்களின் விருப்பு வெறுப்புக்கள், ஓரங்கட்டப்படுவதும், அவர்களின் உணர்வுகள் காயப்படுத்தப்படுவதும் மனிதாபிமான மற்ற செயல்கள் என்பதில் கருத்து வேறுபாடிருக்க முடியாது.

கடந்த 07-11-1995 அன்று நடந்த ஒரு சம்பவத்தை இங்கு குறிப்பிடுவது பொருத்தமெனக் கருதுகிறோம்.

திருமலைத் துறைமுகத்திலிருந்து பி.ப.3-15மணியளவில் மூதூரைநோக்கிப் புறப்படவிருந்த படகு ஓர் இராணுவ அதிகாரியின் வருகைக்காக பி.ந.5-15வரை தடுத்து வைக்கபபட்டது. அப்போதும் அவ்வதிகாரி வந்து சேராததால் 5.20 மணியளவில் படகு புறப்பட்டு 6.30 மணியளவில் மூதூரை அடைந்தது. இத்தாமதத்தால் தமக்கேற்பட்ட அசௌகரியங்களையெண்ணி சில பெண்கள் மனம் நொந்தனர். கையில் குப்பி விளக்குடனாவது மூதூரிலிருந்து சுமார் 3மைல் தொலைவிலுள்ள தமது ஊரான சேனையூரைச் சென்றடைவது என்ற அத்தமிழ்ப் பெண்களினதும், யுவதிகளினதும் முடிவை அவர்களின் உரையாடல்களிலிருந்து நாம் விளங்கிக் கொண்டோம். இராணுவத்தினர் நிலை கொண்டுள்ள பயணமார்க்கத்தில் இக்கால தாமதம் அவர்களுக்கு இடையூறுகளை மேலும் அதிகரிக்குமள்ளவா? இவ்வாறான காலதாமதத்தால் படகைச் செலுத்தும் மாலுமிகள் கூட கடற்படையினரின் கடுமையான அச்சுறுத்தலுக்குள்ளாகிய சந்தர்ப்பங்களும் உண்டு.


இது ஒரு புறமிருக்க இவ்வேளைகளில் பொலிஸாரின் கெடுபிடிகள் மக்களின் உள்ளங்களில் சஞ்சலத்தை தோற்றுவிக்கின்றன. பொலிஸார் மக்களின் நண்பர்கள் என்று வெறுமனமே வேதாந்தம் பாடுவதை விட்டு விட்டு மக்களுடனான அவர்களது அணுகுமுறை எவ்வாறு அமைய வேண்டுமென அவர்களுக்குப் போதிக்கப்பட வேண்டும். மக்களிடையே எழுகின்ற, அறவே அலட்டிக் கொள்ள வேண்டிய அவசியமில்லாத மேலோட்டமான கருத்து வேறுபாடுகளை நீக்குமுகமாக அராஜகத்தை அவர்கள் மீது கட்டவிழ்த்து விடுவதை மனிதம் அங்கீகரிக்க முடியுமா?

மேற்குறித்த கடற்பயணத்தின் அசௌகரியங்களால் ஏற்படும் கல்விசார் பிரச்சினையொன்றையும் இங்கு குறிப்பிடக்கடமைப்பட்டுள்ளோம். அரசின் பல்வேறு துறைகள் சார்ந்த நிர்வாகத்துக்காக ஆட்களைச் சேர்த்துக் கொள்வதற்கான போட்டிப்பரீட்சைகள், மற்றும் நேர்முகப்பரீட்சைகள் அனைத்தும் திருமலையில் நடைபெறுவதால் மூதூரிலிருந்து குறித்து நேரத்திற்கு பரீட்சார்த்திகளும், விண்ணப்பதாரிகளும் சமூகம் தருவது இப்பிரயாணத்தின் சாதக, பாதக நிலைமைகளிலேயே தங்கியுள்ளது. ஆசிரியர்கள் வெற்றிடங்களை நிரப்புவதற்கான போட்டிப்பரீட்சை, எழுதுவினைஞர் தேர்வுப்பரீட்சை போன்றவற்றை இதற்கு உதாரணமாகக் கூறலாம்.

இவ்வாறு வாழ்க்கை தமக்கு விட்டிருக்கும் சவாலை வெற்றிகரமாக முறியடிக்க இப்பகுதி வாழ் மக்கள் மேற்கொள்ளும் பிரயத்தனங்கள் எழுத்தில் வடிக்க முடியாதன.

ஐயா, அவ்வத்துறை சார்ந்த அமைச்சர்களே!

இங்கும் ஒரு மானிடக்குழு வாழ்ந்துக் கொண்டிருக்கின்றது என்ற நிரந்தரஉண்மையை தங்களின் மேலான கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறோம். இறந்த காலத்தை எண்ணியெண்ணி ஏங்க எங்களுக்கு நாதியில்லை. எனவே, எங்களின் எதிர்காலத்துக்கு முன்னால் ஒரு விடிவெள்ளியைப் பிடித்து நிறுத்துங்கள் என்பதே எம் தாழ்மையான வேண்டுகோள்.



காத்திருப்பு

படங்கள்: எம்.கே.எம்.ஷகீப்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




நமது தமிழ் சமூகத்தில் திருமணத்திற்கு வெளியே பாலுறவு,சந்ததி மறுஉற்பத்தி என்பது தடைவிதிக்கப்பட்டுள்ளது. அத்துடன் குடும்பத்தில் பெண்பிள்ளைகள் சுமையாகவே கருதப்படுகின்றனர். இதனால் எப்படியும் பெற்றோர் பெண்ணைத் திருமணம் செய்து கொள்ளும்படி வற்புறுத்துவதுடன் சமூகமும் திருமணம் செய்வதனால் பெண்களுக்கு ஒரு அந்தஸ்தை அளிப்பது போல் மாயைத் தோற்றத்தை உருவாக்கியுள்ளது.அதனால் ஒவ்வொரு பெண்ணும் திருமணம் செய்து கொண்டால் சமூக அந்தஸ்து பெற்றுவிட்டவள் போல் உணர்கின்றாள். எனவே பெண்கள் சமூக நிர்ப்பந்தத்திற்கு உட்பட்டு குடும்ப நிறுவனத்துள் செல்கிறார்கள்.



## பெண்களும் குடும்ப உறவுகளும் - 05 (இறுதிப்பகுதி)

பம் காண்பவராகவும் உற்சாகப்படுத்துபவராகவும் இருக்க வேண்டுமேயன்றி ஒரு தலைப்பட்சமாக ஆணை பெண் பலப்படுத்துவதாக மட்டுமே இருப்பது அநீதியானதேயாகும். ஆனால் குடும்ப நிறுவனத்தினுள் ஒரு ஆணுக்கும் பெண்ணுக்கும் உள்ள உறவு அதிகார உறவாகவும், அசமத்துவ உறவாகவும் இருப்பதால் இங்கு பெண்ணின் உளவியல் தேவையும் கூட மற்றைய காரணிகள் போல் புறக்கணிக்கப்படவே செய்கிறது.

எனவே குடும்ப நிறுவனம் ஆற்றும் பாத்திரங்களை ஒட்டுமொத்தமாக மதிப்பீடு செய்வோமாயின், வீட்டுவேலைகள் என்பது ஊதியமளிக்கப்படாத, மதிப்பளிக்கப்படாத, ஒரே தன்மையான வேலைகளை திரும்பத்திரும்ப செய்வதினால் சலிப்படையச் செய்கிறது. இங்கு ஆண்கள் தமது பங்களிப்பை செய்யாததுடன் பெண்களை சுரண்டி பயனடைகிறார்கள் எனபதே உண்மையாகும். பொருளாதாரப் பாதுகாப்பு என்பது பெண்கள் முற்று முழுதாக ஆண்களிலேயே தங்கியிருப்பவராக இருக்கும் சந்தர்ப்பத்தில் குறிப்பிடத்தக்கவிடயமாகவே உள்ளது. ஆனால் பெண்கள் உயர்கல்விபெற்று வேலைவாய்ப்புக்களைப் பெற்று வருமானம் தேடுபவராக இருப்பினும் கூட ஏன் ஆண்களை விட அதிகளவு வருமானம் பெற்றுக்கொடுப்பவர்களாகவும், வீட்டு வேலை, ஊதியவேலை எனும் இரட்டைச்



கண்டுபிடிப்பவர்கள் ஆண்களாகவே உள்ளதும் ஒரு காரணம்.

அடுத்து கருத்தியல் மறுஉற்பத்தியினை நோக்கின் ''தாயைப்போல பிள்ளை நூலைப் போல் சேலை'' என்பதுபோல் ஒவ்வொரு பெண்ணும் தாம் எப்படி மத கலாசார ஆணாதிக்க கருத்தியல்களுக்கு உட்பட்டு அடக்குமுறைகளையெல்லாம் நியமம் என ஏற்று நடந்தாளோ அவற்றை அப்படியே அடுத்த சந்ததிக்கு எடுத்துச் சென்றுவிடுவாள். குழந்தைகளை சமூக இசைவாக்கம் அடையச் செய்வதில் குடும்பத்திற்கு முக்கிய பங்கு உண்டு. இங்கு இந்த சமூகக் கருத்தியல்கள் அறிவு வளர்ச்சிக்கு பொருந்தாததாக இருப்பினும் கூட பெண்கள் மீறுவதே இல்லை.

களை சுதந்திரமாக செயற்படவிடாது அடக்குமுறையும் கீழ்ப்படிவும் தொடருவதற்கே வழியமைக்கின்றது. அதே போல் உளவியல் தேவை என்பது கூட பெண்களுக்கு பாரபட்சமாகவே நடத்தப்படுகின்றது.

எனவே குடும்ப நிறுவனம் ஆற்றும் பாத்திரங்கள் முற்றும் முழுதாக பெண்களை கீழ்படிவிற்கு, இரண்டாம் பட்ச நிலைக்கு இட்டுச் செல்வதாகவே உள்ளது. அஃதே ஆண்-பெண் அசமத்துவ நிலையை பேணுவதாகவே உள்ளது. அவ்வாறெனில் பெண்கள் தொடர்ந்தும் குடும்ப நிறுவனத்திற்குள் செல்ல ஏன் விரும்புகிறார்கள்? என்ற கேள்வி எழுகின்றது. நமது தமிழ் சமூகத்தில் திருமணத்திற்கு வெளியே பாலுறவு, சந்ததி மறுஉற்பத்தி என்பது தடைவிதிக்கப்பட்டுள்ளது. அத்துடன் குடும்பத்தில் பெண்பிள்ளைகள் சுமையாகவே கருதப்படுகின்றனர். இதனால் எப்படியும் பெற்றோர் பெண்ணை திருமணம் செய்து கொள்ளும்படி வற்புறுத்துவதுடன், சமூகமும் திருமணம் செய்வதனால் பெண்களுக்கு ஒரு அந்தஸ்தை அளிப்பது போல் மாயைத்தோற்றத்தை உருவாக்கியுள்ளது. அதனால் ஒவ்வொருபெண்ணும் திருமணம் செய்து கொண்டால் சமூக அந்தஸ்து பெற்றுவிட்டவர்கள் போல் உணர்கிறார்கள். எனவே பெண்கள் சமூக நிர்ப்பந்தத்திற்கு உட்பட்டு குடும்ப நிறுவனத்துள் செல்கிறார்கள். பின்பு குடும்ப நிறுவனத்தினுள் அசமத்துவத்தை கேள்விக்குட்படுத்தாதவரை அற்ப சொற்ப சந்தோசத்திற்காக (திருமண உறவில்) குடும்ப நிறுவனத்திற்குள் செல்வது தவிர்க்க முடியாததேயாகும். கேள்விக்குட்படுத்தும் பெண்கள், குடும்ப நிறுவனம் குறித்து விழிப்புணர்வு பெறுபவர்கள் குறைந்த பட்சம் எவற்றை எதிர்பார்க்கிறார்கள்?

### முடிவுரை

குடும்ப நிறுவனம் ஆற்றும் பாத்திரங்கள் என்பது பெண்களைப் பொறுத்தவரை ஒரு கற்பனை எதிர்பார்ப்பேயன்றி வேறில்லை. தமிழ் சமூகத்தில் இன்றைய குடும்ப நிறுவனம் அதிகாரமயப்பட்ட உறவுகளைக் கொண்ட ஆணாதிக்க அடக்குமுறை நிறுவனம் என்பதே பொருத்தமாகும். இதனால் நேரடியாக உச்சப்பயனை அடையும் சுரண்டும் முதலாளி ஆண்களேயாவர். சுரண்டப்பட்டு அடக்குமுறையை அனுபவிப்பவர்கள் பெண்களேயாவர். இந்த குடும்ப நிறுவனம் ஆணாதிக்க பலன்களை பேணும் நிறுவனமாகவே செயற்படுகின்றது. இதனைப் பலப்படுத்தும் வகையில் வேறு பல நிறுவனங்கள் (மதம், கலை, இலக்கியம், அரசு, சட்டம், பாடசாலை) செயற்படுகின்றன. எனவே குடும்ப நிறுவனம் அதிகார உறவைக் கொண்ட ஆணாதிக்க நலன்களைப் பேணும் சுரண்டல் நிலையைக் கொண்ட ஓர் நிறுவனம் என்பது தெட்டத்தெளிவாக விளங்குகிறது. ஆனால் அதற்குரிய பரிகாரம் உடனடியாக குடும்ப நிறுவனத்தை சிதைப்பது என அர்த்தப்படுத்தமுடியாது.

# திருமணம்:

## பெண்களின் ஆளுமைச் சீரழிவிற்கு வழிசமைக்கிறதா?

இராசம்மா அனாமிகா

### உளவியல் தேவை பற்றியது....

மானிடனாக உயிர் பெறும் ஒவ்வொரு ஆத்மாவிற்கும் அடிப்படை தேவைகள் பல உண்டு. அவற்றில் அன்பு, காதல், அரவணைப்பு என்பனவும் கணிசமான பங்கை வகிக்கின்றன. இவற்றை அடிப்படை உளவியல் தேவையெனவும் குறிப்பிடலாம். ஒரு குழந்தைக்கு அன்பு, அரவணைப்பு ,எத்தனை அவசியமோ அதேபோல் ஒவ்வொரு மனிதனுக்கும் இவை அத்தியாவசியமானதேயாகும். குடும்ப நிறுவனத்தை எடுத்துக் கொண்டால் ஓர் ஆணோ, அல்லது பெண்ணோ வீட்டு வேலைகளிலும் அல்லது ஓர் ஊதியத்தை பெற்றுத்தரும் வேலைகளிலும் பல மணி நேரத்தை செலவிடுவதினால் களைப்பு சோர்வு, சலிப்பு அடைவது இயற்கையே. இதனால் இருவருமே ஒருவருக்கொருவர் நிலைமைகளை பரஸ்பரம் புரிந்து கொண்டு ஒருவர் மீது மற்றவர் அன்பு, ஆறுதல், அரவணைப்பு செலுத்த வேண்டும் என எதிர்ப்பார்ப்பதும் இயல்பானதே. ஆனால் குடும்ப நிறுவனத்தினுள் இந்த உளவியல் தேவை என்பது ஒருதலைப்பட்சமாக பெண் இவற்றை வழங்க வேண்டும் என்றே வலியுறுத்தப்படுகிறது. ஓர் ஆண் தான் வெளியில் சென்று தொழில் பார்ப்பதை மட்டுமே உழைப்பு எனக் கருதி தான் களைத்து வீடுவரும் போது மனைவி சிரித்த முகத்துடன் வரவேற்று அன்பு, கவனிப்பு, ஆறுதல் அளிக்க வேண்டும் என எதிர்ப்பார்க்கப்படுகிறதே தவிர ஒரு பெண் அதாவது மனைவி என்பவள் வீட்டில் ஓய்வாக இருப்பவளாகவே இவரால் கருதப்படுகிறது. ஆறுமணித்தியாலங்களோ அல்லது எட்டு மணித்தியாலங்களோ உழைப்பில் ஈடுபட்டு வீடுவரும் ஒரு ஆண் எத்தனை எதிர்பார்ப்போடு வருகிறாரோ அதே போல் 10 அல்லது 12 மணித்தியாலங்கள் வீட்டு வேலை என்ற உழைப்பில் ஓய்வின்றி ஈடுபட்டு சலிப்புற்றவளாக, தனிமைப்பட்டவளாக உணர்ந்து, வேலைச்சுமையால் களைப்புற்றவளாக அதே அன்பு, ஆறுதல், அரவணைப்பிற்காக ஏங்கிக்கொண்டிருப்பாள் என்பது ஏனோ ஆண்களால் புரிந்து கொள்ளப்படுவதேயில்லை.

ஆனால் பல வரலாற்று காவியங்களைப் பார்க்கும்போது ஒரு ஆணின் வெற்றியின் பின்னே ஒரு பெண் செயற்படுகிறாள் எனக் கூறப்படுகிறது. அஃதே ஆணின் உழைப்பினை பெண்ணே உருவாக்குகிறாள் என்றால் மிகையாகாது. எனவே காதல், அன்பு கொள்ளல் என்பதெல்லாம் ஒருவரையொருவர் (கணவன் - மனைவி) பலப்படுத்துவதா

சுமையை சுமந்தாலும் கூட ஆண்-பெண் அசமத்துவ உறவு நீடிக்கவே செய்கிறது. சமூகப்பாதுகாப்பை குடும்பநிறுவனம் அளிக்கிறது எனக் கூறப்பட்டபோதிலும் இதில் ஓரளவு உண்மையிருப்பினும் இங்கு பெண்கள் கட்டாய பாலுறவு, ஜனநாயகமின்மை, தான் விரும்பாத போது கருவை சுமப்பது, வன்முறை (அடி, உதை) எனப்பல கஷ்டங்களையும் முகங்கொடுக்க வேண்டியுள்ளது. அடுத்து மறுஉற்பத்தியை குடும்ப நிறுவனத்தில் மூன்று வகையாக நோக்கலாம். ஒன்று பெண் குடும்ப நிறுவனத்தினுள் ஆண் ஒருவரை மறுநாள் உழைப்பினை செய்வதற்கு வேண்டிய தேவைகளை செய்வதன் மூலம் உழைப்பு சக்தியை உருவாக்குகிறாள். இதனையே ஆண் பரிவர்த்தனை செய்து ஊதியத்தைப் பெறுகிறார். இங்கு பெண்ணின் உழைப்பு என்பது ஆண்களால் புரிந்து கொள்ளப்படுவதேயில்லை.

இரண்டாவது சந்ததி மறுஉற்பத்தியை நோக்கின் ஆண்-பெண் ஆகிய இருவரின் பாலியல் திருப்தி (Orgasm) யின் விளைவாகவே சந்ததி மறுஉற்பத்தி என்பது சாத்தியப்படும். ஆனால் எமது தமிழ் சமூகத்தில் பாலியல் திருப்தி என்பது பற்றி பேசுவதே அபத்தம் என அவை பேசப்படாத விடயங்களாக இருப்பதுடன் பெண்கள் பாலியல் திருப்தி என்பதை சரிவர புரிந்து கொள்ளாதவர்களாகவே உள்ளார்கள். ஆண்களோ தமது திருப்தி என்பதை முதன்மைப்படுத்துகிறார்களே தவிர பெண்ணை திருப்திப்படுத்துவதில் அக்கறை செலுத்துவதில்லை. ஆகவே குடும்பநிறுவனத்தில் எதிர்ப்பாலுறவு என்பதே அசமத்துவ உறவாகவே நீடிக்கின்றது. அத்துடன் சந்ததி மறுஉற்பத்தி என்பது முழுக்க முழுக்க ஒரு பெண்ணின் உடல்சம்பந்தப்பட்ட விடயம் ஆகையினால் அதனை தீர்மானிப்பது பெண்களின் உரிமையாகும். ஆனால் நமது தமிழ் சமூகத்தில் குடும்பநிறுவனத்தில் குழந்தை பெறுவது உட்பட பல விடயங்களை தீர்மானிப்பவர் ஆணாகவே உள்ளனர். இங்கு பெண்களுடைய உடன்பாடு, உடல்நிலை மற்றும் பல அசௌகரியங்கள் கருத்தில் எடுத்துக்கொள்ளப்படுவதில்லை. குறைந்த பட்சம் பரஸ்பரம் கலந்தாலோசிக்கலாம் எனபதற்கே இடமிருப்பதில்லை. குடும்பக்கட்டுப்பாடு என வரும் போது கூட கருத்தடை சாதனங்களை பாவிப்பவர்கள் பெண்களாகவே உள்ளார்கள். பெண்களும் அது குறித்து சர்ச்சைப்படுத்துவதேயில்லை. சமூகத்திலும் பெண்கள் பாவிக்கும் கருத்தடை சாதனங்கள் அதிகளவில் உள்ளது. கருத்தடை சாதனங்களை



சிலசமயம் தமது சௌகரியத்திற்காக ஏதும் மாற்றம் செய்ய விரும்பினாலும் சமூகத்திற்குப் பயந்து தவிர்த்துக்கொள்கிறார்கள். உதாரணம் திருமணமான பெண் சேலை கட்ட வேண்டும் என வலியுறுத்தும் அதேவேளை ஆணை வேட்டி கட்ட வேண்டும் என வலியுறுத்துவதில்லை. பெண் தனது சௌகரியத்திற்காக உடையை மாற்றினால் கலாசாம் சீரழிகிறது என்ற புலம்பல் தொடங்கிவிடும். இவ்வாறு சமூகக்கருத்தியல்கூட பெண்

துவ உறவு நீடிப்பது, சுமை என்பன மேலும் மேலும் துன்பநிலைக்கே இட்டுச்செல்கின்றன. இவற்றை நோக்கும் போது பெண்கள் திருமணத்தினால் எந்தவித பலனும், திருப்தியும் அடைவதில்லை, ஆளுமைசீரழிவிற்கே வழியமைக்கிறது என்பது சரிதானா? இன்றைய காலகட்டதில் ஒரு பெண்ணிலைவாதி சராசரி குடும்ப உறவை ஆளுமை சீரழிப்பிற்கு இட்டுச் செல்கிறது என்றே கூறுவார். ஆனால் சராசரி பெண் குடும்ப நிறுவ

இன்று குடும்ப நிறுவனத்தின் உள் அம்சங்கள் ஆண்-பெண் அசமத்துவ உறவை நீடிக்கவைப்பதாகவே உள்ளன. எனவே குடும்ப நிறுவனத்திற்குள்ளேயே தமது நியாயமான உரிமைகளை வென்றெடுக்கப் போராட வேண்டும். அதன் மூலம் குறைந்த பட்சம் ஜனநாயக உறவைப் பேணுவதற்கு முன்நின்று உழைக்க வேண்டும். குடும்ப நிறுவனத்தை ஜனநாயகப்படுத்துவது என்பது

1 வீட்டு வேலைகளில் ஆண்களின் பங்களிப்பைக் கட்டாயப்படுத்தல்.

2.ஆண்-பெண் சமத்துவ உறவாகப் பேணுதல்

3. பெண்ணை சுயமாக செயற்படுவதற்கான உரிமையை வழங்குதல்

4. சந்ததி மறுஉற்பத்தி என்பது பெண்ணின் உடல் சம்பந்தப்பட்டதனால் ஆணுடன் ஆலோசனை செய்தாலும் முடிவு எடுப்பது அவளிடமே இருக்கவேண்டும்

5. பாலியல் வற்புறுத்தல் இன்மை; பரஸ்பரம் பாலியல் திருப்திக்கு முக்கியத்துவம் கொடுத்தல்

6. வன்முறை தவிர்க்கப்படல் (அடி, உதை, நிந்தனை வார்த்தைகளைத் தவிர்த்தல்)

7. திருமணத்தில் சீதனம் எனும் சந்தை வியாபாரத்தை ஒழித்துக்கட்டுதல் 8. தாய் வழி சமுதாயம் உருவாக்கப்படல்

9. பரஸ்பரம் அன்பு காட்டல்

இத்தனை அம்சங்களும் குடும்ப நிறுவனத்தில் நடைமுறை சாத்தியப்படுமேயானால் ஒவ்வொரு பெண்ணும் சுய ஆளுமையுடனும் மகிழ்ச்சியுடனும் இருப்பதற்கு வழியமைக்கும் என்பது மறுக்க முடியாத உண்மையேயாயினும் இதனை வென்றெடுப்பது என்பது மிகச் சிரமாகவே இருக்கும் என்பதில் ஐயமில்லை. சமூக நியமனங்கள், விழுமியங்கள், கலாசார பண்பாடு என்பவை என்றுமே நிலையானவையல்ல. அவற்றிற்கு உயர்ந்த கட்ட வளர்ச்சி உண்டெனில் மாற்றம் வந்தே தீரும். எனவே பெண்கள் குடும்ப நிறுவனம் குறித்து விழிப்புணர்வை பெற்று எழுச்சியுறும் போது சமூகமாற்றம் அதாவது குடும்ப நிறுவனம் ஜனநாயகமயப்படுவது யாராலும் மறுத்துவிட முடியாத உண்மையாகும்:

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## இடம் பெயர்ந்த மக்கள் தொடர்பாக

# வன்னி: புனரா




''மிகச் சாதாரண தமிழ் மனச்சாட்சியையும் உட்புகுந்து ஒரு செயலை செய்து முடித்திருக்கிறீர்கள். உங்கள் வெற்றிக் கொடியின் கம்பு எங்கள் இதயத்தைக் குத்தியதாகவே உணர்கிறோம்''. தென்னிலங்கையில் வாழும் சிங்கள மக்களுக்கு சூரியக்கதிர் இராணுவ நடவடிக்கையின் போது யாழ்ப்பாணத்திலிருந்து வன்னிக்கு இடம் பெயர்ந்து வந்த அகதி ஒருவர் சொல்லியனுப்பிய உணர்ச்சி பூர்வமான வார்த்தைகளிவை. இவர் போன்ற நூற்றுக்கணக்கானோரைக் கிளிநொச்சி மாவட்டத்தில் கண்டு கலந்துரையாடும் சந்தர்ப்பம் எனக்கு சமீபத்தில் கிட்டியது.

ஆத்திரம், பழி வாங்கற்தேவை, சொந்த எதிர்காலத்தைப் பற்றிய அச்சம், எப்படியும் விரைவில் தீர்வு கிடைக்கும் என்ற சாகா நம்பிக்கை, என இவ்வகையில் பல்வேறு உணர்வுகளுக்குள் சிக்கித் தவிக்கும் தமிழ்மக்களை அப்பிரதேசம் எங்கும் கண்டேன். இவர்கள் நலன்புரிநிலையங்கள் எனக் கூறப்படும் அகதிமுகாம்களாக மாற்றப்பட்ட பாடசாலைக்கட்டிடங்களிலும், கிளிநொச்சி நகரில் பாதையோரங்களிலுள்ள கொட்டில்களிலும், உறவினர்கள் அல்லது தெரிந்தவர்கள் வீட்டில் ஒண்டிக் கொண்டவர்களாகவும், வந்தது வரட்டுமென்று காடு திருத்திக் குடியிருந்து நிலத்தைப் பண்படுத்துவோராகவும் தற்போது வாழ்ந்து வருகின்றனர்.

மூன்று இலட்சம் சனத்தொகையினை எண்ணிச் சிலநாட்களுக்குள் உள்வாங்கும் சக்தி வன்னிப்பிரதேசத்திற்குண்டாவென்ற சந்தேகத்தைச் சுமந்து கொண்டே என்னுடைய கிளிநொச்சி பயணம் ஆரம்பமானது. தென்னிலங்கையில் வெளியாகும் பத்திரிகைச் செய்திகள் வாயிலாகவும் மூன்றாமவர் வாய்மூலம் கேட்ட கதைகளினூடும், ஆங்காங்கே மரங்களின் கீழ் வெயிலிலும், குளிரிலும் வாடும் குடும்பங்களும் விடுதலைப்புலிகளுக்கெதிராக எறிந்து சிதறிக்கிடக்கும் கற்களுமாக வடக்கு பிரதேசம் இருக்கப்போகின்றது என்று வேறு மனதில் உருவகங்கள்.

தாண்டிக்குளம் தாண்ட முன்னமேயே சின்னச் சம்பவங்கள் மனதைச் சோர்வடையச் செய்தன. அங்கு சோதனை முகாமில் பயணிகள் வரிசையில் எனக்கு முன்னாலிருந்த பெண் சோதனை முடிவுற்ற தனது பொதிகளை அதற்குரிய ஆவணங்களை எடுக்காது அகற்றிய குற்றத்திற்காக பெண் பொலிஸ் உத்தியோகத்தரிடமிருந்து வசவுகளுடன் சேர்த்து அடியும் வாங்கினாள். பக்கத்தில் இன்னொரு பெண் தன் பை நிறையைக் கட்டிக்கொண்டு வந்த 5ம் ஆண்டு புலமைப்பரிசில் செயல் நூல்களைக் கொண்டு செல்ல அனுமதி கோரி கெஞ்சவும் ''ஒனக்குக் காதுகேக்கலயா? இதெல்லாம் எல்.டி.டி.ஈ. புஸ்தகம் திருப்பிக் கொண்டு போ'' என்று இரு சீருடைகளினால் விரட்டியடிக்கப்பட்டாள். வேறொரு பெண் அனுமதிக்கப்படும் சமையல் எண்ணெய் ஒன்றரை லீற்றருக்குப் பதிலாக இரண்டு லீற்றர் கொண்டு வந்த காரணமொன்றினாலேயே திருப்பி அனுப்பப்பட்டாள். இந்த அநியாயங்களைப் பார்த்து மனம் நொந்து கொண்டிருக்கையில் எனக்குப் பக்கத்தில் இன்னொரு சம்பவம் நிகழ்ந்தது. எங்கள் குழுவில் வந்த பெண்ணொருவர் சோப் கட்டியைக் கூட எடுத்து வரவில்லை என்று கண்டவுடன் தான் பயணிகளிடமிருந்து எடுத்து வைத்திருந்த சோப் கட்டியொன்றினை வலுக்கட்டாயமாகத் திணித்து அனுப்பினாள் இன்னொரு சீருடைப்பெண். மனிதம் இன்னும் வாழுகிறதோ என்று நொந்த மனதைத் தேற்றியபடி கிளிநொச்சிக்கு பயணத்தைத் தொடர்ந்தோம்.



சாரிசாரியாகப் பாதசாரிகளும் கைக்கிள்களும் அலைமோதும் சந்தடி மிகுந்த தெருக்களுடைய ஊராகக் கிளிநொச்சி மாறுதலடைந்திருந்தது. இந்நெருக்கடிக்குள் இடைக்கிடை லொரிகளும், ஓரிரு கனவாகனங்களும், அரசு சாரா நிறுவனங்களது வாகனங்களும் ஊடுருவி போக்குவரத்து நெரிசலை அதிகப்படுத்தின. சாப்பாட்டுக்கடைகள் நிரம்பி வழிந்தன. மசாலத்தோசை, நெய்தோசை, அப்பம், வடை என அவற்றின் காட்டிப்பலகைகள் விதம் விதமான பலகாரங்களை விளம்பரம் செய்து அமர்க்களப்படுத்தின. இந்தக் கலகலப்பும் கண்டவிடத்திலெல்லாம் மரநிழல்கள் வெறுமையாக இருந்ததும் மனதிற்கு ஆறுதலாக ஆச்சிரியமாக இருந்தது என்று தான் கூறவேண்டும்.

''நான் பல யுத்தப் பிரதேசங்களில் வேலைசெய்திருக்கின்றேன். ஆனால் இரவிரவாகக் குவிந்த அகதிகளுக்கு உணவு கொடுத்து மலசலகூடம் இறக்கி போக்குவரத்து ஏற்பாடுகளைக் கவனித்து உரிய இடங்களில் சேர்ப்பித்த விடுதலைப்புலிகளின் ஒழுங்கையும் முகாமைத்துவத்தினையும் வேறெங்கும் கண்டதில்லை.'' என என் ஆச்சரியத்திற்கு விளக்கம் அளித்தார். சர்வதேச அரசு சாரா நிறுவனமொன்றில் பணிபுரியும் வெளிநாட்டவரொருவர்.

நான் சந்தித்த அகதிகளில் பெரும்பான்மையானோர் ஏற்கெனவே யாழ் குடாநாட்டில் 1990ம் ஆண்டிலிருந்து மேற்கொள்ளப்பட்ட பல இராணுவ நடவடிக்கைகளினால் முன்னரே பல தடவை இடம்பெயர்ந்தவர்களாயிருந்தனர்.இவர்கள் இம்முறை வன்னிக்கு இடம்பெயர்ந்த அனுபவங்களைக் கேட்ட போது இடையறாத செல் வீச்சுக்களையும், சுப்பர் சொனிக் விமானக்குண்டுகளையும் பற்றி அவர்களுக்கு விவரித்து முடியவில்லை. ஆகாயத்தில் சின்னதாக விமானச்சத்தம் கேட்டவுடனேயே தமது பிள்ளைகள் அழ ஆரம்பித்து விடுவதாகத் தாய்மார் தெரிவித்தனர். பல இளம் பிள்ளைகள் பயங்கர சொப்பனங்களினால் தூக்கம் கலைந்து ஓடும் பழக்கமுள்ளவர்களாயிருக்கினறனர் என்றும் அறியமுடிகிறது.

ஒக்டோபர் 30, சகலரும் கிளம்பவேண்டுமென விடுதலைப்புலிகள் கொடுத்த அறிவித்தலைத் தொடர்ந்து இரவில் சனநெரிசலுக்கூடாக தென்மராட்சிப் பிரதேசத்திற்கு நடந்ததும், சேர்ந்ததும் துன்ப அனுபவங்களாகக் கூறப்பட்டன.

குடும்பங்கள் ஆயிரமாயிரமாக வன்னிக்கு வந்து குவிந்த போது, அநேகம் பேர் தமக்குத்தெரிந்தவர்கள், தேடிப்போய்த்தஞ்சம் அடைந்திருக்கின்றனர். இவ்வாறு தெரிந்தவர் ஒருவரும் இல்லாதவர்களும் உறவினர்களால் ஏற்கப்படாதவர்களும் விடுதலைப்புலிகளினால் வெவ்வேறு நலன்புரி நிலையங்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். மீன்பிடிச் சமூகத்தினருக்கு அவர்களுடைய கோரிக்கையின் பேரில் கரையோரமாக இருக்கும் நிலையங்கள் ஒதுக்கப்பட்டன. இளம் பிள்ளைகள் இருக்கும் குடும்பங்கள் கூடியளவு குளம், வாய்க்கால் பக்கமிருக்கும் நீர் வசதியுள்ள நிலையங்களுக்கு அனுப்பப்பட்டன.

ஆயினும் இந்த அகதிமுகாம்களில் இருந்த சனநெருக்கத்தையும் அசுத்தமான நிலைமைகளையும் கண்ணுற்ற சில நூறு குடும்பங்கள் கிளிநொச்சியிலும் பரந்தனிலும் பாதை மருங்கில் குடிசைகள் கட்டிக் குடியமர்ந்துள்ளன. இக்கொட்டில்களுக்கு நகர் உத்தியோகத்தர்களும் புலிகளின் காவல் துறையினரும் ஆட்சேபனை தெரிவித்தும், ஓரிரண்டு கொட்டில்களை நிர்ப்பந்தத்தில் அகற்றிப் பார்த்தும் கூட, அக்குடும்பங்கள் மசியவில்லை. தமிழர் புனர்வாழ்வுக் கழகம் (விடுதலைப் புலிகளின் ஒரு நிறுவனம்) இக்குடும்பங்களுக்கு குடியிருப்பு நிலையங்களைக் கொடுத்தபோதும், ஆஸ்பத்திரியும் பள்ளிக்கூடமும் கிட்ட இல்லாத காட்டுப் பகுதிகளுக்கு தாம் வரமாட்டோமென இக்குடும்பங்கள் ஒட்டு மொத்தமாக மறுத்து தொடர்ந்தும் தங்கள் இருப்பிடங்களில் வசிக்கின்றனர். வழக்கமான உலர் உணவு நிவாரணத்தைத் தவிர அகதி முகாம்களில் கிடைக்கக்கூடிய உணவல்லாத நிவாரணப் பொருட்கள் தமக்குக் கிடையாது எனத் தெரிந்திருந்தும் இக்குடும்பங்கள் தொடர்ந்தும் வெளியே தங்கியிருப்பது குறிப்பிடத்தக்கது.


இவற்றை நோக்கும் போது ஒருசிறிதளவேனும் வசதி படைத்திருந்தாலும் கூட பெரும்பான்மைக் குடும்பங்கள் அகதி முகாமைவிட்டு வெளியேறவே முயற்சிக்கின்றன என்பது தெளிவாகின்றது. ஒரு வழியுமில்லாத வறிய விவசாய மீன்பிடிக் குடும்பங்களே அகதி முகாம்களில் தங்கியிருக்கக் காணப்பட்டன. இம்முகாம்களை நிர்வகிக்கும் அமைப்புக்களில் தமிழர் புனர் வாழ்வுக் கழகம் முன்னணி வகிக்கின்றது. இந்நிலையங்களில் தற்போது சமைத்த உணவும் குடிப்பதற்கு கொதித்தாறிய நீரும் கொடுக்கின்றனர். அநேகமான இடங்களில் காலையுணவு வழங்கப்படுவதில்லை. மதிய உணவாகச் சோறும், பருப்பும், இரவு வெறும்பாணும் வழங்கப்படுகின்றன. மீனவக்குடும்பங்கள் இருக்கும் முகாம்களில் பருப்புக்குப் பதிலாக மீன் சமைக்கும் வழக்கமும் உண்டு. விரல் விட்டு எண்ணக்கூடிய முகாம்களில் மதிய உணவுக்கு சோறுடன் உண்ண காய்கறி சேர்த்த சாம்பார் கொடுக்க முடிகின்றது. மற்றும் சில சர்வதேச நிறுவனங்களில் அனுசரணையினால் பாய், உடைகள், வாளி போன்ற நிவாரணப் பொருட்கள் சகலருக்கும் வழங்கப்படுகின்றன. வாரமொருமுறை செஞ்சிலுவைச் சங்கத்தினால் சுகாதார சேவைகள் நடாத்தப்படுகின்றன.

பெண்கள் குறிப்பாக தாய்மார்கள் போதிய போசாக்குணவின்றியும், கழுவச் சவர்க்காரம் இன்றியும் கஷ்டப்படுகின்றனர். மீன் கிடைக்கும் முகாம்களைத் தவிர்ந்த மற்றைய இடங்களில் போசாக்குப் பிரச்சினை குறிப்பாக இளம் பிள்ளைகளுக்கு உருவாகும் சாத்தியக்கூறுகள் தென்படுகின்றன. அழுகின்ற குழந்தைக்கு பாலின்றி, பசிக்கின்ற சிறுவர்களை ஆறுதல் படுத்த வழியின்றித் தவிக்கும் பல

தாய்மார்களைக்
சவர்க்காரம் 60
போகின்றது. இ
வழியில்லாதவர்
ளுக்கு அழுக்கு
தவிக்கின்றனர்.
காலத்தில் உப
லாது, இருக்கும்
வழியில்லாது இ
மலேரியா, வயி
இருவியாதிகள்

பரவலாகக் கா

கர்ப்பிணித்தாய்
வலியென்று ம
வெளிக்குப்போ
குழந்தையைப்
பறிகொடுத்த ப
ஒரு முகாமில்
அகதி முகாம்க
சமூகப்பிரச்சி
பாடசாலைகளை
தற்கு ங்கு



குடியேற்றத்தி
வந்திருப்பதாக
கழகம் கூறியு
குடியேற்றப்ப
அண்டிய கா
குடும்பத்திற்கு
ஏக்கர் காணி
கட்ட கம்பு தடி
கின்றது. இம்
குறைந்தது 30
வது திறக்கத்
முகாம்களை
உற்சாகத்தில்
ஈடுபட்டிருந்த
இருந்த போதி
இக்குடியேற்ற
ஒழுங்குபடுத்
புனர்வாழ்வுக்
வத் திறமைக
இம்முறை மா
மார்ச் மாதம்
தண்ணீர் பஞ்ச
அச்சமும் மே

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அறுவடை போதாததால் உணவுத்தட்டுப்பாடும் கூடிய சீக்கிரம் ஏற்படக்கூடும். இந்நிலைமைகளில் நீர்ப்பாசன வசதிகளில்லாத இக்காணிகளில் விதை, பசளை வளங்களுமில்லாவிட்டால் என்னவிதமான தொழில் வாய்ப்புக்கள் இருக்கப் போகின்றது என்பது கேள்விக்குரியது. பசளை அரசாங்கத்தினால் தடைசெய்யப்பட்டிருக்கின்றது. கிணறுகளை அமைக்கப் பொருட்களைத் தருவித்துத் தாருங்கள்,


திரட்டும் பிரசாரத்தில் புலிகள் கையாண்ட யுக்திகளும் மிகுந்த விமர்சனங்களுக்குள்ளாகி இருக்கின்றன. தாம் சென்ற விடமெல்லாம் தொடரப்பட்டு வற்புறுத்தப்பட்டதை மாணவர்கள் கூறினார்கள். பாதை நடுவில் ஓட்டிக்கொண்டு போகும் சைக்கிளினால் இடித்து நிறுத்தி, இயக்கத்தில் சேராது இருப்பவர்களுக்கு மானம், வெட்கம், இத்தியாதிகளில்

## ன்னியிலிருந்து ஒரு றிப்போர்ட்

# பொழுதுகள்

அதற்குப்பணத்தையும் நாங்களே கொடுக்கின்றோம், பிறகு ஒரு இரவிலேயே இத்தனை மக்களுக்கும் தண்ணீர் எடுத்துக்கொடுப்போம் என்று சவால் விடுகின்றது தமிழர் புனர்வாழ்வுக்கழகம். ஆனால் அரசு பாறையாக இறுகிய நிலையில் இது சாத்தியமானதொன்றாகத் தெரியவில்லை. மீனவர்களுக்கும் கூட சனநெருக்கம் கூடியதால் மீன்பிடிக்கக் கூடியபகுதி மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. ஏற்கெனவே கையிருப்பிலிருந்த

என்னென்ன இருக்கின்றன என்பது பற்றியும் ஆராய்ச்சி நடத்தப்பட்ட சம்பவங்களும் விவரிக்கப்பட்டன. பல இடங்களில் டியூசன் வகுப்புகளும் நிறுத்தப்பட்டிருந்தன. இதனை ஆட்சேபித்தபோது நாடே எரியும் போது உங்களுக்குப் படிப்பெதற்கு எனக் கேட்டிருக்கிறார்கள் புலிகள். இலங்கையின் இனப்போரில் முன்னெப்போதுமில்லாதவாறு அரசியலாக மாற்றப்பட்ட இடப்பெயர்வுகளாக யாழ்ப்பாண மக்களின்



.....................
.....................
எல்லா
இராக்கால நேரமும்
எழும்பி எழும்பி
ஆண்டவரே என்று தோப்புக்கரணம்
- போட்டேன்.
வயல்வெளி முருகன் கோயிலுக்கு
50 சதம் நினைத்தேன்
போர்வையைப் போர்த்திக்கொண்டு
போர்வை இழுபட இழுபட
பயத்தோடு திரிந்தேன்
முற்றத்தில் வெகுநேரம்
ஒரு ஷெல் குத்தும் சத்தத்தை
- எதிர்பார்த்துக் கொண்டு
அலைந்தேன்
.....................
.....................

நட்சத்திரன் செவ்விந்தியன்
(வசந்தம் 91 – கவிதைத்தொகுப்பிலிருந்து)

காசைச் செலவழித்து, இருக்கும் நகைகளை விற்றுச் செலவழித்து வாழ்க்கையைக் கொண்டிழுத்த மக்கள் தம் ஜீவனோபாயத்தை தேடுவதற்கு காத்திரமான உதவிகளை எதிர்பார்த்துக் காத்திருக்கின்றனர்.
வடபகுதியினை விட்டு வெளியேறுபவர்களுக்கு அனுமதிச்சீட்டு வழங்க விடுதலைப்புலிகள் கையாளும் நடவடிக்கைகளினால் புலிகள் மக்களைப் பெருமளவு பகைத்துள்ளனர். அவர்கள் விதித்திருக்கும் வயதுக்கட்டுப்பாட்டெல்லைக்குள் இருப்பவர்கள் வெளியேறவே முடியாத நிலைமையும், ஒரு குடும்பத்தில் குறைந்தது இரண்டு அங்கத்தவர்களாவது வடக்கில் தங்கியிருத்தல் வேண்டும் என்ற நிபந்தனையும் இளைஞர்கள் மத்தியில் விரக்தியையும் குடும்பப் பிரிவினைகளின் சோகங்களையுமே உருவாக்கியிருக்கின்றது. இதே போன்று கடந்த மாதத்தில் புதியவர்களை இயக்கத்திற்கு

இன்றைய இடம் பெயர்வு இருந்தது. விடுதலைப்புலிகள் 1995 யுத்தத்தினை மீள ஆரம்பித்ததைப் பற்றிக் கேட்டபோது அந்தத் தீர்மானத்தினை நியாயப்படுத்தும் வகையிலேயே பலரது கருத்துக்கள் அமைந்தன. அரசு நேர்மையாக நடக்கவில்லை, கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றவில்லை யெனவே சாடினர். எங்கும் சந்திரிகாவுக்கு (ஜனாதிபதி) வசவுகளே விழுந்தன. ''புலிகளைக் கொல்ல வேண்டுமென்று எங்களையெல்லாம் ஷெல்லடித்துக் கொன்ற ஜனாதிபதி இனி புலிகளை வேரோடு ஒழிக்கிறோம் என்று கூறி எங்கள் கருவிலிருக்கும் சிசுக்களையும் கொல்லத்திட்டம் தீட்டுவார்'' என ஒரு வயோதிபப் பெண் மனமெரிந்து கூறினார். இராணுவத்தினை யாழ்ப்பாணத்திலிருந்து அகற்றினால் தாம் திரும்ப முடியும் என்னும் கருத்தை ஒரு சிலரைத் தவிர எல்லோருமே ஒருமுகமாகத்



தெரிவித்தனர். அதிலும் பலர் ''எங்களுக்குச் சிங்கள இராணுவத்துடன் கூட அவ்வளவு பிரச்சினையில்லை, அவர்களுடன் வரும் மற்றைய தமிழ் ஆயுதக்குழுக்களுக்குத்தான் பயம்'' என்று கூறியிருக்கின்றனர். இதனை ஒருவர் மேலும் விளக்கையில், தான் புளொட், டெலோ, ஈ.பி.ஆர்.எல்.எப். போன்ற குழுக்கள் காலத்திலும் இருந்து பார்த்ததைக் கூறினார். ''அப்ப எத்தின அக்கிரமங்கள் நடக்கும். கேட்டால் ஆளையாள் சாட்டுவினை.
புலிகளின்ட நிர்வாகம் வந்த பிறகுதான் என்ட மகள் பயமில்லாமல் நடுராத்திரியில் தனிய தெருவில போகக்கூடிய பாதுகாப்பு எங்களுக்குக் கிடைச்சிருக்குது'' என்றார். இன்னும் சில பெண்கள் சூரியக்கதிர் நடவடிக்கையின் ஆரம்பக்கட்டத்தில் யுத்தப்பிரதேசத்தில் இருந்து ஓடிவந்த மாடுகளின் கழுத்தில் அட்டைகள் தொங்கவிடப்பட்டு ''மாப்பிள்ளைகள் வருகிறார்கள் உங்கள் அம்மாமாரையும் அக்காமாரையும் (தயாராக) வைத்திருங்கள்'' என அதில் தமிழில் எழுதி அனுப்பியிருந்ததாகவும் கூறினார்கள். இந்த எழுத்து வேலை தமிழ் ஆயுதக் குழுக்களினுடையது என்பது அவர்கள் முடிவு.
சகல தரப்பு மக்களும் அரசியல் பற்றிய கலந்துரையாடலில் மிக உற்சாகமாகப் பங்குகொண்டனர். ஆயினும், இப்பிரச்சினையில் பொதுமக்கள் பகடைக்காய்களாக உபயோகிக்கப்படுகிறார்களா? இல்லையா? அல்லது வன்னியில் இடம்பெறும் மாற்றுக்குடியேற்றத்திட்டங்கள் திறந்த முறையில் விவாதிக்கப்பட்டு மக்களின் அபிப்பிராயங்களைப்பெற்றுக் கொண்டு நடத்த வேண்டுமா இல்லையா என்பன போன்ற இன்னோரன்ன விடயங்களில் கேள்விகள் எழுப்பப்படாதது துரதிர்ஷ்டமே. விடுதலைப்புலிகளுக்குப் பெருநிலப்பரப்பில் வேறுதிட்டங்கள் உள்ளன என இங்கொன்றும் அங்கொன்றுமாய் கதைகள் விழுந்ததே தவிர யாருமே இதனைப் பகிரங்கமாக விவாதிக்கவில்லை. மக்கள் சார்பில் விடுதலைப்புலிகளின் தலைவர் தீர்மானங்கள் எடுப்பது என்ன வரையறைகளுக்குள் இருக்க வேண்டும் என்பதைப்பற்றி எங்கேயும் பேசவில்லை. முஸ்லிம் சமூகத்தினர் வடபகுதியிலிருந்து வெளியேற்றப்பட்டபோது மற்றவர்கள் ஏன் வாளாவிருந்தனர் என்பதன் விளக்கம் இதிலிருந்துதான் புரிந்தது.
இலங்கையின் இந்நூற்றாண்டின் ஆரம்பத்திலிருந்தே பல்வேறு ஜனநாயகப் போராட்டங்களை தம்மகத்திலிருந்து வெளிக்கொணர்வ

தமிழ் மக்கள். காலனித்துவம், சிறுபான்மைத்தமிழர் ஒடுக்குமுறை, சுயநிர்ணய உரிமை நிராகரிப்பு எனப் பல அநீதிகளுக்கு எதிராகக் குரல் கொடுத்தவர்கள் நம்மவர் மத்தியில் இருந்திருக்கின்றனர். இன்று அந்தக் குரல் வலுவிழந்து விட்டதென்றால் அதற்கும் ஒரு வரலாற்றுப் பின்னணி இருக்கத்தான் வேண்டும்.
பேரினவாதத்தினை எதிர்க்கும் ஜனநாயகத்துக்கான போராட்டத்தில், ஆயுதம் ஏந்த நேரிட்டதற்குக்காரணம் இன்றும் ''தமிழர்களுக்கு என்னதான் பிரச்சினை?'' என்று கேட்கும் அளவுக்கு முதிர்ச்சியடையாத, அரசியல் சிந்தனை கூர்மைப்படுத்தப்படாத எமது சமூகமே. குட்டி பூர்ஷுவா வர்க்கத்தினரால் முன்னெடுக்கப்பட்ட இப்போராட்டமானது ஆயுதந் தூக்கியவுடன் தனது வர்க்கக்குணாம்சமான உரிமை மீறல்களையும் வெளிக்காட்டத் தொடங்கிவிட்டது. சிங்கள அரசுடன் இருந்த முரண்பாடு முதன்மையானதினால் அனைத்து உரிமை மீறல்களும் சகல மட்டத்தாராலும் சகிக்கப்பட்டன. இந்த வரலாற்றுப் போக்கில் மக்கள் போராட்டங்களின் பங்கு என்ன என்பது சீர்தூக்கிப்பார்க்கப்படவில்லை. இதுவும் தவிர்க்க முடியாததொன்றே ஆயுதங்களினால் மாத்திரம் எவ்வளவு தூரம் தங்கள் போராட்டத்தை முன்னெடுக்கலாம் என்று கண்கூடாகப் புரிந்து கொண்ட பின்புதான் மக்கள் வேறுவழியை நாடுவர். ஒரு இலட்சம் மக்களின் இறப்பு = தமிழ் ஈழம் என்ற எளிய சமன்பாடு பொய்க்கும் பட்சத்தில்தான் யதார்த்த உலகுக்கு மீள அழைத்து வரப்படுவர்.
இந்த விதத்தில் சூரியக்கதிர் நடவடிக்கை எமக்கு நன்மைகள் கொண்டு வந்திருக்கின்றது என்றே

கூறலாம். தமிழர்களின் முழுக்கட்டுப்பாட்டுக்குள்ளும் இருந்த பிரதேசம் கைப்பற்றப்பட்டு விட்டது.
விடுலைப்புலிகளின் இராணுவ நடவடிக்கை இலங்கை அரசினை ஜனநாயகப்படுத்தும் போக்கில் முக்கிய பங்கினை ஆற்றியிருக்கின்றன என்ற போதிலும், இனி இங்கிருந்து எங்கே செல்லப் போகின்றோம் என்ற கேள்வி, அவர்கள் வாய்திறந்து கூறாவிட்டாலும் கூட, மக்களுக்குள் பூதாகாரமாக எழுந்துள்ளது என்பது நிச்சயம்.
கேள்விகள் எழுகின்றனவெனில் அது நல்ல-சகுனமே. ஒரு ஜனநாயகப் போராட்டத்தினை முன்னெடுக்கக் கூடிய பாரம்பரியம், கூட்டு அனுபவம், உணர்வு, உறுதி, இவையெல்லாம் ஒருங்கே தமிழ் பேசும் மக்களுக்கு இருக்கின்றன; அதனை நான் கண்கூடாகப் பல சந்தர்ப்பங்களில் பார்த்திருக்கின்றேன். இவையெல்லாவற்றிலும் மேலாக வர்க்க பேதமின்றி, சாதிவேற்றுமையின்றி சகலரும் சொல்லொண்ணாத் துயரத்தில் மூழ்கி அனுபவித்திருக்கின்றனர். That Collective Suffering is itself a Finding Force. ஒரு வரலாற்று திருப்புமுனையாகும் சாத்தியக்கூறுகள் தோன்றும் இக்காலகட்டத்தில், இதைப் புரிந்து கொள்ளும் தலைமைத்துவமொன்றே மக்கள் போராட்டமொன்றினைப் பிரவகித்து ஓடவைக்க முடியும். தமிழ் பேசும் மக்களின் உரிமைகளும் இதற்கூடாகத்தான் அடையப்படக்கூடும். விடுதலைப் புலிகள் இந்தத் தலைமைத்துவத்தினை ஏற்கத் தயாராக உள்ளனரா?

சாந்தி சச்சிதானந்தம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# மீண்டும் வடக்கு நோக்கி: பிரதேச வேறுபாட்டிற்கு தூபமிடுகிறது!

திருகோணமலை புனித மரியாள் கல்லூரியின் மாணவியான சிவசுப்பிரமணியம் மாதுமை எழுதிய ''மீண்டும் வடக்கு நோக்கி...'' என்ற சிறுகதையை வடக்கு, கிழக்கு மாகாண கல்வித்திணைக்கள பிரதி மாகாணக் கல்விப்பணிப்பாளர் ச. அருளானந்தம் அவர்கள் வெளியிட்ட ''பார்த்தேன்'' நூலில் படித்தேன். முதலில் என்னுள் எழுந்த கேள்வி, இந்தக் கதை என்ன அடிப்படையில் பரிசுக்குத் தெரியப்பட்டது.

கதைகளிலோ, வேறு படைப்புகளிலோ யதார்த்தங்களைப் புகுத்துவது என்பது வேறு. படைப்புக்கள் மூலமாக ஊரையோ, இனத்தையோ, மொழியையோ கூறு போடுவதாக அமைத்தல் வேறு. இந்த இரண்டிற்கும் வித்தியாசம் புரியாமல், இச்சிறுகதையில் உண்மைகள் தான் எழுதப்பட்டுள்ளன என்று பெருமைப்படுகிறவர்களும் நம்மத்தியில் இருக்கத்தான் செய்கிறார்கள்.

பிரிவினை உணர்ச்சியைத் தூண்டுவதாக அமைந்த இச்சிறுகதைக்கும் இது போன்ற வேறு படைப்புக்களுக்கும் போட்டிகளில் முன்னுரிமை வழங்குவதன் மூலமாக இந்த முரண்பாடான கருத்துக்களை நடுவர்களும் வரவேற்றுள்ளார்கள் என்றே நாம் கருத வேண்டும். யாழ்ப்பாணத்தமிழர்,,மட்டக்களப்புத்தமிழர், திருகோணமலைத்தமிழர் என்று கூறுபோட்டுக் காட்டுவது மட்டுமல்லாமல், யாழ்ப்பாணத்தமிழும், தமிழர்களும், அவர்தம்பண்பாடும், ஒழுக்கமும், கல்வியும் உயர்ந்ததெனவும், ஈழத்தின் மற்றைய பகுதிகளில் வாழும் தமிழ் பேசும் மக்கள் சகலவற்றிலும் தம்மைவிடத் தாழ்ந்தவர்கள் என்றும் யாழிலிருந்து இங்கு வந்த பலர் கேலியும், கிண்டலும் செய்வது தொடர்ந்து கொண்டிருக்கிற வேளையில், ''மீண்டும் வடக்கு நோக்கி...'' என்ற சிறுகதைக்கு முதலிடம் கொடுத்தது பிரிவினை உணர்ச்சிக்கு மேலும் தூபமிடுவதாகவே அமைந்துள்ளது.

இந்தக் கதையில் வருகின்ற சில முரண்பாடான வரிகளைச் சுட்டிக்காட்ட வேண்டிய கடப்பாடும், சில உண்மைகளை வெளியிடும்நிலையும் திருகோணமலை வாழ் புத்திஜீவிகளுக்குக் கட்டாயமாக உள்ளது. கதையில் வருகின்ற சம்பவங்கள் மனித இனத்திற்கு பொதுவானவையே அன்றி, திருகோணமலை இளைஞர்களுக்கும், யுவதிகளுக்கும் மட்டும் பொருத்தமானவையல்ல. காதலும், களியாட்டமும், இன்பமும், துன்பமும், பொறாமையும், எரிச்சலும், இன்னும் கடவுள் படைத்த அனைத்து உணர்ச்சிகளுக்கும் மனிதன் அடிமைதான். இதில் யாழ்ப்பாணத்து மக்கள் ஞானிகளாகவும், திகோணமலை மக்கள் கூத்தாடிகளாகவும் இருக்கமுடியாது.

ஒரு நாட்டில் வாழும் ஒரு மொழி பேசும் மக்களிடையே போட்டியும், பொறாமையும், பிரிவினையும், உணர்ச்சியும் இருக்கின்ற போது, அந்நிய இனம் நம்மோடு கைகுலுக்கும் என்று எப்படி நாம் எதிர்பார்க்க முடியும்? இந்தச்சிறுகதையின் பலஇடங்களில் திருகோணமலை இளைஞர், யுவதிகளைப்பற்றி மிகவும் கீழ்த்தரமாகவும், கேவலமாகவும், எழுதப்பட்டிருக்கிறது. அதுதவிர கதாசிரியையின் ஏக்கப் பெருமூச்சும் சில இடங்களில் தொனிக்கிறது.

உதாரணமாக....

''........யுத்தத்தின் பயங்கரமே தவிர என்ன உல்லாச வாழ்க்கை அங்கே இருக்கிறது...?''

என்ற வரிகள் மூலமாக யாழில் நடக்கிற யுத்தத்தை மறைமுகமாக வெறுக்கிறார் மாதுமை. அதனால் எந்த இன்பத்தையும் அனுபவிக்கமுடியாமையை பெருமூச்சாய் இந்தச் சிறுகதை மூலமாக வெளிப்படுத்துகிறார். கிழக்கு மாகாணம் மட்டுமென்ன அதில் இருந்து தப்பித்துக்கொண்டுள்ளதா?

தற்கால யுத்த சூழ்நிலையால், புலம்பெயர்ந்து அல்லல் படுகிற தமிழினத்தின் இனச்சீர்குலைவு, கலாசார மாற்றம், ஒற்றுமையின்மை, பதவிமோகம், சகோதரப்படுகொலை இவற்றை மையமாகக் கொண்டு சீர்திருத்த நோக்குடனான படைப்புக்களை படைப்பாளிகள் வெளிக்கொணர்வார்களேயானால், அவை வரவேற்புக்குரியதும், பாராட்டப்பட வேண்டியதுமாகும்.

மாறாக, பிரிவினை உணர்ச்சிகளையும், ஆத்திரமூட்டும், துவேஷ உணர்ச்சிகளையும் தூண்டும், உண்மைக்குப்புறம்பான கருத்துக்களைக் கூறுவது, அதுவும் அங்கே வாழ முடியாது தஞ்சம் புகுந்த இடத்தை தரக்குறைவாகப் பேசுவதும், எழுதுவதும், எப்படித்தகும்? இதனை திருகோணமலை இளைஞர்கள், யுவதிகள் சார்பாக நான் வன்மையாகக் கண்டிக்கின்றேன்.

இனிமேலும் இதுபோன்ற ஆக்கங்களைச் சரிவரக் கணிப்பிடாமல் முகஸ்துதிக்காகவோ, ஆதரவுக்காகவோ, முதலிடம் கொடுத்து ஊக்குவிப்பதை வடக்கு, கிழக்கு மாகாண கல்விக் கல்சார அமைச்சு நிறுத்திக் கொள்ள வேண்டும்.

ப்ரியா
திருகோணமலை.



''மீண்டும் வடக்கு நோக்கி...'' பலரின் பார்வையைத் திருப்பியதனால் சர்ச்சைக்குள்ளான ஓர் எழுத்தாளரின் கதை பற்றியும் அதனால் தமது மனம் புண்பட்டு விட்டதாகக் கொதித்தெழுந்த சில தமிழபிமானிகளின் குமுறல் பற்றியுமான சில குறிப்புகளைத் தங்கள் சரிநிகர் 86வது இதழில் காண நேர்ந்தது. அது சம்பந்தமாக என் மனதில் எழுந்த நெருடலாய் இதை எழுதுகிறேன். அக்கதையை எழுதிய மாணவியையோ அல்லது அவரது பூர்வீகம் பற்றியோ நான் யாதும் அறியேன் என்று இத்தால் அனைவருக்கும் உறுதி கூறிக் கொண்டு தொடர்கிறேன்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த அரச ஊழியர் கந்தசாமி இடமாற்றம் பெற்று தனது மனைவி மகன் சகிதம் திருகோணமலைக்கு வருகிறார். வற்புறுத்தி அழைத்துவரப்படும் அவர்களின் ஒரே மகன் ரவிக்கு, புது இடமும், புதியவர்களின் சூழலும் வெருட்சியை ஏற்படுத்துகின்றன. ஆரம்பத்தில் உடன் மாணவர்களுடன் இசைவாக்கமடைவதில் அவன் சிரமப்படுகின்றான். மூன்று வருடங்கள் உருண்டோட கந்தசாமிக்கு மீண்டும் யாழ்ப்பாணத்துக்கு இட மாற்றம் கிடைக்கிறது. இதற்கிடையில் ரவியோ தலைகீழாக மாறிவிடுகிறான். க.பொ.த. சாதாரண வகுப்பில் படிக்கும் அவன் நண்பர்களுடன் ஊர் சுற்றுவதும் அரட்டை அடிப்பதும், பெண்களைக் கிண்டல் செய்வதுமான உல்லாச வாழ்க்கையை விட்டுவிட்டுச் செல்ல மனமின்றிப் பிடிவாதம் பிடிக்கிறான். அவனை எதிர்காலத்தில் ஒரு நல்ல வைத்தியனாகக் காண விரும்பும் கந்தசாமி மீண்டும் அவன் விருப்பத்திற்கு மாறாக வடக்கு நோக்கி - கூடவே அழைத்துச் சென்றுவிடுகிறார். இதுதான் கதையின் சாராம்சம்.

கதையில் ரவியின் முன்னைய மனநிலைக்கும் பின்னைய போக்குக்குமிடையிற் முரண்பாட்டைக் கூர்மைப்படுத்திக் காட்டுவதற்காக அவ்வூர் மாணவ மாணவியர் பற்றிய சில அவதானிப்புக்கள் கதாசிரியையால் எடுத்துக் காட்டப்பட்டுள்ளன, அவ்வளவுதான். கதை நிகழும் களமாக திருகோணமலையைத் தெரிந்ததுதான் இங்கு பிரச்சினையாகப் போய்விட்டது. அது கொழும்பாகவோ, மட்டக்களப்பாகவோ அல்லது தமிழர்கள் செறிவாக வாழும் வேறொரு பிரதேசமாகவோ இருந்திருந்தால் கூட சம்பவக் கோவைகளிலோ, ரவியின் நினைவோட்டமாக அமைந்துவிட்ட வசன அமைப்பிலோ எவ்வித மாற்றமும் இருந்திருக்கப் போவதில்லை.

குறிப்பிட்ட பாடசாலை இந்துக் கல்லூரியாக இருந்தால் என்ன வேறெந்தப் பாடசாலையாக இருந்தால் என்ன புதிதாக வரும் ஒரு மாணவனை - அவன் யாழ்ப்பாணத்தில் இருந்து வந்தாலும் சரி, நிலாவெளியிலிருந்து வந்தாலும் சரி பழைய மாணவர்கள் உடனடியாக அங்கீகரித்து விடுவதில்லை. அந்நியப்படுத்திப் பார்ப்பதே அவர்கள் [illegible]

வந்த முன்னைய பாடசாலை நண்பர்களோடு ஒப்பிட்டு, இவர்களைப் பொறாமையும், எரிச்சலுமுடையவர்களாகக் காண்பதும், 'வேறு ஊரவனுக்கு (அது யாழ்ப்பாணத்தவனுக்கு என்று மட்டுமல்ல) நாமேன் உதவுவது?' என எண்ணுபவர்களாகக் கருதுவதும் இயல்பே. 'இதில் பிரதேசவாதம் எதுமில்லை. இதே வெளியீட்டில் வந்துள்ள மற்றொரு பரிசுக் கதையான 'விதி வரைந்த பாதையிலே' கூட யாழ்ப்பாணத்திலிருந்து துரத்தப்பட்டு புது இடத்தில் குடி புகும் ஒரு முஸ்லிம் சிறுவன் ' புதிய பாடசாலை மாணவர்கள் தன் கூட ஒழுங்காகக் கதைப்பதில்லை என்றும் தன்னை ஏதோ பார்க்கக் கூடாத பொருளாகப் பார்ப்பதாவும் கூறுகிறான்.

மின்சாரமில்லாத ஒரு இருட் பூமியில் - பங்கருக்குள் இருந்து கூடப் படிக்கவேண்டி நிலைமையுள்ள ஒரு இக்கட்டான சூழ்நிலையில், பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் படித்து முன்னேறும் தமிழ் மாணவர்களுடன் ஊசாடிய ஒரு மாணவனுக்கு - உல்லாசமாக ஊர் சுற்றும் பெண்களுக்குப் பின்னால் பகிடி விட்டுக் கொண்டு திரியும், படிப்பை இரண்டாம் பட்சமாகக் கருதி உதாசீனம் செய்யும் மாணவர்களைப் பார்க்கும் போது எரிச்சலும் கோபமும் ஏற்படுகின்றது. ஆனால் காலவோட்டத்தில் அவனும் அவர்களுடன் எடுபட்டுப் போய், ஒரு காலத்தில் தான் வெறுத்தவைகளையே பின்னர் தானும் நாடுபவனாக - குடிக்கு எதிராகப் பிரசாரம் செய்பவனே அதற்கு அடிமைப்பட்டு விடுவது போல - மாறி விடுவதுதான் ஆசிரியர் காட்ட முனையும் அவலம்.

ஒரு மாணவனது மாற்றத்தில் சூழலின் மாற்

செய்வது?' என விசாரப்படும்,

'இங்கு இவ்வளவு சுதந்திரம் இருந்தும் பல்கலைக்கழகத்துக்கு செல்பவர்கள் ஓரிருவரே' எனப் பொறுப்புணர்ச்சியுடன் பரிதாபப்படும் ஆசிரியையின் எழுத்துக்களில் பிரதேசவாதமா தொனிக்கிறது?

'கற்பகத்திற்கோ திருகோணமலை ஊரை விட்டுப் போவதற்கே மனமில்லை இப்போது....' 'ரவிக்கோ நண்பர்கள் அரட்டை

மென்பதும் சீரிய நோக்குடன் எழுதிய எழுத்தாளரின் தார்மீக உணர்வைப் பாராட்டா விட்டாலும் பரவாயில்லை, அவரின் அடிமுடிதேடி அவர் ஒரு 'யாழ்ப்பாணப் பெட்டை' எனக்கண்டுபிடித்து அதனாலேயே அவரை ஒரு பிரதேச வாதியாக இனங்காட்ட முனைவது எத்தனை கபடமானது?

யாரிந்தக் கபட நாடக சூத்திரதாரிகள்? பௌர்ணமி விழாவில் ஆண்-பெண் வித்தி

## மீண்டும் வடக்கு நோக்கி: கதைக்கருவும் பகைப்புலமும்

### நேர்மையானது நல்லதை எடுத்துரைப்பது

றத்தின் தாக்கமானது எத்தகைய பங்கு வகிக்கிறதென்பதை உணர்த்த விழைவதே கதாசிரியையின் அடிப்படை நோக்கம். துரதிர்ஷ்டவசமாக எழுதியவர் யாழ்ப்பாணத்தவராக இருந்து தொலைத்ததும் கதையை நகர்த்த அவர் தெரிந்தெடுத்த களம் திருகோணமலையாகப் போனதும், கண்ணுக்குள் எண்ணெய் விட்டுக்கொண்டு பிரதேச வாதத்தைத் தேடித் தூக்கிப் பிடித்துத் துள்ளிக்குதிக்கத் தயாராக இருக்கும், முட்டையில் மயிர் பிடுங்கும் ஆசாமிகளுக்கு வசதியாகப் போய்விட்டது.

'இவ்வாறு தமிழருக்கிடையிலேயே ஒற்றுமை இல்லாத போது நாடு எப்படி உருப்படும்?' எனச் சிந்திக்கும் ஒரே நாட்டில் இரு வேறு துருவம். ஒரே இனம். ஒரே மொழி பேசுகின்ற மக்கள். இருந்தும் இப்படி வேரோடு மாற்றம் என்ன வேண்டியிருக்கு? என ஆதங்கப்படும் 'வாழ்க்கையில் கேளிக்கைகள் இருக்கத்தான் வேண்டும். அதற்காக அதுதான் வாழ்க்கை என்றிருந்தால் என்ன

ஊர்சுற்றல் பெண்களுக்குக் கிண்டலடித்தல் என்று நகர்ந்த இரண்டு வருட வாழ்க்கையை விட்டு வருவதா?' எனும் மனநிலை. அந்நகர மக்களுடன் அவர்கள் ஒன்றித்து விட்டவர்கள் என்பதையும், அந்நிய மண்ணாக அவர்களதை உணரவில்லை என்பதையும் இவை சுட்ட வில்லையா?

'அங்க யாழ்ப்பாணத்தில பெடியங்கள் எல்லாம் எவ்வளவு கஷ்டப்பட்டுப் படிக்கிறான்கள். நீங்களிங்க முஸ்பாத்தியளிலையும் பெட்டையளுக்குப் பின்னால வளிஞ்சு கொண்டு திரியிறுதிலையும் வீணா நேரத்தை மினக்கெடுத்திறியளே' என்று ஒரு யாழ்ப்பாணத்து ஆசிரியர் திருகோணமலையில் கற்கும் மாணவர்களுக்கு அறிவுரை கூறினால், அவர் பிரதேச வாதம் பேசுகிறார் என இவர்கள் பொல்லைத் தூக்கிக் கொண்டு போவார்களோ?

கதாசிரியையின் நோக்கு நேர்மையானது; நல்லதை எடுத்துரைப்பது தமிழான நாம் எம்மில் உள்ள குறைகளை உணர வேண்டு

யாசமில்லாமல் 'முக்காலா முக்காபலா' என்று ஆட்டம் போடுவதைப் பற்றி ஓரிடத்தில் கதாசிரியை மெல்லக் குட்டிப் போட்டார். இது சிலருக்குச் 'சுட்டுப் போட்டது' கலையின் காவலர்களாகத் தம்மை வரித்துக் கொண்டவர்களை, அழிந்து போன கலை கலாசாரத்தை மீண்டும் அலவாங்கில்லாமல், மூன்றாந்தர சினிமாப்பாட்டுக்கள் பாட வைத்து கிண்டியெடுக்க வெளிக்கிட்ட, புனித நோக்குடைய கலைவிழாக்காளை இந்தச் சின்ன விமர்சனம் உசுப்பி விட்டுவிட்டது. 'யாழ்ப்பாணத்திலை இருந்து இஞ்சபடிக்க வந்த சின்னப் பெட்டையொண்டு எங்களைச் சூக்காட்டுறதோ? புறப்பட்டு விட்டார்கள் இவர்கள் போராட. மாணவர்களையும், கல்வியாளர்களையும் நகரசபை உறுப்பினர்களையும் (சம்பந்தமில்லாதவர்கள் சபைக்கு வருவானேன்) உசுப்பி விட்டு மாணவியை தவறுக்கு மன்னிப்புக்கேட்க வைக்கும் புனித கைங்கரியத்தில் (சமாதானத்துக்கான போரைப் போன்ற) இவர்கள் குதித்துள்ளார்

இவர்களின் நோக்கத்தின் பின்னால் அதிகாரத்திமிரும் ஆணாதிக்க மனப்பான்மையும் மறைந்திருப்பதை கொஞ்சம் உன்னிப்பாகப் பார்த்தால் இனங்கண்டு கொள்ளலாம். அவற்றை மறைக்க இவர்கள் தூக்கியுள்ள ஆயுதம்தான் பிரதேசவாதம்' திருகோணமலையைச் சேர்ந்த ஒரு மாணவனால் அக்கதை எழுதப்பட்டிருப்பின் பிரச்சினையே எழுந்திராது.

எழுதியவர் பெண் என்பதால் அவர் அடக்கப்பட வேண்டியவர் என இவர்கள் உள்ளூர அவாவுகின்றனர். பெண்களுக்காகப்போராடும் அமைப்புக்கள் இத்தகைய ஆணாதிக்க அராஜகத்துக்கெதிராகக் குரல் கொடுக்க முன்வர வேண்டும்.

எழுத்தாளனையல்ல அவனது படைப்பையே விமர்சிக்க வேண்டுமென விதந்துரைக்கும் இலக்கியவாதிகள் தரமான ஒரு கதையை எழுதிவிட்ட பாவத்துக்காக தஸ்லிமா நஸ்ரினைப்போல குற்றக் கூண்டில் நிறுத்தப்பட்டிருக்கும் இந்த சின்னஞ்சிறு எழுத்தாளினியின் உரிமையைக்காக்கத் தம் எழுதுகோல்களைத் திறக்க வேண்டும்.

அடக்கு முறையாலும் அராஜக வழிகளாலும் தமதிருப்புக்களை உறுதிப்படுத்திக் கொள்ள விழைபவர்கள், மொழிப்பற்றையும் பிரதேச உணர்வையும் தமது குறுகிய நோக்கங்களுக்குச் சாதகமாக்கிக் கொள்ள முனைந்து செயற்படுவதொன்றும் புதியதல்ல. முதற்பரிசுக்குரியக் கதையைத் தெரிந்தெடுத்த நடுவர் குழுவினருக்குக் கூடப்புலப்படாத பல 'குற்றங்கள்' இவர்களின் கொள்ளிக் கண்களுக்குத் தெரிந்து விட்டன. இத்தகைய பிற்போக்குவாதிகளின் வெருட்டல்களுக்கஞ்சி சஞ்சிகைக் குழுவினரும், 'இனிமேல் அச்சாகும் பிரதிகளிலிருந்து அக்கதையை நீக்கி விடுவதாக', 'பல்டி' அடித்திருப்பதானது அந்த எழுத்தாளர் எழுதியவை தவறுதாம் என இவர்கள் ஏற்றுக்கொள்வதாகவும் அவரை அவமதிப்பதாகவும் போய் விட்டதும் பரிதாபத்துக்குரியதே.

மாற்றுக்கருத்துக்களை ஏற்கவோ சகித்துக் கொள்ளவோ முடியாத இனத்தினராக எம்மை மாற்றிவிட்ட இயக்கக் கலாசாரச் சூழல் சுய சிந்தனையாளர்களை அடக்கி ஒடுக்கி நசுக்கிவிட முனைகிறது. எங்கள் தவறுகளை ஏற்றுக்கொள்ளும் மனப்பான்மை எமக்கு வராவிட்டால், நாம் மாறாவிட்டால் எமக்கு விடிவே கிடையாது. நான் ஒரு பிரதேசவாதியுமல்ல. தனிப்பட்ட முறையில் யார் மீதும் காழ்ப்போ, கோபமோ கொள்ள வேண்டிய தேவையும் எனக்கில்லை. தவறுகள் நியாயப்படுத்தப்படக்கூடாதெனும் உணர்வே இதை எழுதத் தூண்டியது.

இறுதியாக மாதுமைக்கு ஒரு வார்த்தை. 'தானறிந்த தமிழ் இன்று தன் பிடரிக்குச்சேதம். நல்லதோர் வீணைசெய்தே அதை நலங்கெடப் புழுதியில் எறிபவர்கள் நம்மவர்கள். 'முறிந்த பனைகள் எத்தனையோ, எழுத்து சோறா போடப்போகிறது? விட்டுத்தள்ளுங்கள்!

மானாமுனா, திருமலை.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# தடுப்பூசி ஏ.ஆர்.வி

நாய்களின் குணத்தைப்பற்றி எனக்கு அவ்வளவாகத் தெரியாது. இதுவரை நான் நாய்களுடன் அவ்வளவாக பழகியதுமில்லை என்பதால் அவற்றின் குணநல மாறுதல்களைப் பற்றி எனக்குத் தெரிந்திருக்க நியாயமில்லை.

நாய்களுடன் நான் எப்போதுமே மரியாதையுடனேயே நடந்து கொண்டு இருக்கிறேன். சிறுவயதிலும் சரி, இப்பொதும் சரி நான் நாயைக் கண்டவுடன் கல்லைத் தேடியதில்லை. நாயைக்கண்டால் அது தன் வழியில் போகும் வரையில் காத்திருந்து நான் என் வழியில், போவேன். இதுதான் என் வழக்கம். சில வேளைகளில் நான் பேசாமல் போவதைக்கண்டு, அதுவாக வம்புக்கு இழுத்தாலும் நான் ஒதுங்கியே போய்விடுவேன். சும்மா இருப்பவனை சுரண்டிப்பார்ப்பதில் மனிதரைப் போலவே சில நாய்களும் சந்தோசமடைகின்றன போலும், துட்டரைக் கண்டால் தூர விலகுவது தானே புத்திசாலித்தனம். நானும் புத்திசாலித்தனமாகவே நடந்து கொள்வேன்.

நாய் நன்றியுள்ள மிருகம் என்று தொடங்கி பெரிதாக கிட்டத்தட்ட நாய் மாதிரியே ஒரு படமும் வரைந்து, எல்லோருக்கும் விளங்குவதற்காகப் படத்திற்குக் கீழே பெரிய எழுத்தில் நாய் என்று எழுதியதெல்லாம் இன்னும் ஞாபகம் இருக்கிறது. அந்த வயதில் ஏதோ நாய்க் குட்டிக்கு ஆசைப்பட்டு, அடம் பிடித்து நாய்க்குட்டியை வீட்டுக்கு கொண்டு வந்து பிறகு, கொழு கொழு என்று இருந்த அந்த நாய்க்குட்டிக்கு நான் வீட்டில் இருந்த நேரமெல்லாம் சாப்பாடு போட்டேன். குட்டி நாய் என்பதால், பால்மா தான் அதற்குச் சாப்பாடு. நாய்க் குட்டி வந்து ஒரு வாரத்திற்குள்ளே தன் வயிற்றைத் தொப்பையாக்கிக் கொண்டது. அந்த ஒரு வாரத்திற்குள்ளேயே அந்தத் தொப்பை வயிற்றுடனேயே நாய்க்குட்டி சொல்லாமல் கொள்ளாமல் செத்துப் போனது. அதற்குப் பிறகு எங்கள் வீட்டில் நாய் வளர்ப்பிற்கான எந்த ஒரு முயற்சியும் எடுக்கப்படவில்லை. நாய்க்குட்டி செத்து ஒரு வாரத்திற்கு பெரும் சோகத்தில் திரிந்தும், பிறகு ஏதோ என்னைச் சாந்தப்படுத்த ஒரு பொம்மை நாய்க்குட்டி வாங்கித் தந்ததும் ஞாபகமாகவே இருக்கிறது. கொஞ்ச நாட்கள் பொம்மை நாய்க்குட்டிக்கும் இரவில் மட்டும் பால் மா கரைத்து வைத்தேன். பகலில் வைப்பதற்கும் பாடுபட்டேன். ஆனால், இரவில் வைத்துவிட்டு நான் தூங்கிய பிறகு தான் பொம்மை நாய்க்குட்டி பால் குடிக்குமாம் என்று பாட்டி கதை சொன்னாள். நானும் ஒத்துக்கொண்டு பொம்மை நாய்க்குட்டி வாங்கிய முதல் நாள் இரவு பாலைக் கரைத்து வைத்து விட்டு தூங்கிப் போனேன். உண்மையாகவே காலை எழுந்து பார்த்த போது பொம்மை நாய்க்குட்டி பாலைக் குடித்து விட்டிருந்தது. வீட்டிலும் எல்லோருக்கும் அதிசயமாய் போய் விட்டது. அடுத்தடுத்த நாட்களில் தான் கரைத்து வைக்கும் பால் மறையும் மர்மம் கண்டு பிடிக்கப்பட்டது. அது பக்கத்து வீட்டுப் பூனையின் கெட்டித்தனம்.

கொண்டு வந்த வளர்த்த நாய் ஒரு வாரத்திலேயே செத்துப் போனதாலும் அது குட்டியாக இருந்த படியாலும், மேலும் நான் அப்போது சிறுவனாக இருந்தபடியாலும், நாய்களைப் பற்றி பூரணமாக அறிந்து கொள்வதற்கு ஏற்றவாறான சந்தர்ப்பங்கள் கிடைக்கவில்லை. ஒரே ஒரு முறை கிடைத்த அனுபவமும் நாய்கள் மீது எனக்கு நல்ல அபிப்பிராயத்தையே ஏற்படுத்தி விட்டது. நாய் நன்றியுள்ள மிருகம் என்பதற்கு மேலாக - நாம் தவறுதலாக தெரியாமல் நாயை மிதித்து விட்டால், ''தெரியாமல் செய்த தவறை'' மன்னிக்கலாம் என்ற அடிப்படையில், கடிக்காமல் விட்டுவிடுவது என்ற தீர்மானத்தை எடுக்க எவ்வளவு உயர்ந்த குணம் வேண்டும். இந்த மாதிரியான நல்லெண்ணத்தை மனிதர்களிடம் கூட இப்பேொ காண்பது அரிதாகிப் போய் விட்டது. தெரியாமல் செய்த தவறுக்கும் மன்னிப்புக் கிடையாது என்று சொல்லும் படிமனிதனை மாற்றியது எதுவாக இருக்கும்? அதனை சலுகையாகப் பயன்படுத்தி, தெரிந்து செய்த தவறுக்கும், தெரியாமல் செய்ததாக மன்னிப்புக் கேட்க தொடங்கிய நாளிலிருந்து இந்த நல்லெண்ணம் மனிதனிடமிருந்து மறையத் தொடங்கி இருக்கலாம். நாய்களைப்பற்றிய எனது நல்லபிப்பிராயத்திற்கு, எங்கள் வீட்டுக்கு முன் வீட்டு நாய் காரணமாக அமைந்தது. அந்த நல்ல அபிப்பிராயத்தை நானே மாற்றுவதற்கும் அந்த நாயே காரணமாக அமைந்தது என்பது மிக மிக வருந்தத் தக்கதே. ஒரு சந்தர்ப்பத்திலோ, ஒரு அனுபவத்திலோ ஒருவரைப் பற்றி அல்லது ஒன்றைப் பற்றி முடிவான ஒரு அபிப்பிராயத்தை ஏற்படுத்திக் கொள்வது எவ்வளவு பிழை என்பதை அந்த நாய் எனக்கு உணர்த்தி விட்டது.

இது நடந்து பல வருடங்களாகி விட்ட போதும் எனக்கு இன்னும் ஞாபகம் இருக்கிறது. ஒரு நாள் இரவு ஏதோ தேவைக்காக முன் வீட்டுக்கு செல்ல நேர்ந்தது. அப்போது தான் தெரியாமல் அந்த வீட்டு நாயின் வாலை மிதிக்கும் படியாகி விட்டது. எனக்கு நல்ல காலமாகியிருந்தபடியால் அது என்னைக் கடிக்கவில்லை.பெரிதாகக் குரைத்து விட்டு எனனை ஒரு நிமிடம் பயமுறுத்தி விட்டு வாலை ஆட்டிக்கொண்டு நின்றது. எனக்கு அந்த நாயை அவ்வளவு பரிச்சயம் இல்லை. இருந்தும் அன்றிரவே ஏன் எனக்கு வாலை ஆட்டி தன் நன்றியுணர்வை காட்டியது என்று இன்னும் புரியவில்லை. அதன் பிறகு எப்போதாவது நான் முன்வீட்டுக்குப் போகும் போதெல்லாம் வாசலில் படுத்துக்கிடந்து கடைக்கண்ணால் பார்த்து விட்டு சோம்பேறித்தனமாக இரண்டொருமுறை ஏனோ தானோ என்று வாலை அசைக்கும். அப்போதெல்லாம் நான் மரியாதையாக விலகியே நிற்பதுண்டு. தெரியாமல் செய்த தவறுக்காக மன்னிக்கலாம் என்று என்னைப் பாவம் பார்த்து அந்த நாய் கடிக்காமல் விட்டது. எனக்கு நாய்களைப்பற்றி நல்ல அபிப்பிராயத்தை ஏற்படுத்தி விட்டது.

நாய்கள் பற்றி நான் வைத்திருந்த அபிப்பிராயத்தை போன வாரத்துடன் மாற்றிக்கொண்டேன். அன்று வியாழக்கிழமை நகரில் கட்டாக்காலி நாய்கள் தீவிரத்தேடுதல் வேட்டை பிடிக்கப்படுவதைக் கண்டேன். கட்டாக்காலி நாய்களை பிடிப்பதற்கு என்று தயாரிக்கப்பட்ட கூண்டுடன் சேர்ந்த தள்ளுவண்டில், அதற்குள் ஐந்தாறு நாய்கள். பலநிறங்களில் பல விதத் தோற்றங்களில் ''சோமாலிய' 'க் குழந்தையின் நெஞ்சறை எலும்புகளை நினைவுப்படுத்தும் படியாக ஒருநாய். இன்று நீ என்னை பிடிக்காவிட்டாலும் நாளை நானாகவே செத்துப்போய்விடுவேன் என்பதுபோல் நின்றது. கூண்டிற்குள் இருந்த எல்லா நாய்களுமே திகிலுடன் தான் நின்றன. ஒன்றுடன் ஒன்று கடிபடாமல் நின்றது எனக்கு அதிசயமாகத் தான் இருந்தது. நாய்கள் பிடிக்கப்படுவதை வேடிக்கை பார்க்க நின்ற பொழுது போகாத கூட்டத்துடன் நானும் நின்றேன். அங்கு பிடிக்கப்படும் நாய்கள் எவ்வாறு கொல்லப்படுகின்றன என்பதுபற்றிய ஒருவிவாதத்தில் இருந்து கூண்டுக்குள் அடைத்தபடியே கடலுக்குள் தள்ளுவதன் மூலம் சில நிமிடங்களில் நாய்களைக் கொன்று விடுவார்கள் என்றும், அவை வலியுனர்ாமலேயே செத்துப்போக இதுதான் நல்ல முறையென்றும் ஒருவர் கூறினார். மற்றவர் நாய்களுக்கு உணவில் விசம் வைத்து கொல்லப்படும் என்றும், அதுதான் வலியுணரும் முன்பே உயிரைப் பறிப்பதற்கு சிறந்த முறை என்றும் சொன்னார்.

நீண்ட நேர விவாதத்தின் பின்னர் கூட, இருவரும் நாய்களின் உயிர்களைப் பறிப்பதில் சுகமான - வலி உணராமல் உயிரைப் பறிப்பதற்கான இறுதி முடிவினைக் காணவில்லை என்ற போதிலும், நாய் பிடிப்பவர்கள் நாய்களின் வாலை வெட்டி எடுத்து அதைக் கணக்குக் காட்டியே தமக்கான கூலியைப் பெறுகின்றனர் என்பதில் இருவரும் கருத்திசைவு கொண்டிருந்தனர். பிறகு, கட்டாக்காலி நாய்களைப் பிடித்து அழிக்க வேண்டியதன் அவசியத்தையும், நாயிடம் கடி வாங்கிய ஏ.ஆர்.வி. ஊசி இல்லாத காரணத்தால் தடுப்பூசி ஏற்றாது அமரர்களாகிப் போனவர்கள் கடைசி நிமிடங்களில் எப்படி இருந்தார்கள் என்பதையும் பேசிக்கொண்டார்கள். எப்படிச் சாவு வந்தாலும், கடவுளே இப்படி மட்டும் ஒரு சாவு வரக்கூடாது என்று வேண்டிக் கொண்டனர்.

எப்படி இருந்தாலும் பிடிக்கப்பட்ட நாய்கள் கொல்லப்படப் போகின்றன, என்பதில் எந்த மாற்றமும் இல்லை. அந்த நாய்கள் செத்தே தீரப் போகின்றன. இதில் அவற்றை வலியில்லாமல் கொல்வதற்கு எது நல்ல முறை என்பது பற்றி ஏன் கவலைப்பட வேண்டும். இறந்த பின்னால், இறக்கும் முன்னர் பட்ட வேதனைகள் தெரியப்போவதில்லைத் தானே.

அன்று நான் வீட்டுக்கு திரும்பிக் கொண்டிருந்த பொழுது முன்வீட்டு நாய் அதிசயமாக எங்கள் வீட்டு ''கேற்''றடியில் படுத்துக்கிடந்தது- ''ஒரு நாளும் தங்கள் வீட்டை வீட்டுப் புறப்படாத அந்த நாய் இன்று ஏன் வீதியோரமாக அதுவும், எங்கள் வீட்டுக்கு முன்னால் வந்து கிடக்கிறது'' என்று யோசித்தேன்.

வீதியோரத்தில் நாட்டுநடப்புத் தெரியாமல் படுத்துக் கிடக்கிறதே; கடல் தண்ணீரைக் குடித்தோ, விசம் கலந்த சோற்றைத் தின்றோ வீணாக சாகப்போகிறதே. அதைவிட நன்றியை - நட்பை உணர்த்த உதவும் வாலையும் அறுத்து விடுவார்களே இந்த மனிதர்கள். இது தெரியாமல் சுகமாகப் படுத்துக் கிடக்கிறதே என்று நான் மிகவும் கவலைப் பட்டேன். அதை மெல்லக்கூப்பிட்டுப் பார்த்தேன். முறைத்து விட்டு மீண்டும் படுத்துக் கொண்டது. இரண்டாம் முறை கூப்பிட்டுப் பார்த்தேன். வாலை சோம்பலாக ஆட்டியது. நட்பை மதிக்கிறது. நன்றியைக் காட்டுகிறது. அதைத்தொட்டு எழுப்பினால் தான் அதைக் காப்பாற்ற முடியும் எனப் பட்டது. குனிந்து நாய் அருகில் கையைக்கொண்டுப் போனேன். திடுக்கிட்டு விழித்த நாய் என் கையில் தன் பற்களைப் பதித்தது. நான் நடந்ததை கிரகிக்கும் முன்னரே என்காலிலும் அதன் பற்கள் அடையாளம் பதித்தன. நாய் ஓடிவிட்டது. அதற்கு நன்மை செய்ய நான் முற்பட்டதைப் புரிந்து கொள்ள முடியவில்லையே. நல்ல வேளையாக நான் நாயிடம் கடிவாங்கியதை ஒருவரும் பார்க்கவில்லை.

இல்லாவிட்டால் நானே நாயிடம் வலியச் சென்று கடிவாங்கியது பெரிய கதையாகி இருக்கும். அந்தளவில் திருப்தி அடைந்து ''சும்மா கிடந்த நாய் திடீரென்று பாய்ந்து கையிலும், காலிலும் கடித்து விட்டது'' என்று கதை விட்டேன்.

அந்த நாயின் மூன்று வருட வாழ்வில் இதுவரை எவரையும் கடித்ததில்லையாம். சில நாட்களாக அந்த நாய்க்கு மனம் சரியில்லையாம். அந்த நாய் விசர் கொண்டிருப்பதாக சந்தேகிக்கப்பட்டது. என்ன செய்வது? ஆஸ்பத்திரியிலும் ஏ.ஆர்.வி. இல்லை என்று கை விரித்து விட்டார்கள். கப்பல் வந்தால் தான் இனி ஊசி. அது விசர் நாயாக இல்லாவிட்டால் பிரச்சினையே இல்லை. அந்த நாய் சில நாட்களுக்குள் செத்துப்போனால் பின்வரும் சில நாட்களில் நானும் சாக வேண்டியது தான். பிறந்த எல்லோரும் என்றோ ஒரு நாள் இறந்தேயாக வேண்டும். சாவதற்கு எனக்குப் பயமில்லை. ஆனால் இப்படிச் சாகத் தான் வேண்டுமா? விசர் நாய் கடித்து இறந்தவர்களின் இறுதி நிமிடங்கள், மணித்தியாலங்கள், நாட்கள் பற்றி நான் கேட்டவைகள் என்னை மிகவும் பயமுறுத்தவே செய்தன. வீட்டில் வைரவருக்கு வேண்டுதல், அந்த நாய் சாகக்கூடாது என்று, இந்த நிலையில் வேண்டுதலைத் தவிர வேறேதும் செய்ய வழி எதுவுமில்லை. அந்த நாய் செத்தால், என் சாவுக்கும் உறுதி கிடைக்கும். ஒவ்வொரு நாளும் திகிலாக விடிந்தன. காலையில் எழுந்தவுடன் முன் வீட்டு நாய் உயிருடன் இருப்பதை உறுதி செய்து கொள்வது தான் முதல் வேலை. நாய் என்னவோ அமைதியாகத்தான் இருந்தது. நான் தான் அமைதியிழந்து போனேன். இரவில் அடிக்கடி திடுக்கிட்டு விழித்தேன். நான் விழிக்கும் போதெல்லாம் எங்கோ தூரத்தில் ஒரு நாயின் ஊளைச்சத்தத்தையும் கேட்க வேண்டியிருந்தது. கனவிலே பலமுறை செத்துப் போய், காலையில் சாகாமல் எழுந்தேன். நாய் படாத பாடு நான் பட்டேன்.

நாய் கடித்து நான்காம் நாள். யாரோ சொன்னார்கள் என்று நாய் மீது விசர்ப் பரிசோதனை. ஆம் இப்படித்தானே கூற வேண்டும். நாய்க்கு விசர் ஏற்பட்டுள்ளதா? இல்லையா? என்பதைத் தீர்மானிக்க மேற்கொள்ளப்படும் பரிசோதனையை வேறு எவ்வாறு அழைப்பது? சுகமாய் தூங்கிக்கொண்டிருந்த நாய் மீது தண்ணீரை ஊற்ற அது கனவு கண்டு விழித்தவனைப் போல் உதறிக் கொண்டு எழுந்தது. பல பேர் தடிதண்டுகளோடு நிற்பதைக் கண்டதும் நாய் ஓட்டத்தில் வீதியைத் தேடி ஓடி தன் விதியை நிர்ணயித்துக் கொண்டது. நாய் வீதிப்பக்கமாக ஓட, குறுக்கே வாகனம் வந்ததா? வாகனத்திற்கு குறுக்கே நாய் ஓடியதா? என்பதைச் சிந்திப்பதற்குள், நாய் செத்துப்போனது.

இனி என் கதி என்னாவது? நாய் விசர் வந்து சாகவில்லை என்ற நம்பிக்கையுடன் நாளைய பொழுதை எதிர்பார்ப்பதா? அல்லது எல்லோரும் ''குமணவில்'' மா வருமா? மண்எண்ணெய் வருமா? கடிதம் வருமா? என்று காத்திருக்க, நான் மட்டும் ''குமணவில்'' ஏ.ஆர்.வி. ஊசி வரும் நாளுக்காகக் காத்திருப்பதா?

ந. குகதாசன்

இப்படிச்சாகத்தான் வேண்டுமா? விசர் நாய் கடித்து இறந்தவர்களின் இறுதி நிமிடங்கள், மணித்தியாலங்கள், நாட்கள் பற்றி நான் கேட்டவைகள். என்னை மிகவும் பயமுறுத்தவே செய்தன.வீட்டில் வைரவருக்கு வேண்டுதல், அந்த நாய் சாகக்கூடாது என்று, இந்த நிலையில் வேண்டுதலைத்தவிர வேறெதுவும் செய்ய வழி எதுவுமில்லை. அந்த நாய் செத்தால், என் சாவுக்கும் உறுதி கிடைக்கும்.
ஒவ்வொரு நாளும் திகிலாக விடிந்தது. காலையில் எழுந்தவுடன் முன் வீட்டு நாய் உயிருடன் இருப்பதை உறுதி செய்துக்கொள்வதுதான் முதல் வேலை. நாய் என்னவோ அமைதியாகத்தான் இருந்தது. நான் தான் அமைதியிழந்து போனேன். இரவில் அடிக்கடி திடுக்கிட்டு விழித்தேன். நான் விழிக்கும் போதெல்லாம் எங்கோ தூரத்தில் ஒரு நாயின் ஊளைச்சத்தத்தையும் கேட்க வேண்டியிருந்தது. கனவிலே பலமுறை செத்துப் போய், காலையில் சாகாமல் எழுந்தேன். நாய் படாதபாடு நான் பட்டேன்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





புலிகளின் நடவடிக்கையால்

# பங்களிப்பு குறைந்ததே தவிர முஸ்லிம்களின் அனுதாபம் குறையவில்லை!

தமிழ் மக்களின் நியாயபூர்வமான ஆயுதப்போராட்டத்தை இலங்கை முஸ்லிம்கள் ஒரு போதும் கொச்சைப் படுத்தியதில்லை.மாறாக தங்களால் இயன்ற முழுப்பங்களிப்பினையும் ஆதரவினையும். ஆரம்பகாலந்தொட்டு வழங்கி வந்திருக்கிறார்கள் என்பதை தமிழ் மக்களின் போராட்ட வரலாறுகள் எமக்கு தெளிவுபடுத்துகின்றன.

ஒரு சிறுபான்மை இனத்தின் மீதான ஒரு பெரும்பான்மை சமூகத்தின் அடக்கு முறைகளை அதே நாட்டில் வாழும் மூன்றாம் சிறுபான்மையினர் ஆதரித்த வரலாறு ஒன்றினைகாணமுடியாத அளவிற்கு சாத்தியப்பாடு குறைந்த ஒரு விடயத்தினை முஸ்லிம்கள் செய்கிறார்கள் என்று கூறுவது அப்பட்டமான ஒரு பொய்யாகும்.

தமிழ் மக்களின் உரிமைக்கான அரசியல் போராட்டம் தொடக்கம் ஆயுதப் போராட்டம் வரைஅனைத்து விடயங்களிலும் முஸ்லிம்கள்தமிழ் மக்களுடன் இணைந்தே செயல் பட்டார்கள்.எந்வொரு பெரும்பான்மையினரும் தங்களது பைகளில் ஆட்சி அதிகாரங்கள் மற்றும் இராணுவப்பலம் இருக்கும் போது சிறுபான்மையினரை அடக்கியாள நினைப்பது சர்வதேச ரீதியில் இயல்பாக கணிக்கப்படுகின்றது.

தமிழர்களிற்கான தீர்வுகள் முன்வைக் கப்படும் போதும் தமிழ்த்தலைமை களினால் கோரிக்கைகள் முன்மொழியப் படும் போதும் அவற்றில் முஸ்லிம்களிற்கான பங்குபற்றி கலந்தாலோசிப்பது ஒரு நடைமுறைப்பண்பாடு எனலாம். முஸ்லீம் ஐக்கிய முன்னணி தமிழ் தலைமைகளுடன் இந்தியாவில் நடாத்திய பேச்சுவார்த்தைகளை இதற்கு உதாரணமாகக் கொள்ளலாம்.

தமிழ் இளைஞர்களின் இயக்க ரீதியான ஆயுதப்போராட்டத்தில் முஸ்லீம் இளைஞர்களின் பங்களிப்பானது புறக்கணிக்கமுடியாத ஒன்று. தமிழ்த் தீவிரவாத இயக்கங்களில் அடிமட்ட போராளி தொடக்கம் முடிவெடுக்கும் அரசியல் இராணுவ அதிஉயர்பீட உறுப்பினர் வரை முஸ்லீம் இளைஞர்கள் அங்கம் வகித்திருந்தார்கள். இவ்விளைஞர்கள் வியக்கத்தக்க பலசாதனைகளைப் புரிந்தும் இருக்கின்றார்கள் என்பதை தினமுரசு பத்திரிகையில் அற்புதன் எழுதும் " அல்பிரட் துரையப்பாமுதல் காமினி" வரை என்ற கட்டுரைத்தொடர் உள்ளடக்காவிடினும் உண்மையாகும்.

இன்று எவ்வாறு ஸ்ரீலங்கா முஸ்லீம் காங்கிரஸ் பொதுஜன ஐக்கிய முன்னணியில் அங்கம் வகிக்கின்றதோ அவ்வாறு தமிழ் மக்களுடன் இணைந்து சுயாட்சி நிர்வாக அலகொன்றினை முன்னெடுப்பதற்கு முஸ்லிம்கள் விரும்பியிருந்தார்கள். இவ்வாறான மனநிலையில் இருந்த முஸ்லிம்களை தமிழ் மக்களின் போராட்டத்திற்கான பங்களிப்பிலிருந்து அந்நியப்படுத்தியவர்கள் யார் என்பதை இனங்கண்டு கொண்ட வ.ஐ.ச. ஜெயபாலன். பஞ்சமன் போன்றவர்கள் முஸ்லீம் அனுதாபவாதிகளாக இருப்பதை ஏற்றுக் கொள்ள முடியாதவர்கள் தமிழ் போராட்ட வரலாறில் முஸ்லிம்களின் சாதாரணமான பங்களிப்புபற்றி தெரியாதவர்களாகத்தான் இருக்க வேண்டும். முஸ்லிம்களின் தமிழ் போராட்டத்திற்கான பங்களிப்புடன் ஒப்பிடும் போது ஆகக்குறைந்தளவு முஸ்லிம்கள் மீது அனுதாபமேனும் படக்கூடிய தமிழர்கள் ஜெயபாலனைத்தவிர மிகவும் குறைவாகவே இருக்கிறார்கள் என்பது முஸ்லிம்களின் மீது அனுதாபப்படுவதையும் இவர்கள் விரும்பவில்லை என்பதை தோலுரித்துக் காட்டுகின்றது

முஸ்லிம்களின் சொத்துக்கள் கொள்ளையடிக்கப்பட்டவை தொடக்கம் முஸ்லிம்கள் மீதான LMG, AK-47 தாக்குதல்கள் வரை அனைத்தும் முஸ்லிம்களின் தமிழ்மக்கள் மீதான போராட்ட பங்களிப்பை குறைத்ததே தவிர அனுதாபத்தை சிறிதளவேனும் பாதிக்கவில்லை. எனினும் இரத்தம் துவைந்த அந்த பாசிசக்கரங்களை எதிர்க்கின்றன. ஆனாலும் 3ம் கட்ட ஈழப்போர் ஆரம்பமாவதற்கு முன் நிலவிய மோதல் தவிர்ப்பு காலப்பகுதியில் விடுதலைப்புலிகளால் முஸ்லிம்கள் சம்பந்தமாக விடுக்கப்பட்ட அறிக்கைகள்வரவேற்கப்படக்கூடியவையாக இருந்தாலும் புலிகளின் மீதான நம்பகத்தன்மை இவற்றை பொய்ப் பிப்பதாகவே அமைகின்றன.

எவ்வாறு தமிழ் மக்கள் சிலகட்டங்களில் பிரபாகரனின் தலைமைத்துவத்தில் கருத்து முரண் படுகிறார்களோ அவ்வாறான முரண் பாடுகள் அஷ்ரப்பின் தலைமைத்துவத்திற்கும் முஸ்லிம்களிடையேயும் இருக்கின்றன. எனவே பிரபாகரன் அஷ்ரப் மோதல்கள் தமிழ் முஸ்லிம் உறவைப் பாதிக்கக்கூடாது.

முஸ்லிம்களின் குர்ஆன் ஹதீஸடன் ஒன்றித்துப்போகும் நூறுவீத இஸ்லாமிய தலைமைத்துவத்தின் தேவைபற்றி முஸ்லிம்கள் உணர்ந்து கொள்ள எடுக் கும் கால இடைவெளிதான் தற்போது முஸ்லிம் வாக்குகளை எதிர்பார்க்கும் தலைமைகளின் ஆட்சிக்கான காலப்பகுதி என்பது குறிப்பிடப்படவேண்டியது!

*அஹமத் சிப்லி*
*காத்தான்குடி*

---

சரிநிகர் இதழ் 87ல் மட்டக்களப்பைச் சேர்ந்த ஏ.ரீ.தமிழ்வாணன் என்பவரால் ''மனிதாபிமானத்திலும் பாரபட்சமா? என்ற தலைப்பிட்டு வெளிவந்த சிறு கடிதத்தை அந்த இதழை வாசித்த சகல வாசகர்களும் வாசித்திருப்பார்கள். சகோதரர் தமிழ்வாணனின் கடிதம் இன்று இந்த நாட்டில் இனவாதத்தின் பெயராலும், தமிழ்மொழி புறக்கணிப்பின் மூலமாகவும், இனச்சுத்திகரிப்பு நடவடிக்கையாலும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற யுத்தத்திற்கு மேலும் எண்ணெய் ஊற்றுவதாகவே அமைகிறது.

நடுநிலைமையாக நின்று சிந்திக்கின்ற புத்திஜீவிகளும், (வ.ஐ.ச.ஜெயபாலன், பஞ்சமன் உட்பட) பாமர மக்களும், சரிநிகர் போன்ற பத்திரிகைகளும், மனிதாபிமான அமைப்புகளும் என்னதான் முயற்சி செய்தாலும்; இனவாதத்தை தலைக்கேற்றியவர்களாக இன்றும் எம்மத்தியில் இருக்கின்ற எல்லா இனத்தைச் சேர்ந்த குறும்புத்தி கொண்டவர்களை அந்த நிலையிலிருந்து மாற்றமுடியாது போல்தான் இருக்கிறது.

இந்த யுத்த சூழ்நிலையில் தமிழர்களுக்குச் சார்பாக எந்தவொரு முஸ்லிமும் நியாயங்களை எடுத்துச் சொல்லவில்லையென தமிழ்வாணன் கூறுகிறார். சரிநிகர் 85இல் வடபகுதித் தமிழ் மக்களின் பட்டினி நிலைமை தொடர்பாக அபுநிதால் என்பவரால் ''சொல்வதைத் தவிர வேறுவழியில்லை என்ற தலைப்பிட்ட கட்டுரையையும், 1996ம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்ட விவாதத்தில் மட்/மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அல்ஹாஹ் செய்யதலி சாகிர் மௌலானா அவர்கள் இன்று இலங்கை முழுவதும் தமிழ் மக்கள் படும் வேதனையை ''தமிழர்களெல்லாம் புலிகளல்ல'' என்ற தலைப்பில் உரையாற்றியதையும் கவனித்திருந்தால் தமிழ்வாணன் தனது கடிதம் மூலம் நுனிப்புல் மேய்கிறார் என்று அறிந்து கொள்ளலாம்.

மேலும், கிழக்கு மாகாணத்தில் சில முஸ்லிம் பெயர்களைக் கொண்டவர்களால் தமிழ் பகுதிகளில் ஏற்படுத்தப்பட்ட அநியாயங்களை தமிழ்வாணன் சுட்டிக் காட்டியிருந்தார். இவர் முஸ்லிம்கள் எனக் கூறும்போது சகல முஸ்லிம்களையும் இனவாதியாகவும், காடையர்களாகவும், கயவர்களாகவும் சித்திரிக்கிறார். சகோதரரே; 1980ம் ஆண்டுமுதல் மட்டக்களப்பு மாவட்டத்தில் ஆயுதம் ஏந்திய குழுக்களாலும்; இனவாத விசத்தை தம் நெஞ்சங்களில் சுமந்து கொண்டவர்களாலும் ஏற்பட்ட அழிவுகளை எந்தவொரு இனமும் மறக்க முடியாதுதான். இருந்தும் கண்ணாடியில் உருவத்தை பார்ப்பது போன்றுதான் நியாயங்கள் அமைய வேண்டும்.

1980ம் ஆண்டுமுதல் இன்று வரை அழிக்கப்பட்ட முஸ்லிம் கிராமங்கள் உங்களுக்கு தெரியாமல் போகலாம்; அல்லது மறைக்கலாம். ஆனால் முஸ்லிம்கள் பல நூற்றாண்டுகளாக வாழ்ந்த உன்னிச்சை, பாவற் கொடிச்சேனை, கோப்பாவெளி, புல்லுமலை, உறுகாமம், சித்துல்வெவ, கரடியனாறு கொடுவாமரு; மட்டக்களப்பு முஸ்லிம் கொலனி போன்ற கிராமங்கள் திட்டமிட்டமுறையில் அழிக்கப்பட்டு, அந்த மக்கள் வெளியேற்றப்பட்டு இன்னும் அகதி முகாம்களில் அல்லல் பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதுமட்டுமல்ல ஏறாவூர், காத்தான்குடி, ஓட்டமாவடி, வாழைச்சேனை பகுதி முஸ்லிம் மக்களின் கால்நடைகள், பொருளாதார வளங்கள் சூறையாடப்பட்டு அவர்களது விவசாய நிலங்கள் இன்றும் சில தமிழ் மக்களால் எவ்வித குத்தகையும் இல்லாமல் விவசாயம் செய்யப்பட்டுக் கொண்டிருக்கிறது. அந்த விவசாயிகள் இன்று பிச்சைக்காரர்களாக வாழ்கிறார்களே? இது உங்களைப் போன்றவர்களுக்குத் தெரியாதா?

சகோதரரே, 1990ம் ஆண்டு நடைபெற்ற முஸ்லிம் ஒழிப்பு நடவடிக்கையின் போது முஸ்லிம் பிரதேசங்களிலிருந்த அரச, தனியார் அலுவலகங்களை ஆயுதம் தாங்கிய குழு காவல் புரிய சில தமிழ்மக்களே கொள்ளைக்காரர்களாக மாறி கொள்ளையிட்டும், உடைத்தும்; தகர்த்தும் கொண்டிருந்தார்கள். இதனை முஸ்லிம்களும், நேர்மை எண்ணம் கொண்ட தமிழ் மக்களும் செய்வதறியாது மனதுக்குள்ளேயே சபித்துக் கொண்டார்கள்.

இவற்றையெல்லாம் விட மோசமாக 1990க்கு முன்பு ஏற்பட்ட சிறுசிறு இனக்கலவரங்களின் போது தமிழ் ஆயுதக்குழுக்களாலும், சில தமிழ்க் காடையர்களாலும் கொல்லப்பட்ட அல்லது காயப்படுத்தப்பட்ட நூற்றுக்கணக்கான முஸ்லிம்களையும் 1990இல் முஸ்லிம்கள் என்றதொரு காரணத்திற்காக காத்தான்குடியில் இரண்டு பள்ளிவாசல்களில் நிராயுதபாணிகளாக தொழுது கொண்டிருந்த 150க்கும் மேற்பட்ட முஸ்லிம்களை கொன்றும், காயப்படுத்தியும் நடாத்திய வெறியாட்டத்தையும்; அத்தோடு பலமுறை காத்தான்குடி நகருக்குள் குண்டுகளை வெடிக்க வைத்து முஸ்லிம்களை கொலை செய்து, அங்கவீனர்களாக்கிய கோழைத்தனத்தையும், ஏறாவூரில் இரவுவேளையில் உறங்கிக் கொண்டிருந்த ஆண்களையும், பெண்களையும், வயோதிபர், குழந்தைகள் என்று பாராது 250க்கும் மேற்பட்டவர்களை சுட்டுக் கொன்றும், காயப்படுத்தியும் நடாத்திய இன அழிப்பு நடவடிக்கையையும், அத்தோடு தமது சொந்த தேவைகளுக்காக ஊரைவிட்டுப் புறப்பட்ட சுமார் 1000க்கும் அதிகமான முஸ்லிம்களை அவ்வப்போது கடத்தி தமிழ்க் கிராமங்களிலேயே புதைத்த போக்கிரித்தனத்தையும்; முஸ்லிம்கள் மத்தியிலிருந்த புத்திஜீவிகளையும் திட்டமிட்டு கொலைசெய்து அவர்களது தலைமைத்துவத்தை அழிக்க மேற்கொண்ட சதி முயற்சியையும் தமிழ்வாணன் மறைப்பது என்ன நியாயமோ?

எனவே சகோதரர் தமிழ்வாணன் போன்றவர்கள் இன்னும் ஒருபக்கத்தை மட்டும் பார்த்துவிட்டு; அதனை பத்திரிகைகள் மூலம் பிரசுரப்படுத்தி நாட்டையும், வெந்துபோன மக்களையும் ஏமாற்ற நினைக்கக்கூடாது. மேற்படி சம்பவங்கள் அனைத்தும் எல்லா தமிழ் மக்களாலும் ஏற்படுத்தப்படவில்லை. நான் அறிந்தவரை சகல ஆயுதம் தாங்கிய தமிழ் குழுக்களாலும் (ஈ.பி.டி.பி தவிர) ஒரு சில தமிழ்க் காடையர்களுமே நடாத்தி முடித்தார்கள்.

இன்று இனவெறியோடும், இனவாதத்தோடும் செயல்படுகின்ற பேரினவாதத்தை; அவர்களுக்கு இணைபோகின்ற சிறுபான்மை தலைமைகளை; இனவாதத்தை அரசியலாக்கி, அதன் மூலம் தமது சுயலாபங்களை அடைந்து கொள்வதற்கு சில சிறுபான்மை அரசியல் தலைமைகள் முயற்சித்து சிண்டு முடிந்து கொண்டிருக்கிறார்கள். இதனை பேரினவாதம் தமக்கு சாதகமாக மாற்றிக் கொண்டிருக்கிறது. இந்நிலையில் சிறுபான்மை சமூகத்தில் பெரும்பான்மையோர் நிம்மதியான, நல்லுறவோடு வாழக்கூடிய சூழ்நிலையைத் தேடிக் கொண்டிருக்கிறார்கள். இந்த நேரத்தில் கடந்தகால கோர நிகழ்வுகளை ஞாபகப்படுத்தி நமக்குள் நாமே முரண்பட்டுக் கொண்டால் அது எமக்கே அழிவைத் தேடித்தரும். எதிர்காலத்தில் எந்த நிலையிலும் இனரீதியிலான சிந்தனைக்கு இடம் கொடாமல் புத்தி சாதுரியத்தோடும், நேர்மையோடும், அந்நியோனியமாக மனிதாபிமானத்தை நிலைநிறுத்த ஒன்றுபடுவதோடு இனவாதமற்ற ஒரு சமூக அமைப்பை உருவாக்கத் துடிக்கும் கரங்களுக்கு உயிரூட்டுவோம்.



# ''நமக்குள் நாமே முரண்படுவது நல்லதல்ல''

யூ.அப்துல் அஸீஸ்
ஏறாவூர் -1

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மட்டக்களப்பு பாடசாலை நாடகங்கள்:

# முயற்சிகளும் முட்டுக்கட்டைகளும்!

மட்டக்களப்பில் பாடசாலைகளில் அனேகமாக போட்டிகளின் நிமித்தம் அல்லது பரிசளிப்பு விழா போன்ற நாட்களில் மேடையேற்றப்பட மாத்திரமே நாடக முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றது.

மட்டக்களப்பு மாவட்டத்தை எடுத்துக் கொண்டால் நகர்புற பாடசாலைகள் பிரத்தியேக விழாக்களின் போது ஆங்கில நாடகங்களை மேடையேற்றுகின்றன. அந்த நாடகங்கள் அனேகமாக பாடப் புத்தகங்களிலுள்ள Dialouge Drama ஆகவே உள்ளன. தமிழ் நாடகங்களாயின் அவை வரலாற்று, இதிகாச நாடகங்களாகவே அமைகின்றன. ஆனாலும் அண்மையாண்டுகளில் சில பாடசாலைகளில் நல்ல நவீன நாடக முயற்சிகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

தமிழ் நாடக வரலாற்றில் பாடசாலை அரங்கு 1980ம் ஆண்டுகளின் பின்னரே ஒரு தனியான கல்வி அரங்காக (Educational theatr மாற்றம் பெறத்தொடங்கியது.

இக்காலகட்டத்தின் பின்னரான பாடசாலை நாடகங்கள் சினிமாப்பாணி நாடகங்களிலிருந்தும் வரலாற்று இதிகாச புராண கதைகளிலிருந்தும் மனோரமிய (Romantic) நடிப்பிலிருந்தும் விடுபட்ட அரங்காக புத்துயிர் பெற்றது.

மாணவர்களை பின்புலமாககொண்டு அவர்களது சமகால பிரச்சினைகளை கருவாக (Theme) கொண்ட புதிய பாணியிலான (Stylized play) நாடகங்கள் மேடையேற்றப்பட்டன. இத்தகைய முயற்சிகளில் குழந்தை ம. சண்முகலிங்கம் முதன்மை படுத்தப்படத்தக் கவராகவுள்ளார்.

இத்தகைய கல்வி அரங்கின் புத்தாக்க முயற்சிகள் யாழ்ப்பாண மாவட்டத்திலேயே முதலில் மெருகுபெறத்தொடங்கின. அம்மாவட்டத்திலிருந்த வாய்ப்புகளும் வளங்களும் ஏனைய மாவட்டங்களில் குறைவாக காணப்பட்டமையினால் ஏனைய மாவட்டங்களில் சம காலத்தில் இத்தகைய புத்தாக்க முயற்சிகள் இடம் பெறவில்லை பின்னரான காலப்பகுதிகளில் ஏனைய தமிழர் மாவட்டங்களிலும் இம்முயற்சிகள் எடுக்கப்பட்டன.

மட்டக்களப்பு மாவட்டத்தை எடுத்துக் கொண்டால் 1990ஆம் ஆண்டு வரை கல்வி அரங்கின் புத்தாக்க முயற்சிகள் மிக மிகக் குறைவாகவே காணப்பட்டன.. இதற்கு பல் வேறு காரணங்களைக் கூறலாம்.

1. நாடகமும் அரங்கியலும் மட்/ பாடசாலைகளில் கற்கை நெறியாக உணரப்படாமை.

2. யாழ்ப்பாண நாடக அரங்கக் கல்லூரி போன்ற அமைப்பு இல்லாமை.

3. நாடகப்பயிற்சிபட்டறைகளை நடத்தக்கூடிய வாய்ப்புகள் இல்லாமை.


4. நாடகமும் அரங்கியலையும் கற்கை நெறியாக கற்க ஆசிரிய, மாணவ சமூகம் இல்லாமை.

5. நாடகம் பொழுது போக்குக்காக மட்டும் எனும் உணர்வு நாடக கலைஞர்களின் மத்தியில் நிலவியமை.

1990 ஆம் ஆண்டுகளின் பின்னர் மேற்குறித்த நிலைகளில் மாற்றங்கள் ஏற்பட்டு அண்மையாண்டுகளில் பல நல்ல நாடகங்கள் மேடையேற்றப்படுகின்றன. 1991ல் மட்டக்களப்பு வின்சன் மகளிர் உயர்தரப்பாடசாலையில் வெ. தவராஜா நெறிப்படுத்திய குழந்தை ம. சண்முகலிங்கத்தின் ''புழுவாய் மரமாகி'' எனும் நாடகம் மாணவர்கள் ஆசிரியர்கள், பெற்றோர்கள் மத்தியில் தாக்கத்தையும் புதிய எண்ணத்தையும் வளரச்செய்தது.இக்காலகட்டத்தில் எஸ். நேசராஜா நெறிப்படுத்திய குழந்தை ம. சண்முகலிங்கத்தின் 'தாயுமாய் நாயுமானார்' நாடகமும் பலரது வரவேற்பைப்பெற்றது.

பின்னரான காலகட்டங்களில் மட்டக்களப்பு வின்சன் மகளிர் உயர்தர பாடசாலை 'நித்தமும் அமாவாசை', 'தந்தை சொல்மிக்க மந்திரமில்லை', புதுயுகம் ஒன்று படைப்போம்' போன்ற பல நாடகங்களை மேடையேற்றியது.

மட்டக்களப்பு இந்துக்கல்லூரியில் சுகுமார் ஆசிரியரின் முயற்சியிலும் மட்/ சிசிலியா பெண்கள் பாடசாலையில் எஸ். ஆதவன், எஸ். லோகநாதன் ஆசிரியர்களதுமுயற்சியிலும், மட்/ மெதடிஸ்த மத்திய கல்லூரியில் எஸ். நவநீதன், கே. லோரன்ஸ் ஆசிரியர்களது முயற்சியிலும், மட்/ கன்னன் குடா தமிழ் மகாவித்தியாலயத்தில் எம். சுந்தரலிங்கம் ஆசிரியரது முயற்சியிலும், சித்தாண்டி தமிழ் வித்தியாலயத்தில் எம். சிவலிங்கம் ஆசிரியர் முயற்சியினாலும், மட்/ ஏறாவூர் தமிழ் மகாவித்தியாலயத்தில் எம். பகிதரன் ஆசிரியர் முயற்சியினாலும், மட்/ புனித மிக்கேல் கல்லூரி, கலாநிதி சி. மௌனகுருவின் முயற்சியினாலும் காலத்துக்கு காலம் பல நல்ல நாடகங்கள் மேடையேற்றப்பட்டுள்ளன. இருந்தாலும் இம்முயற்சிகள் போட்டிக்காகவே அனேகமாக மேற்கொள்ளப்படுவது கவலைக்குரியதே .



இங்கு குறிப்பிடக்கூடிய இன்னுமொரு விடயம் மட்டக்களப்பு நகரபகுதியும் அதன் வடபுறம் வாழைச்சேனை வரையுள்ள பாடசாலைகள் புத்தாக்க முயற்சிகளில் ஈடுபடுகின்ற அதேவேளை தென்புறப் பாடசாலைகளில் இம்முயற்சிகள் மிகக் குறைவாகவே உள்ளன. இப்பகுதிகளில் இன்னும் சினிமாப் பாணி நாடகங்களே மேடையேற்றப்படுகின்றன.

இத்தகைய சூழ்நிலையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் நல்ல காத்திரமான பாடசாலை அரங்கை வளர்த்தெடுக்க வேண்டிய தேவை இருக்கும் போது குறுகிய நோக்கங்களுக்காக முட்டுக்கட்டை போடுவது அதனைப் பின்தள்ளும் முயற்சியாகவே அமையும். இவ்வாறான ஒரு சம்பவம் அண்மையில் நடைபெற்றது.

மட்டக்களப்பு இந்துக்கல்லூரியில் வருடாந்த பரிசளிப்புவிழாவின் போது மேடையேற்றுவதற்காக 'முகில்களின் நடுவே' எனும் ஜப்பானிய மொழிபெயர்ப்பு நாடகம் இரண்டு மாதங்களுக்கு மேலாக ஒத்திகைப் பார்க்கப்பட்டு விழா நடைபெறுவதற்கு முன்தினம் ஆடை ஒத்திகையாகவும் (Dress Rehasel) ஏனைய மாணவர்களின் பார்வைக்காகவும்

→15

# அயோமா

## நல்ல திரைப்படம் குறித்த ஒரு கசப்பான கேள்வி!








பராக்கிரம நிரிஎல்ல

சிங்கள சினிமாவின் முன்னோடியான லெஸ்ரர் ஜேம்ஸ் பீரிஸ் தொடக்கி வைத்த சிங்கள சினிமா உலகில் ஒவ்வொரு ஆண்டும் மகோன்னத திரைப்படங்கள் வெளிவராவிட்டாலும் தரமான சிறந்த திரைப்படங்கள் ஆண்டுக்கு இரண்டு மூன்றாவது தொடர்ந்து வெளிவந்து கொண்டுதானிருக்கிறது. இவற்றுக்கு சமாந்தரமாக எண்ணற்ற மசாலாப்படங்களும் சிங்களத்தில் வந்து கொண்டிருந்தாலும் தரமான திரைப்படங்கள் பெரும் பாலும் வசூலில் சோடை போவதில்லை. ஒரே நேரத்தில் நாடளாவிய ரீதியில் திரையிடக்கூடிய சந்தை வாய்ப்பும் இத்தகைய தரமான படங்களுக்கு உண்டு. தலைநகரிலுள்ள ரீகல் போன்ற படமாளிகைகள் தொடர்ச்சியாக பல ஆண்டுகாலமாக தரமான படங்களை மட்டுமே திரையிட்டு வருகின்றன. 'குருகெதர', 'மீஹரக்கா', 'செய்லம', 'மாருதய', (வசந்த ஒபயசேகர) அவரகிர (லெஸ்ரர் ஜேம்ஸ் பீரிஸ்) என்பன கடந்த 3ஆண்டுகளில் வெளிவந்த தரமான படங்கள்.

மசாலப்படங்களை சிங்கள பார்வையாளர்கள் நாடினாலும் தரமான படங்களே உயர்ந்த ரசனை உடையவை என்பதை சிங்களவர்களில் பாமரர்களிலிருந்து படித்த் மேல் தரவர்க்கம் வரை ஏற்றுக்கொள்வர். சிங்களப்படங்களின் வளர்ச்சியானது மசாலப்பட இயக்குனர்களிலன்றி லெஸ்ரரை அடியொற்றி வ்ருகின்ற இயக்குனர்களின் கைகளிலேயே உள்ளது என்பதையும் அவர்கள் ஏற்றுக்கொள்வர்.

அவ்வாறான ஒரு தரமான திரைப்படந்தான் 'அயோமா'. நாடெங்கிலுமுள்ள 14 திரையரங்குகளில் திரையிடப்பட்டுள்ளது. 'சிறிமதுர' என்ற சிறந்த திரைப்படத்தை நெறியாள்கை செய்த பாராக்கிம நிரி எல்ல இதனை நெறியாள்கை செய்திருக்கிறார்.

இது ஒரு நாவலை அடிப்படையாகக் கொண்டது. இந்நாவல் இடம் பெறுவது அம்பாந்தோட்டைப்பகுதியில். அது ஒரு உண்மைக் கதையுங்கூட.

லாலினி (சுவர்ணா மல்லவாராச்சி) இரண்டு இளம் பெண்களும் ஒரு இளைஞனும் உள்ள ஒரு கிராமியக் குடும்பத்தில் மூத்தவள். அவளைக் காதலித்த வில்சன் (ஜக்சன் அன்தொனி) ஆரம்பத்தில் ஆத்மார்த்தமாக இருந்தாலும் பின்னர் அவளை ஏமாற்றிவிடுகிறான். பிறகு தர்மே (லின்ரன் செமகே) என்பவனை உளப்பூர்வமாகக் காதலித்து மணக்கிறாள். இருவரினதும் வாழ்வு அன்பானதாகவும் இலட்சியமானதாகவும் இருந்தபோதிலும் லாலனி வயிற்றில் குழந்தை இருக்கிற போது தர்மே இறந்து விடுகிறான். பிறந்த குழந்தையைக்கூட லாலனியிடம் விட்டு வைக்காது தர்மேயின் தாயும் தமக்கையும் பறித்துவிடுகின்றனர். பின்னர் லாலனி வேலைக்காரியாக வீடுகளுக்கு செல்கிறாள். அங்கு முதலாளிகளின் பாலியல் சுரண்டலுக்காளாகி கர்ப்பமடைகிறாள். கர்ப்பத்தின் மூலம் கிடைக்கும் குழந்தையைக்கூட விற்க நிர்ப்பந்திக்கப்படுகிறாள். அல்லது கருச்சிதைவு செய்கின்றனர். இறுதியில் அவள் விபச்சாரியாகிறாள்.

லாலனி ஒரு நாவலாசிரியருக்கு தன் துயரக்கதையைச் சொல்வதாயும் அந்நாவலாசிரியர் அதை வைத்து ஒரு நாவல் எழுதுவதாகவும் கதை நகர்கிறது. சுவர்ணாவின் குரலிலேயே படம் போகிறது. இடைக்கிடை நாடகப்பாணியில் காட்சிகள். தொடராக வருகிற நாவலை லாலனியும் வாசிக்கிறாள். லாலனி உயிரோடு இருக்க நாவலாசிரியர் அவள் இறந்ததாக நாவலை முடிக்கிறார். இதை வாசித்த லாலனி கேட்கிறாள் ''என்னை ஏன் கொன்றாய்? நான் இன்னும் உயிர் வாழவில்லையா?''. இதுதான் படத்தின் முடிவு. அதே நேரம் நம்மை அதிர வைக்கிற சட்டகமும் கூட.

நடிகர்கள் எல்லோரும் தங்களது பாத்திரங்களை திறமையாகச் செய்துள்ளனர். திரை இசை அநேக இடங்களில் துருத்தலாக சிரமப்படுத்துகிறது. இறுதிப் பகுதியில் பௌத்த கோவில் ஒன்றில் வருகின்ற இசை நெஞ்சைப் பிழிகிறது.

இறுதிப் பகுதியில் வருகின்ற சட்டகங்கள் கவருகின்ற மாதிரி முன்னைய சட்டகங்கள் கவரவில்லை. ஒரு தூய கன்னியாக லாலனி அழகிய கிராமப்புறங்களில் பன்சலைக்குப் போவது. நீர் வீழ்ச்சியில் அவள் வெள்ளாடையோடு தோய்ந்து குளிப்பது, அவள் விபச்சாரியாகித் தனிமைப்பட்ட குடிசையில் நாவலாசிரியர் மழை நாளொன்றில் அவளுடன் சம்பாசிப்பது, ஏழைச்சிறார்கள் அவளது குடிசையில் காசு பெற்றுச் செல்வது, எல்லாவற்றையும் விட அவளது மரணம்; மேகநோயினால் இறந்துபோன அவளது உடலை நகர சபை வண்டி சவச்சாலைக்கு கொண்டு சென்று புதைப்பது அந்த ஏழைச்சிறார்கள் அவளது சவக்கிடங்குக்கு மண்போடுவது மூடுண்ட அவளது கல்லறையில் அடுத்தடுத்த நாட்களில் துயரம் சொட்டச் சொட்ட அவள் நேசித்த சிறார்கள். இவை கவர்ந்த மாதிரி முன்னைய சட்டகங்கள் கவரவில்லை.

ஒப்பீட்டளவில் லெஸ்ரறின் அவரகிரவை விட இதை (அயோமா) சிறந்தது எனலாம். இன்னும் செப்பனிட்டிருப்பின் ஒரு உன்னத படமாக அமைந்திருக்கும் நம்மவர்கள் தவறாது பார்க்க வேண்டிய படம்.

***அது ஒரு புறமிருக்க சிங்கள நெறியாளர்களின் சிறந்த திரைப்படங்கள் அனைத்தும் பாலியல் உள்ளடக்கம் கொண்டவையாகவே அமைகின்றன. மீஹரக்கா, செய்லம, மாருதய, அவரகிர என்று பட்டியலை நீட்டிக்கொண்டே போகலாம்.***

***ஏன் பராக்கிரமவின் முன்னைய படமான 'சிறிமதுர'வும் பாலியல் உள்ளடக்கம் கொண்ட படம் தான்.***

***கசப்பான ஒரு கேள்வி;***

***சமகாலத்தின் காத்திரமான சிங்கள நெறியாளர்கள் தங்களது தரமான திரைப்படங்களை மக்களிடம் அடையச் செய்ய, வசூலில் தோல்வியுறாது இருக்கத்தான் பாலியல் சார்ந்த கதைகளைத் தேர்வு செய்கிறார்களோ?***

***மிகக் குரூரமான சமரசம்!***

அருணோ அம்பலவாணர்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# இலங்கை பாராளுமன்ற அரசியலில் பெண்கள் — 18

1994ஆம் ஆண்டு நடத்தப்பட்ட ஜனாதிபதித் தேர்தல் இலங்கையின் சரித்திரத்தில் முக்கியத்துவம் வாய்ந்த தேர்தலாகும். இத்தேர்தலின் மூலம் முதற்தடவையாக இலங்கையின் ஜனாதிபதியாக பெண்ணொருவர் தெரிவு செய்யப்பட்டார்.

மூன்றாவது நிறைவேற்றதிகாரம் கொண்ட ஜனாதிபதித் தேர்தலுக்கான வேட்பு மனுத் தாக்கல் ஒக்டோபர் 7ம் திகதி, செய்யப்பட்டது. இதன் போது மொத்தம் 6 பேர் அபேட்சகர்களாக தங்கள் வேட்பு மனுக்களை தாக்கல் செய்தனர்.

சந்திரிகா குமாரணதுங்க - பொது ஜன ஐக்கிய முன்னணி சார்பிலும், காமினி திசாநாயக்கா - ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பிலும், நிஹால் கலப்பத்தி - இலங்கை முற்போக்கு முன்னணி சார்பிலும், ஹரிச்சந்திர விஜேதுங்க - சிங்களயே மகா சம்மத்த பூமி புத்திர பக்ஷய சார்பிலும், ஏ.ஜே.ரணசிங்க, ஹட்சன் சமரசிங்க ஆகியோர் சுயேட்சை வேட்பாளர்களாகவும் களத்தில் இறங்கினர்.

இவர்களில் சந்திரிகா குமாரணதுங்க தனது பாராளுமன்ற அங்கத்துவப் பதவியிலிருந்து விலகி (அதன் பிரகாரம் பிரதமர் பதவியிலிருந்தும் விலகி தனது தாயாரான சிறிமாவோ பண்டாரநாயக்கவை பிரதமர் பதவியை ஏற்கச் செய்துவிட்டே) ஜனாதிபதி வேட்பாளரானார்.

இது இவ்வாறிருக்க வேட்பு மனுத் தாக்கல் செய்து 17வது நாளான ஒக்டோபர் 24ம் திகதியன்று ஐ.தே.கவின் ஜனாதிபதி வேட்பாளரான காமினி திசாநாயக்க கொழும்பு தொட்டலங்கையில் தேர்தல் பிரச்சார கூட்டத்தில் வைத்து குண்டு வெடிப்பில் கொல்லப்பட்டார்.



சிறிமாவோடு பிள்ளைகள்–சுனேத்திரா, சந்திரிகா, அனுர.

## ஐ.தே.கவின் தந்திரோபாயம்

இக்குண்டு வெடிப்பைத் தொடர்ந்து காமினி திசாநாயக்காவின் மனைவி வஜிரா சிறிமதி திசாநாயக்கவை, ஒக்டோபர் 26ம் திகதி ஐ.தே.க.தனது ஜனாதிபதி வேட்பாளராக நியமித்தது. உண்மையில் இந்த காலப்பகுதியில் ஐ.தே.க.வில் அரசியல் முதிர்ச்சியுள்ள ரணில் விக்கிரமசிங்கவை விட்டு விட்டு திருமதி சிறிமா திசாநாயக்கவை வேட்பாளராக்கியதற்கு காரணம் காமினி திசாநாயக்கவின் மரணத்தின் மூலம் கிடைக்கும் அனுதாபத்தை சிறிமதி திசாநாயக்காவின் விதவைத்துவத்தின் மூலம் பயன்படுத்தி வாக்குகளை வேட்டையாடுவதற்கே.

ஐ.தே.கவின் இந்தத் தந்திரோபாயத்தை மேலும் ஊர்ஜிதப்படுத்துவதென்றால், காமினி திசாநாயக்கவுக்கும் பதிலாக அவரது மனைவி சிறிமதியை வேட்பாளராக நியமித்த ஐ.தே.க. தேர்தலில் திருமதி சிறிமதி தோல்வியடைந்ததன் பின் காமினியின் இடத்துக்குப் பதிலாக திருமதி சிறிமாவை பாராளுமன்றத்திற்கு நியமித்திருக்கவில்லை. இதைத் தவிர அனுதாப வாக்குக்காக வேண்டி, 24ம் திகதி கொல்லப்பட்ட காமினி திசாநாயக்கவின் பூதவுடலை 30ம் திகதி வரை "மக்கள் பார்வைக்காக" எனும் பேரில் வைத்திருக்கப்பட்டது. இதைவிட இன்னொரு உதாரணம் ஐ.தே.கவில் பொறுப்பு வாய்ந்த ஒருவரும் முன்னாள் சபாநாயகருமான எம்.எச்.மொகமட் அவர்கள் காலியில் பிரச்சார கூட்டமொன்றின் போது ***"விதவைகளுக்கு வாக்களிக்காதீர்கள். அது எமது மத அனுட்டானங்களுக்கு எதிரானது"*** என தெரிவித்திருந்த போதும் தனது கட்சியின் சார்பில் போட்டியிட்ட சிறிமதி திசாநாயக்காவை ஆதரித்து பிரச்சாரம் செய்தார். எனவே இக்கட்சிகள் தமது பிழைப்புவாதத்துக்காக பெண்களின் விதவைத்துவத்தைப் பயன்படுத்தவும் தவறவில்லை என்பதை விளங்கலாம்.

## போட்டியிலிருந்து கலப்பத்தி விலகல்

இது இப்படியிருக்க ஜனாதிபதி வேட்பாளர்களில் ஒருவரான நிஹால் கலப்பத்தி அவர்கள் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறை'யை நீக்குவதாக சந்திரிகா வாக்குறுதியளித்தால் தான் போட்டியிலிருந்து விலகுவதாக அறிவித்தார். அதைத் தொடர்ந்து சந்திரிகா தாம் 1995 யூலை 15ம் திகதிக்கு முன்னர் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை நீக்குவதாக வாக்குறுதியளித்தார். இதைத் தொடர்ந்து ஒக்டோபர் 28ம் திகதியன்று இலங்கை முற்போக்கு முன்னணி வேட்பாளர் நிஹால் கலப்பத்தி போட்டியிலிருந்து விலகிக் கொண்டார். ஆனால் இது தேர்தல் ஆணையாளரால் சட்டபூர்வமாக அங்கீகரிக்கப்படவில்லை. இ.மு.முவின் தேர்தற் பிரச்சாரங்கள் நிறுத்தப்பட்ட போதும் தேர்தல் நாளன்று இ:மு.முவுக்கும் வாக்களித்தனர் மக்கள்.

எவ்வாறிருந்த போதும் நவம்பர் 9ம் திகதி நடந்த இத்தேர்தலில் கணவரை இழந்த இரு பெண்களுக்கிடையிலேயே பலத்த போட்டி நிலவியது என்பது தான் உண்மை. தேர்தலின் இறுதியில் சந்திரிகா 62.28% வாக்குகளைப் பெற்று ஜனாதிபதியானார். சிறிமதி திசாநாயக்க 35.91% வாக்குகள் பெற்றிருந்தார்.

## மாபெரும் வெற்றி

உலகிலும், இலங்கையிலும் முதற் பெண் பிரதமரான சிறிமாவின் மகள் சந்திரிகா இலங்கையின் முதல் பெண் ஜனாதிபதியானார். அது மட்டுமல்லாது உலகிலேயே தேர்தலின் மூலம் தெரிவு செய்யப்பட்ட நான்காவது பெண் ஜனாதிபதியுமானார். இதைவிட உலகில் நடந்த ஜனாதிபதித் தேர்தல்களிலேயே கூடிய வாக்கு விகிதாசாரத்தைப் பெற்ற இரண்டாவது நபரும் சந்திரிகாவே. (இது பற்றி சில பத்திரிகைகளில் முதலாவது நபரென்றும் உலக சாதனை என்றும் பிரச்சாரம் செய்திருந்தது. அது தவறு முதலாவது கூடிய வாக்கு விகிதாசாரத்தைப் பெற்றிருப்பவர் நெல்சன் மண்டேலாவாவர்.



வஜிரா சிறிமதி திசாநாயக்க

## சந்திரிகா குமாரணதுங்க

சந்திரிகா குமாரணதுங்க அவர்கள் 1945ம் ஆண்டு யூன் மாதம் 29ம் திகதி பிறந்தவர். முப்பத்தெட்டு வருட இடைவெளிக்குள் மூன்று அரச தலைவர்களை உருவாக்கிய பண்டாநாயக்க குடும்பத்தின் உறுப்பினரான சந்திரிகா கொழும்பு சென் பிரிஜட் கல்லூரியில் சிறிமாவோ பயின்ற எஸ்.டபிள்யூ. ஆர்.டி.பண்டாரநாயக்கா ஆகியோரின் இரண்டாவது பிள்ளையான சந்திரிகா சிறுவயதிலிருந்தே அரசியற் சூழலால் உள்வாங்கப்பட்டவர். சந்திரிகாவின் சகோதரி சுனேத்திரா. சகோதரான அனுரா பண்டாரநாயக்க பிற்காலத்தில் எதிர்க்கட்சித் தலைவராக இருந்தவர். தற்போது ஐ.தே.க.வின் பாராளுமன்ற உறுப்பினராக இருக்கிறார்.

தனது ஆரம்பக் கல்வியை புனித பிரிஜட் கல்லூரியில் முடித்துவிட்டு, சட்டக்கல்லூரியில் சட்டம் பயின்று விட்டு, பிரான்சில் பாரிஸ் நகரிலுள்ள சோபோன் பல்கலைக்கழகத்தில் அரசியற் துறையில் பட்டம் பெற்றார். சிங்களம், ஆங்கிலம், பிரெஞ் மொழிகளை சரளமாக பேசக்கூடியவரான சந்திரிகா ரஷ்ய, ஜேர்மனிய, ஹிந்தி ஆகிய மொழிகளிலும் பரிச்சயமுள்ளவர். அபிவிருத்தி பொறுளாதார துறையில் முதுமாணி கல்வியையும் கற்றதுடன் தொடர்பு சாதனதுறையில் குறுகிய கால பாடநெறியையும் பாரிஸில் முடித்தவர்.

"இலங்கையில் நிலம் மற்றும் விவசாய நடவடிக்கையின் மீளுருவாக்கம்", "குடியிருப்புத்திட்டம் - இலங்கையின் அபிவிருத்தி தொடர்பான எதிர்கால தொழில்நுட்ப முறை" எனும் தலைப்பிலும் "இலங்கையில் அரசியல் வன்முறைகள்", "இலங்கையில் கூட்டுறவுச் சங்கங்கள்", "1948இலிருந்து இன்று வரை இலங்கையின் உணவுக்கொள்கையும் அதன் மார்க்கமும்" எனும் தலைப்புகளில் ஆய்வுகளை எழுதியுள்ளார்.

1970இல் ஆட்சியேற்ற ஐக்கிய முன்னணி அரசாங்கத்தின் கீழ் 1972ல் அமைக்கப்பட்ட காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் தலைவராக 1976 வரை கடமையாற்றிய சந்திரிகா, 1977-1977 காலப்பகுதியில் "குடியிருப்பு ஆணைக்குழு"வினது தலைவராகவும் 1978 -1979களில் உணவு மற்றும் சிறு உற்பத்தி சங்கத்தில் விசேட ஆலோசகராகவும், 1988-1991களில் பொதுநலவாய கல்வி நிறுவனத்தில் (லண்டன் பல்கலைக்கழகம்) ஆய்வுதவியாளராகவும் கடமையாற்றிய அனுபவமுள்ள இவர்; புது டில்லியிலுள்ள நேரு பல்கலைக்கழகத்திலும் பிரித்தானிய பிரட்போர்ட் பல்கலைக்கழகத்திலும் வருகை தரு விரிவுரையாளராகவுமுள்ளார்.

> **"உலகில் இரண்டு வருட குறுகிய காலத்தில் முதலமைச்சராகவும் பின்னர் பிரதமராகவும் அதிலிருந்து ஜனாதிபதியாகவும் தெரிவு செய்யப்பட்ட ஒரே பெண்ணாக திருமதி சந்திரிகாவே ..."**

1971 ஜேவிபி கிளர்ச்சியின் போது பிரான்ஸ் நாட்டில் பயின்று கொண்டிருந்த சந்திரிகாவுக்கு, அரசாங்கம் கிளர்ச்சியை அடக்கிய விதம் தொடர்பாக உடன்பாடிருக்கவில்லை. இலங்கை அரசாங்கம் மனித உரிமைகளை மீறுவதை நிறுத்தும்படி கோரி தன்னுடன் பயின்ற 14 இலங்கையருடன் சேர்ந்து கையெழுத்து சேகரித்து பிரதமருக்கு தந்தியனுப்பினார். அப்போது பிரதமராக இருந்தவர் சந்திரிகாவின் தாயார் சிறிமா என்பது குறிப்பிடத்தக்கது. என்ற போதும் இன்னொரு பக்கம் ஜேவிபியின் தலைவர் றோகண விஜேவீர தனது மகள் சந்திரிகாவை கடத்த முயலலாம் என்றும் சந்திரிகாவுக்கு பாதுகாப்பு வழங்கும்படியும் சிறிமா பிரான்ஸ் அரசாங்கத்தைக் கோரியிருந்தார்.

1974இல் சந்திரிகா ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சியின் பெண்கள் பிரிவு, மத்திய கமிட்டி ஆகியவற்றின் உறுப்பினரானார். 1978 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 20ம் திகதி தனது 33வது வயதில் பிரபல நடிகரும் அரசியல் வாதியுமான விஜய குமாரணதுங்கவை மணமுடித்தார். ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சியின் பிரச்சாரத்துக்காக அன்றைய காலப்பகுதியில் 'தினகர' எனும் சிங்களப் பத்திரிகையத் தொடங்கி அதன் நிர்வாகியாகவும் செயற்பட்டார்.

1980இல் ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சியின் நிறைவேற்றுக் குழுவிலும், செயற்பாட்டு அணியிலும் உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டார்.

1983இல் ***"இலங்கை அரசாங்கத்துக்கெதிராக நக்ஸலைட் சதி"*** எனும் பேரில் நக்ஸலைட் இயக்க சந்தேக நபர்கள் என கூறி, ஜே.ஆர். அரசாங்கம் விஜய குமாரணதுங்க உட்பட சிலரை கைது செய்தது. இந்த குற்றச்சாட்டை ஏற்படுத்தியதன் பின்னணியில் சில ஸ்ரீ.ல.சு.க. உறுப்பினர்களும் இருந்தார்கள் என நம்பப்பட்டது. விஜய குமாரணதுங்காவின் மீதான எந்த குற்றச்சாட்டும் ஊர்ஜிதப்படுத்த முடியாமல் போனதால் அவர் விடுதலையானார்.

பின்னர் சந்திரிகாவும் விஜய குமாரணதுங்காவும் ஸ்ரீ.ல.சு.கவிலிருந்து விலகி 1984 ஜனவரி 22இல் ஸ்ரீ லங்கா மக்கள் கட்சியைத் தோற்றுவித்தனர். இக்கட்சியின் தலைவராக ரி.பி.இலங்கரத்தினவும் பொதுச்செயலாளராக விஜயகுமாரணதுங்கவும் உபதலைவராக சந்திரிகாவும் கடமையாற்றினர். 1986இல் ரி.பி.இலங்கரத்ன விலகிக் கொண்டதோடு அப்பதவிக்கு சந்திரிகாவும், கட்சியின் பிரதான அமைப்பாளர் பதவிக்கு விஜயகுமாரணதுங்கவும் நியமிக்கப்பட்டனர். சிலவருடங்களின் பின் இடதுசாரி இயக்கங்களை ஒன்றிணைத்து ஐக்கிய சோஷலிச முன்னணி எனும் பேரில் கட்சியையும் ஸ்தாபித்தனர். இக்கட்சியால் எதிர்கால ஜனாதிபதி வேட்பாளராக விஜயகுமாரணதுங்கவின் பெயர் முன்மொழியப்பட்டிருந்தது. விஜய குமாரணதுங்க இனப்பிரச்சினைக்கு அரசியற் தீர்வு காணும் முயற்சியில் ஈடுபட்டதுடன் யாழ்ப்பாணம் சென்று விடுதலைப் புலிகள் அமைப்புடனும் தமிழ் நாட்டுக்குச் சென்று அங்கிருந்த இலங்கையின் தமிழ் இயக்கங்களையும், தமிழ் நாட்டு முதலமைச்சராக இருந்த எம்.ஜி.இராமச்சந்திரனையும் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினார். இப்பேச்சுவார்த்தையின் போதெல்லாம் சந்திரிகாவும் கலந்து கொண்டிருந்தார்.

1988ஆம் ஆண்டு பெப்ரவரி 16ம் திகதி விஜய குமாரணதுங்க சுடப்பட்டு கொல்லப்பட்டார். ஏற்கனவே 1959 செப்டம்பரில் தந்தை பண்டாரநாயக்காவும் இதே போன்று துப்பாக்கியால் சுட்டுக் கொல்லப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

தாய் சிறிமாவுக்கும் மகள் சந்திரிகாவுக்குமிடையில் சில ஒற்றுமைகள் உண்டு.

தாயாரான சிறிமா தனது கணவர் எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்கவை இழக்கும் போது அவரது வயது நாற்பத்தி இரண்டு கடந்திருந்தது. அதேபோல் மகள் திருமதி சந்திரிகாவும் தனது கணவர் விஜயகுமாரணதுங்கவை இழக்கும்போது அவரது வயதும் நாற்பத்தி இரண்டு. சந்திரிகாவின் தாயார் உலகின் முதலாவது பெண் பிரதமராக தெரிவு செய்யப்படும் போது சந்திரிகாவின் வயது 14. அதேபோல் சந்திரிகா இலங்கையின் முதல் பெண் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்படும் போது அவரது மகள் யசோதராவுக்கும் வயது 14.

தாயார் சிறிமாவோ பண்டாநாயக்க மகள் சந்திரிகாவைப் பற்றி இப்படிக் கூறுகிறார்.

***"....சந்திரிகா அரசியலுக்கு வருவதைத் தவிர்க்க முடியாது என்பதை பிற்காலத்தில் நான் உணர்ந்தேன். ஆனால் மகன் அனுராவோ அல்லது மகள் சந்திரிகாவோ அரசியலுக்கு வருவதை நான் விரும்பியிருக்கவில்லை. நாட்டுக்கு பெரும் சேவை செய்த பண்டாரநாயக்கவின் மறைவை இன்னும் என்னால் மறக்கமுடியவில்லை. எவ்வாறிருந்தாலும் மகளின் ஜாதகத்தில் குறிப்பிடப்பட்டிருந்த படி நாட்டின் தலைவியாக அவள் தெரிவு செய்யப்பட்டாள். ஜாதகத்தை மாற்ற முடியாது அல்லவா. தலைமைத்துவம் சந்திரிகாவுக்கு உரியதென்றால் அது ஆகியே தீரவேண்டும்.***

***....சந்திரிகாவுக்கு ஒத்துழைப்பதற்காகவே நான் அமைச்சரவையில் இணைந்தேன். நான் சம்பளம் எடுக்கவில்லை. பன்னிரண்டு வருடங்களாக நான் பெற்ற அனுபவத்தை மகளுடன் பகிர்ந்து கொண்டு ஒத்துழைப்பேன...." (நவலிய -1994-8-29).***

1992இல் சந்திரிகா மீண்டும் ஸ்ரீ.ல.சு.கவில் இணைந்தார். அவ்வாண்டிலேயே மத்திய குழு உறுப்பினரானார். பின்னர் உப தலைவராகவும் நியமிக்கப்பட்டார். பொது ஜன முன்னணியினதும் உபதலைவராக நியமிக்கப்பட்ட சந்திரிகா 1993 மாகாணசபைத் தேர்தலில் போட்டியிட்டு மேல் மாகாண முதலமைச்சராக தெரிவு செய்யப்பட்டார்.

1994ஓகஸ்ட் பொதுத் தேர்தலில் போட்டியிட்டு இலங்கையின் இரண்டாவது பெண் பிரதமராக தெரிவு செய்யப்பட்டார்.

1994 நவம்பரில் நடந்த ஜனாதிபதித் தேர்தலில் இலங்கையின் தேர்தல் வரலாற்றில் எவரும் பெறாதளவு அதிகளவு வாக்குகளைப் பெற்று ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டார்.

உலகில் இரண்டு வருட குறுகிய காலத்தில் முதலமைச்சராகவும் பின்னர் பிரதமராகவும் அதிலிருந்து ஜனாதிபதியாகவும் தெரிவு செய்யப்பட்ட ஒரே பெண்ணாக திருமதி சந்திரிகாவே திகழ்கிறார்.

வரும்

**என்.சரவணன்**


### 1994 நவ.9இல் நடந்த ஜனாதிபதித் தேர்தல் முடிவுகள்

| | | | |
|---|---|---|---|
| சந்திரிகா பண்டாரநாக்கா குமாரணதுங்க | (PA) | 47,09,205 | 62.28% |
| வஜிரா ஸ்ரீமதி திசாநயக்கா | (UNP) | 27,15,283 | 35.91% |
| ஹட்சன் சமரசிங்க | (Ind.2) | 58,886 | 0.78% |
| ஹரிச்சந்திர விஜயதுங்க | (SMBP) | 32,651 | 0.43% |
| ஏ.ஜே. ரணசிங்க | (Ind.1) | 22,752 | 0.30% |
| நிஹால் கலப்பத்தி | (SLPF) | 22,749 | 0.30% |
| பதிவு செய்யப்பட்ட வாக்குகள் | | 75,61,526 | 98.03% |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | | 1,51,706 | 1.97% |
| பெற்ற பெரும்பான்மை வாக்குகள் | | 19,93,927 | |
| மொத்த வாக்காளர் தொகை | | 1,09,37,279 | |

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





## முற்றுப்புள்ளி வைப்பதே சிறந்தது!

கல்முனை ப.நோ.கூ. சங்கம் இரண்டாக உடைக்கப்பட்டு கரவாகு வடக்கு பிரதேசத்துக்கென (பெரிய நீலாவணை, மருதமுனை, பாண்டிருப்பு) தனியானதோர் கூட்டுறவுச் சங்கமும் ஏனைய பகுதிகளுக்கு என இன்னுமோர் கூட்டுறவுச் சங்கமும் ஏற்படுத்தும் முயற்சிகள் அண்மைக்காலங்களில் நடைபெற்று வருகின்றன.

இவ்விடயம் அம்பாறை மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் 13.10.1994ம் திகதியிலிருந்து கடந்த ஒரு வருடத்துக்கு மேலாக ஆராயப்பட்டு வருகின்றது. இம்மாவட்டத்தில் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் எவரும் இல்லாத காரணத்தால் இவ்விடயத்தில் தமிழ் மக்களின் ஏகோபித்த கருத்தை இக்கூட்டத்தில் தெரிவிக்க வாய்ப்பில்லாமல் போய்விட்டது.

வடகிழக்குஆளுநர், அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், திணைக்களத் தலைவர்கள் ஆகியோர் கலந்துகொண்ட 3 கூட்டங்களில் இதுபற்றி விவாதிக்கப்பட்டுள்ளது. இறுதியாக 12.09.95ம் திகதிநடைபெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் கூட்டுறவுச் சங்கத்தைப் பிரிப்பதற்கு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இம் முடிவை கூட்டுறவுச்சங்க நிருவாகமும் இப்பிரதேச தமிழ் மக்களும் விரும்பவில்லை.

12.11.1995, 25.11.1995 ஆகிய திகதிகளில் சங்கத்தைக்கூட்டி சங்கத்தைப்பிரிக்க நடவடிக்கை எடுக்குமாறு இருதடவைகள் கேட்கப்பட்டபோதும், பல்வேறு சாக்குப் போக்குகளை முன்வைத்து கூட்டுறவுச் சங்கத் தலைவர் நிராகரித்து வந்தார்.

இவ்வாறு இரு தரப்பிலும் இழுபறி நிலையில் இருக்கையில் கல்முனை பிரதேச செயலாளர் ஏ.எல்.எம். பளீல் கூட்டுறவு அபிவிருத்தி பிரதி ஆணையாளர் என்ற வகையில் தனக்குரிய அதிகாரத்தைப் பயன்படுத்தி சங்கப் பொதுச் சபையைக் கடந்த 07.12.1995ம் திகதி கூட்டிச் சுமுகமாகத் தீர்த்துவைத்தார். அக்கூட்டத்தில் வாதப் பிரதிவாதங்கள் எழுந்தன.

தமிழ் உறுப்பினர்கள் பிரிப்பதற்கு ஏகமனதாக எதிர்த்துப் பேசினர். ஆச்சரியம் என்னவென்றால் எம்.எம்.எம். பாஸில், ஏ.எம். அப்துல்லாஹ், ஏ.எல்.அப்துல் காதர் ஆகிய மூன்று முஸ்லிம் உறுப்பினர்களும் - தமிழ்/முஸ்லிம் இனஉறவை முன்னிட்டு பிரிக்கக் கூடாது என்று பேசினர். கல்முனையைப் பொறுத்தவரை இந்நிகழ்ச்சியும் இப்பேச்சும் முக்கியத்துவமானதாகும்.

இறுதியில் இரகசிய வாக்கெடுப்புக்கு விடப்பட்டது. 82பொதுச்சபை உறுப்பினர்களுள் 46பேர் கூட்டத்துக்கு சமூகமளித்திருந்தனர். அவர்களில் 07பேர் மாத்திரமே பிரிப்பதற்கு ஆதரவாக வாக்களித்தனர். பிரிக்க முடியாதிருக்கும் இச்சூழ்நிலையை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு செல்வதாக பிரதேச செயலாளர் கூடியிருந்த பொதுமக்களுக்கு வாக்குறுதியளித்தார்.

இந்நிலையில் ஜனவரியில் கூடவுள்ள மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் இவ்விடயம் மீண்டும் ஆராயப்படுவதாக அறிகிறோம். பிரதேச செயலாளரின் தீர்மானத்திற்கேற்ப இவ்விடயத்திற்கு முற்றுப்புள்ளி கொடுப்பதே சிறந்தது என இப்பிரதேச மக்கள் சார்பாக கேட்டுக்கொள்கிறேன்.

**இரத்தின செல்வம்**
**கல்முனை**

## இது குறைபாடு அல்ல!

'இலங்கை இடதுசாரி இயக்கத்தின் 50 ஆண்டுகள்' பற்றிய விமர்சனத்தில் (சரிநிகர், 87) நூலில் உசாத்துணைக் குறிப்புக்கள் இல்லாமை ஒரு குறைபாடு என்ற விதமாகக் கூறப்பட்டுள்ளது. உசாத்துணைக் குறிப்புக்கள் உண்மைக்கு ஆதாரங்களாக இருக்க அவசியமில்லை. நூலில் உண்மைக்கு மாறான கருத்துக்கள் இருப்பின், அது விமர்சிக்க வேண்டியது. வியாக்கியானங்கள் தவறானவையெனின், அவை விமர்சகரால் சுட்டிக்காட்டப்பட வேண்டியவை. உசாத்துணைக் குறிப்புக்கள் இல்லாமல் எழுதப்படுவது வரலாறல்லாது போய் விடாது. உண்மையில் எல்லா வரலாறுகளும் தனிமனிதரது அல்லது ஒரு குழுவினரது அபிப்பிராயங்களே. நா. சண்முகதாசன் (உசாத்துணை குறிப்புக்களின்றி) 70களில் எழுதிய இரு வரலாற்று நூல்களில் இதை அழகாக விளக்கியிருந்தார்.

நூலாசிரியர் சாதியத்துக்கு எதிரான போராட்டத்தில் இடதுசாரிகளது பங்கை விளக்கியிருந்தார். தேசிய விடுதலைப் போராட்டத்தில் ஏற்பட்ட தவறுகள் பற்றியும் எழுதிஇருந்தார். தீண்டாமை ஒழிப்பு இயக்கத்தை இடதுசாரி இயக்கமாக அவர் சித்திரிக்க முனைந்தாக நினைக்கவில்லை. அந்தளவில் தேசிய விடுதலை இயக்கங்கள் இடதுசாரி இயக்கங்கள் எனக் கொள்ளப்படாததிற் தவறு இல்லை. ஈரோஸ், ஈ.பி.ஆர்.எல்.எப். மட்டுமன்றிப் புலிகள் கூட மார்க்ஸியம் பேசியுள்ளனர். தமிழ் தேசிய விடுதலை இயக்கங்கள் அனைத்துமே தமது தேசியவாத நிலைப்பாட்டை நியாயப்படுத்த மாக்ஸியத்தைப் பயன்படுத்தினவேயன்றி மாக்ஸிய இயக்கங்களாகக் கருதவில்லை.

என்.எல்.எப்.ரியில் ஒரு முன்னாள் மார்க்ஸியக் கட்சி உறுப்பினர் தலைமையில் இருந்தது உண்மை. ஆயினும் அது முடிவில் ஒரு சிறிய தேசியவாதக் குழுவாகிச் சிதைந்து போனது. எவ்வாறாயினும் இந்தியாவினதோ இலங்கையினதோ, அரசுகளது கூலியாகத் தன்னை இழந்து போகாதது குறிப்பிடத்தக்க வியசம் தான். ஆயினும் அதன் தாக்கம் தேசிய விடுதலைப் போராட்டத்தைப் பொறுத்தளவில் அற்பமானதே.

நூல் மூன்று கட்டுரைகளின் விரிவாக்கம் என்பதால்தான் சில 'பாரிய குறைபாடுகளைக் கொண்டுள்ளது. ஆயினும் எந்த ஈழ விடுதலை இயக்கமும் எழுதுகிற வரலாற்றையும் விட நேர்மையாகவே எழுதப்பட்டுள்ளது. டிசம்பர்95 சுபமங்களாவில் வந்த விமர்சனத்தைச் சரிநிகர் விமர்சகர் இப்போதைக்குப் பார்த்திருக்கலாம். எனவே 'கேள்விகள் பற்றிய அவரது ஆசை நிறைவேறியிருக்குமென நம்புகிறேன்.

ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியத்தின் தமிழ் வசனங்கள் ஏன் **தொங்குவது தலைகீழாக** என்று விளக்க அவரது ஆங்கில அறிவை 'மாதவன்' குறை கூறுவது நியாயமில்லை. **நூலாசிரியைக்கு வசனம் எழுத வராது ஒழுங்காக** அவரது வாக்கிய்யமைப்பு அவருக்கே உரியது.

***சிவசேகரம்***
***லண்டன்***

## பரீட்சை மேற்பார்வையாளர் நியமனத்தில் ஊழல்!

இலங்கை பரீச்சைத்திணைக்களத்தினால் நடத்தப்படும் க.பொ.த. உயர்தர, க.பொ.த. சாதாரணதரப் பரீட்சைக்கு மேற்பார்வையாளர்களும், நிரந்தர நோக்குநர்களும் நியமிக்கும் விஷயத்தில் ஊழல் நடைபெறுவது தெரியவந்துள்ளது. கல்முனை கல்விப் பிரதேசத்தைப் பொறுத்தவரையில் இந்தஊழல் உச்சநிலையை அடைந்து வருகிறது. மேற்பார்வையாளர்களையும், நிரந்தரநோக்குநர்களையும் வலயக்கல்விப்பணிப்பாளரும், உதவிக்கல்விப் பணிப்பாளரும் பங்கு போட்டு எடுத்துக் கொண்டு தங்களை தனிமையில் சந்திப்பவர்களுக்கும், முதுகு சொறிபவர்களுக்கும், குடும்ப அங்கத்தவர்களுக்கும் மட்டுமே கொடுத்து வருகிறார்கள்.

சேவைமூப்பு, அனுபவம், கல்வித்தரம் என்பன கவனிக்கப்படுவதில்லை. இரண்டு பரீட்சைகளுக்கும் தொடர்ந்துகுறிப்பிட்டவர்கள் தான் நியமிக்கப்படுகிறார்கள். இந்த அநீதியை எடுத்துக்காட்டினால் எங்களுக்கு நம்பிக்கையானவர்களுக்குத்தான் நியமனம் வழங்குவோம் என்று தட்டிக்கழித்து விடுகிறார்கள். கல்வி அலுவலகத்தில் கடமைசெய்யும் திட்டமிடல் அதிகாரிக்கும் ஆசிரியர் நலன்புரி உத்தியோகஸ்தருக்கும் பங்கு போடும் போது முன்னுரிமை வழங்கப்படுகிறது. ஆசிரியர் சங்கத்தலைவருக்கும், செயலாளருக்கும், முக்கிய உறுப்பினர்களுக்கும் நியமனம் வழங்கி வாய்க்குப் பூட்டுப் போட்டுவிடுகிறார்கள். எந்த மாற்றம் ஏற்பட்டாலும் குறிப்பிட்ட ஒரு சிலர் தான் ஆண்டாண்டு தோறும் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள்.

ஒரு மேற்பார்வையாளர் நிரந்தர நோக்குகளைத்தவிர பரீட்சார்த்திகளின் தொகையைப் பொறுத்து மேலதிகமாக ஐந்து அல்லது ஆறு சாதாரண நோக்குநர்களை சேர்த்துக் கொள்ளலாம். இதில் கூட வலயக்கல்விப்பணிப்பாளரும், பிரதிக்கல்விப் பணிப்பாளரும் தலையிடுகிறார்கள். மேற்பார்வையாளர் தனக்கு நம்பிக்கையானவரை விடுத்து கல்விப்பணிப்பாளருக்கு வேண்டியவர்களை சேர்த்துக்கொள்ள வேண்டிய ஒரு இக்கட்டான நிலைக்கு நிர்பந்திக்கப்படுகிறார்கள். இதில் ஆச்சரியத்துக்குரிய விடயம் என்னவென்றால் கல்முனையில் உள்ள ஒரு பிரதிக் கல்விப்பணிப்பாளரின் குடும்ப அங்கத்தவர் பலர் தொடர்ந்து பரீட்சைக் கடமையில் ஈடுபட்டுவருகிறார்கள். இதில் சிலர் பயிலுநர் ஆசிரியர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

பரீட்சை விடைத்தாள் திருத்தும் நிலையத்துக்கு இணைப்பதிகாரியாக அக்கல்லூரி அதிபர் நியமிக்கப்படுவது [illegible]க்கம். அவர் இல்லாத போது அந்த வாய்ப்பு அடுத்தவருக்கு வழங்கப்படும். அதைக்கூடத் தனக்குத்தரவேண்டுமென்று அடம் பிடித்து ஒரு கல்விப் பணிப்பாளர் குந்திக்கொண்டு இருக்கிறார். நேர்மையாகவும், ஒழுங்காகவும் நடைபெறவேண்டிய பரீட்சைக்கடமை கல்முனையைப் பொறுத்தவரையில் குரங்கின் கையில் கொடுத்த பூமாலையைப் போலாகிறது.

கல்விப்பணிப்பாளர்களின் கையில் இது ஒப்படைக்கப்பட்டிருக்கும் வரை ஊழல் நடைபெறுவதுவதைத் தவிர்க்க முடியாது. இந்தப் பொறுப்புக்கள் கல்வித்திணைக்களத்தின் கைக்குமாற வேண்டும். பரீட்சை வினாத்தாள் திருத்துவதற்கு விண்ணப்பம் கோரி பரீட்சகர்களை தெரிவு செய்வது போல் இதற்கும் தெரிவு செய்ய வேண்டும். இல்லாவிட்டால் ஊழல் நடைபெறுவதையும், செல்வாக்கு பயன்படுத்தப்படுவதையும் ஒரு போதும் நிறுத்தி விட முடியாது போல் தெரிகிறது.

***மு.இ.மு.***
***கல்முனை***

## மர்மம் தான் என்ன?

மனித உரிமைகளுக்கான யாழ் பல்கலைக்கழக ஆசிரியர்களின் அறிக்கைகளை சரிநிகர் பத்திரிகைளில் வாசித்ததுண்டு. அவ்வறிக்கைகளின் தெரிந்தேடுக்கப்பட்ட பகுதிகளை, ஸ்ரீலங்கா அரசாங்கங்களின் பிரச்சார பீரங்கிகளான வானொலி, தொலைக்காட்சி,மற்றும் ஏரிக்கரைப் பத்திரிகைகள், இவனாதப் பத்திரிகைகளில் "சிறப்புச்செய்யப்பட்டு" கேட்டும் பார்த்தும், வாசித்தும் வந்துள்ளேன்.

நடுநிலைமை என்ற சிறப்பு பதத்தினை கொண்டதாக காட்டிக்கொண்டு, அறிக்கைகளை கடைவிரித்திருந்தாலும் அவற்றை ஊன்றி நுகரும் எமக்கு, அவை ஒருதலைப் பட்சமானவை என்பதை உணர அதிகம் நேரமெடுப்பதில்லை. அவை பெரிதும் புலி எதிர்ப்பு வியாதியாலேயே ஆவணப்படுத்தப்பட்டிருக்கும். சிங்கள பௌத்த பேரினவாதிகள், இவ்வறிக்கையினை கையிலேந்தி, தமிழரின் உரிமை, உடமை, உணர்வு என்பனவற்றோடு உயிரினையும் அழிக்க ஆயுதமாக கடந்த காலங்களில் ஏன் நிகழ்காலத்திலும் கொண்டிருக்கிறார்கள் என்பதே என் யூகம்.

ஆயுத உதவிகளை பெற்று, தமிழ் படுகொலைகளைச் செய்வதற்கும், சர்வதேச நாடுகளின் கண்டனக்கணைகளில் இருந்து தப்பிக் கொள்வதற்கும் பேரினவாத அரசுக்கு இவ்வறிக்கைகள் பெரும் தொண்டு புரிந்து வரும் எனக் கருதுகிறேன்.

நீண்ட நாட்களாக என்னைக்குடையும் வினா என்னவெனில் இவ்வறிக்கைக்கான ஆசிரிய அமைப்பு எங்குள்ளது என்பதாகும். வடபகுதியில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை எனக் கூறுகிறார்கள். ஆனால் அறிக்கையில் யாழ்ப்பாணம் எனக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. மாற்றுக் கருத்துக்கள் மறுக்கப்பட்ட யாழ்ப்பாணத்தில் இரகசியமாக இருந்த கொண்டு அறிக்யை வெளியிடுவதாக பிரமையை ஏற்படுத்த முயற்சிக்கிறார்களா இவர்கள்? தற்போது கேட்க வேண்டி நேரம். கேட்க வேண்டி கட்டாயம் வந்துள்ளதால் இக்கேள்விகளை எழுப்புவது அவசியமானது.

கேலியாக கிண்டலாக அல்ல தெரியாததாலேயே கேட்கிறேன். இப்படியான ஒரு அமைப்பு உள்ளதா அல்லது கற்பனையா? மாற்றுக் கருத்து அவசியம். அதை நான் ஆராதிப்பவள். மகிழ்வுடன் வரவேற்பவள். ஆனால் யாழ்ப்பாணத்தில் (?) மறைந்திருக்கும் மர்மம் என்ன? ஒருதலைப்பட்ச பாவம் என்ன? துதிபாடும் இராகம் என்ன?

கற்பனை என நான் வினவ காரணம் என்னவெனில் ரிவிரெச அதாவது சூரியக்கதிர் எனும் நாமம் சூட்டப்பட்டு சமாதான யுத்தம் எனக் கூறிக்கொண்டு அரசினால் மேற்கொள்ளப்பட்ட அராஜக நடவடிக்கையினால் அப்பாவித் தமிழ்மக்கள் வீடுவாசல் உயிர், உடமையிழந்து ஓடியவேளை, ஓடிய உண்மையை நாம் சர்வதேச ஒலி,ஒளி ஊடகங்களினூடாக அறிந்திருந்த போதும் ஸ்ரீலங்கா அரசின் கட்டுப்பாடடின் அடங்கி நடுங்கி வாசிக்கும் ஊடங்கள் பல கற்பனைக் கதைகட்டி, கதையளந்தன அக்கதையினை ஒத்தகதையாகவே பல்கலைக்கழக ஆசிரியர்களின் அறிக்கையும் இருந்ததை காணக்கூடிதாக இருந்தது. அவ்வறிக்கைக்கு ஏரிக்கரை, பத்திரிகையும் முப்பக்கம் தந்தது. ஏனவே எனது வினா நியாயமானது ஒன்றல்வா?

காலங்காலமாக துன்புறுத்திய அரசபடை, தமிழ் மக்களின் உரிமைகளுக்கு நியாயமானத்தீர்வினை வைக்காது, தமிழ் மக்களின் போராட்டச் சக்தியினை முதுகுகெலும்பை நசுக்க முற்படும் அரசபடை, செல்லடித்து விமானக் குண்டுமழை பொழிந்து முன்னேறும் பொழுது மக்கள் எப்படித் தங்குவர் என்ற கேள்வி எப்படி யாழ் பல்கலைக்கழக ஆசிரியர் குழுவுக்கு எழாமல் போனது? அப்படியாயின் எப்படி ஒத்தகருத்து கதை... புரியவில்லையே? கதையளப்பதும் கற்பனையில் ஆள்வதும் அரசின் ஜனநாயகமாகலாம். அதை நாம் ஜீரணிக்கலாம். ஆனால் மனித உரிமைகளுக்கான பல்கலைக்கழக ஆசிரியர்களின் ஜனநாயகம் இதுவென்றால் நாம் எப்படி ஜீரணிப்பது? எனவேதான் இது கற்பனை அமைப்பா என கேட்கவேண்டியுள்ளது.

***சேகாலை மலர்***

## மட்டு.......

ஆசிரியர் குழுவின் அனுமதிக்காகவும் மேடையேற்றப்பட்டது. முன்னிரு நோக்கங்களிலும் நாடக மேடையேற்றம் திருப்தியானதாக அமைந்தாலும் ஆசிரியர் குழுவின் அங்கீகாரம் கிடைக்காததனால் விழாவின் போது நாடகம் மேடையேற்றப்படவில்லை.

நாடகத்தின் கதை இதுதான்: சிறுவயதிலிருந்தே மரங்களிலும் வீட்டுக்கூரைகளிலும் ஏறி நின்று முகில்களின் நடுவே சிவத்த ஆடையணிந்த ஒரு தேவதை தன்னை நோக்கி வருவதனை இரசிக்கின்ற ஒரு மனநோயாளியான ஒரு இளைஞன் தனது வளர்ந்த பருவத்திலும் கூட இதே பழக்கமுடையவனாக இருக்கிறான். இவனுக்கு ஒரு சகோதரி உண்டு. இவனது இந்த செயற்பாட்டை இல்லாதொழிக்க பலவித சிகிச்சை முறைகளை மேற்கொண்ட போதிலும் எல்லா முயற்சிகளும் தோல்வியடைகின்றன.

இந்த நிலையில் அவ்வூருக்கு ஒரு பிரபல்யம் வாய்ந்ததாக கூறப்படும் ஒரு சாமியார் வருகிறார். அவரை அணுகினால் இந்த நோயை தீர்ப்பார் என்று அவனது பெற்றோர் செல்கின்றனர். சம்மதித்த சாமியார் மந்திர உச்சாடனம், கலையாட்டம் தீச்சுவாலையினால் அதிர்ச்சி வைத்தியம் போன்றவற்றில் இதனை குணப்படுத்தலாம் என்கின்றார். அந்த நோயாளிமீது அன்பு கொண்டவளாக அவளது சகோதரி அதனை வெறுக்கிறாள். ஆனாலும் அவள் பாடசாலை சென்ற பின்னர் மேற்படி நிகழ்வுகள் இடம்பெறுகின்றது. பாடசாலை விட்டு வந்தவள் இச்செயல் மீது ஆத்திரம் கொண்டு சகோதரனை இழுத்து செல்கிறாள். சாமியார் இவளது இச்செயலுக்கு சாபமிடுகிறார்.

அந்த மன நோயாளியுடன் கஷ்டப்பட வேண்டிவரும் என பெற்றோர் சொல்ல அவள் அதற்கு தான் படித்து பெரியவளாகி தனது சகோதரனுக்கு ஒரு மொட்டை மாடி அமைத்துக்கொடுத்தால் அவன் அதிலிருந்து யாருக்கும் தொந்தரவு செய்யாமல் தன் பாட்டில் இருக்கமுடியும் எனச் சொல்லி விட்டு செல்கிறாள். நாடகம் முடிவுறுகிறது.

இந்த நாடகம் நல்ல தொரு செய்தியைத்தான் சொல்லியிருக்கிறது. ஆனால் ஆசிரியர் குழு அனுமதியளிக்காமைக்கு சொன்ன காரணம் 'மத நம்பிக்கைகளை கொச்சைப்படுத்தக்கூடாது' என்பதாகும். இதற்கு மேலாக என்ன அபிப்பிராயம் இருக்கிறதோ தெரியாது. ஆனால் நாடகம் மேடையேற்றப்படவில்லை. இந்தச் சம்பவம் நாடக நெறியாளர் நடிகர்கள் ஏனைய ஈடுபாட்டாளர்கள் என்பவர்களின் மனதை புண்படுத்தியிருப்பதுடன் இனிவரும் நாட்களில் இத்தகைய நாடக முயற்சிகள் மேற்கொள்ள முடியாத அளவுக்கு முட்டுக்கட்டை போட்டுள்ளது.

இந்த நாடகத்தை கிழக்கு பல்கலைக்கழக நாடகமும் அரங்கியலும் விரிவுரையாளர் சி. ஜெயசங்கர் மட்/ இந்துக்கல்லூரி ஆசிரியர் குணசீலன் ஆதரவுடன் அப்பாடசாலை மாணவர்களைக் கொண்டு தயாரித்தார்.

இந்த இக்கட்டான சூழ்நிலைகளில் இவர்கள் யாவரும் தங்களது சொந்தக் கருமங்களைப் புறக்கணித்து இரண்டு மாதங்களுக்கு மேலாக இம்முயற்சியில் ஈடுபட்டனர்.

ஒரு நாள் ஒத்திகைபார்த்துக் கொண்டிருந்த போது பாடசாலைக்கு அண்மையில் ஏற்பட்ட குண்டு புரளியினால் மாணவர்களும் ஆசிரியரும் பாதுகாப்பு படையினரால் தாக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

இத்கைய பிரயத்தனங்களுக்கு மத்தியில் ஒத்திகை பார்க்கப்பட்ட நாடகம் ஒரு சில ஆசிரியர்களின் ஆட்சேபனையினால் மேடையேற்றப்படவில்லை. ஏனைய ஆசிரியர்களும் அதிபர் உட்பட தமது கருத்துக்களை இது விடயத்தில் தெரிவிக்காமல் மௌனமாகியது ஏனோ தெரியவில்லை.

இது ஒரு சிறுசம்பவம். இது குறித்து அலட்டிக்கொள்ளத் தேவையில்லை என எல்லோரும் இருந்து விட்டாலும் நல்ல நாடகங்கள் மேடையேற்றப்படவேண்டும் என எண்ணுகின்ற போது இந்தச் சம்பவம் இத்தகைய நாடக முயற்சிகளுக்கான முட்டுக்கட்டை என்பதை எல்லோரும் உணரவேண்டும்.

***வெ. தவராஜா***
***மட்டக்களப்பு***

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சரிநிகர்
SARINIHAR
சரிநிகர்

# ஜனநாயகம் எப்போதும் வராது!

ஓகஸ்ட் மாதம் மூன்றாம் திகதி பொதுஜனஐக்கிய முன்னணி அரசாங்கத்தால் வெளியிடப்பட்டிருந்த தீர்வுப்பொதி ஜனவரி 16ம் திகதி அதனால் சட்ட ஆவணமாக தயாரிச்கப்பட்டு வெளியிடப்பட்டிருக்கிறது.

ஓகஸ்ட் மூன்றில் இப்பொதி வெளியான போது இருந்த கொஞ்சநஞ்ச நம்பிக்கையைக் கூட இப்போதைய சட்ட ஆவணம் சிதறடித்திருக்கிறது என்று தெரிகிறது.

சட்ட ஆவணமாக வெளியிடப்பட்டுள்ள இத்தீர்வுத் திட்டத்தில் பிராந்தியங்களின் பெயர்கள், எல்லைகள் குறித்து பொ.ஐ.மு. அரசு குறிப்பிடவில்லை. இவை குறித்த பொ.ஐ.மு.வின் நிலைப்பாடும் என்ன என்பது குறித்தும் தெளிவுபடுத்தப்படவில்லை.

வட-கிழக்கு இணைப்புப் பற்றி எதுவும் குறிப்பிடப்படாதது, பிராந்திய அரசைக் கலைக்கும் அதிகாரத்தை மத்திய அரசுக்கு வழங்கியிருப்பது, காணிகள் விடயத்தில் மத்திய அரசின் குறுக்கீடு, பௌத்த மதத்துக்கான அரசின் விசேட சலுகை, திட்டமிட்ட சிங்கள குடியேற்றங்களுக்கான தீர்வின்மை, தேசியக்கொடி குறித்த அபிப்பிராயம் கருத்திற்கெடுத்துக் கொள்ளப்படாமை என்று ஒரு நீண்ட பட்டியலிட்டு ஈ.பி.ஆர்.எல்.எப்., ஈரோஸ், புளொட், ரெலோ ஆகிய நான்கு கட்சிகளின் கூட்டு ஓர் அறிக்கையை வெளியிட்டு அரசின் இப்பொதியை கண்டித்திருக்கின்றது.

ஓகஸ்ட் மூன்றில் வெளியிடப்பட்ட தீர்வு திட்ட ஆலோசனைகளில் சில மாற்றங்கள் செய்யப்பட்ட வேண்டுமென ஈ.பி.ஆர்.எல்.எப். வலியுறுத்திய போதும், அம்மாற்றங்கள் தொடர்பாக அரசு கவனத்தில் கொள்ளவில்லை என முணுமுணுத்திருக்கிறது சந்திரிகா அரசாங்கத்துக்கு ஆதரவளித்து வரும் அக்கட்சி.

ஈ.பி.ஆர்.எல்.எப்பினுடைய அபிப்பிராயங்களை மட்டுமல்ல, தமிழ்க்கட்சிகள் எவற்றினதும் அபிப்பிராயங்களைக் கவனத்தில் கொள்ளாமலே அலட்சியப் படுத்தி இருக்கிறது அரசாங்கம்.

இதனால், வட- கிழக்கு முழுமையாக இணைந்த ஓர் சபையைக் கொடுப்பதற்கு இவ்வரசாங்கத்திற்கு விருப்பம் இருப்பதாகத் தெரியவில்லை.கிழக்கைத் துண்டாடவே முயற்சிப்பதாகத் தோன்றியுள்ளது என்று சொல்ல வேண்டிய நிர்பந்தத்தையும் அதற்கு ஏற்படுத்தி விட்டது அரசு.

ஜனாதிபதி பிரேமதாசவுக்குப் பிறகு ஜனாதிபதி சந்திரிகா மீது நம்பிக்கை வைத்து இதைவிட நெருக்கடி ஈ.பி.டி.பிக்கு. தமிழ் முஸ்லிம், மலையக மக்கள் மீதான அரச பயங்கரவாதத்திற்கு துணைசெய்யும் அவரசரகால சட்ட நீடிப்புக்கு ஆதரவாக மாதாமாதம் கையுயர்த்தும் ஈ.பி.டி.யே, வட - கிழக்குக்கு சுயாட்சி வழங்கினால் பிரிந்து போய்விடுமோ என்ற சந்தேகத்தோடு தீர்வுமுயற்சியை ஆரம்பித்தால், இனசமத்துவத்தை நிலைநிறுத்தும் தீர்வை எட்ட முடியாமல் போய்விடும் என்று அறிக்கை விட நேர்ந்திருக்கிறது.

இலங்கை - இந்திய ஒப்பந்தம் தங்களுக்கு வழங்கிய அதிகாரங்களையே எதிர்த்தவர்கள் அதனிலும் குறைவான சந்திரிகாவின் அதிகாரப்பரவலாக்கல் யோசனைகளை எவ்வாறு ஏற்றக்கொள்ள முடியும் என்று கேள்வியெழுப்புகிறார் லெப்டினன்ட் ஜெனரல் கல்கட். இதனை ஒரு போதும் இலங்கைத் தமிழர்கள் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள் என்றும் அவர் கூறுகிறார்.

ஓகஸ்ட் 3 பொதியை விட ஜனவரி16இல் வெளியிடப்பட்ட சட்ட ஆவணம் போதுமானதல்ல; அது இல- இந்திய ஒப்பந்தத்தை விடக் குறைவானது என்று அபிப்பிராயங்கள் எழுந்து கொண்டிருக்கின்ற நேரத்தில் இச்சட்ட ஆவணத்தை வெளியிட்டவரான பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் ஜன21இல் ஐலன்டுக்கு அளித்த பேட்டியில் ஓகஸ்ட் மூன்றில் வெளியிடப்பட்ட ஆவணத்துக்கும், தற்போது வெளியிடப்பட்ட ஆவணத்திற்கும் டையே வேறுபாடுகள் எதுவும் இல்லை என்று தெரிவித்திருக்கிறார். மிகவும் எளியவார்த்தைகளில் ஓகஸ்ட் மூன்றில் வெளியிட்ட 5பக்க அறிக்கையே இப்போது மிகவும் விரிவாகவும், தெளிவாகவும் 35பக்க சட்ட ஆவணமாக வெளியிடப்பட்டிருக்கிறது என்றும் சொல்கிறார் அவர். அதாவது எல்லாவிதமான அதிகாரப் பகிர்வு முயற்சிகளும் இலங்கையின் ஐக்கியத்தையம் பிரசேத ஒருமைப்பாட்டையும் பேணும் விதத்திலேயே அமையும் என்று ஓகஸ்ட் 3இல் வெளியிடப்பட்ட ஆவணத்திலேயே குறிப்பிடப்பட்டுள்ளதென்கிறார்.

இதனைப் புரிந்துகொண்டதாலோ என்னவோ த.வி.கூட்டணி அரசின் தீர்வு யோசனைகள் சட்டவரைவில் நன்கு தெளிவாக்கப்பட்டுள்ளன. எனவே இதனை ஆழமாகவும், கவனமாகவும், பூரணமாகவும் ஆராய வேண்டுமென்று பேராசிரியரை அடியொற்றி அறிக்கை விடுத்திருக்கிறது

தொடர்ந்து அவர் சொல்கிறார்; தேசியக்கொடி தேசியகீதம் ஆகியவற்றை இல்லாமல் செய்யும் எண்ணம் எமக்கு ஒரு போதும் இருந்ததில்லை. இதேபோல் இன்றைய சட்டத்திலும் கூட பௌத்திற்கு முன்னுரிமை இருக்கவே செய்கிறது. இது எந்த விதமான அசௌகரியங்களையும் மற்றைய மதங்களுக்கு ஏற்படுத்தவில்லையே என்று கேட்கிறார் அவர். இந்த இடத்தில், பௌத்தத்தைப் பேண அரசினால் ஏற்படுத்தப்படும் நடவடிக்கையை இந்து இஸ்லாம், கிறிஸ்தவம் ஆகியவற்றுக்கும் விரிவுபடுத்துவது பௌத்ததை எவ்வாறு பாதிக்கும் என்றெழுகிற கேள்விக்கு அவருடைய பதில் என்னவாக இருக்கப் போகிறதோ தெரியவில்லை.

ஆக, பேராசிரியர் பீரிஸ் கூறுவதைப்பார்த்தால் இனப்பிரச்சினைக்கான தீர்வாக என்ன வழங்கப்படவேண்டுமென்று முன்கூட்டியே அரசாங்கத்தால் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. அதனையே ஓகஸ்ட் மூன்றிலும், பின்னர் சட்ட ஆவணமாகவும் வெளியிடப்பட்டிருக்கிறது. அத்தீர்வு ஏற்கெனவே வழங்கப்பட்டதீர்வை விட முன்னேறியதான ஒன்றல்ல. அது இலங்கையின் ஏனைய இனங்களுக்கான ஜனநாயக உரிமைகளை வழங்கிவிடக்கூடியளவுக்கான அடிப்படைகளைக் கொண்டதுமல்ல என்பது வெளிப்படை.

ஐ.தே.க. என்றால் என்ன சு.க. என்றால் என்ன இனப்பிரச்சினை தீர்வு என்று வரும் போது, சிங்கள பௌத்த பேரினவாத நிலைப்பாடே அதன் அடிப்படையாக இருக்கிறது. புதிய சந்திரிகா அரசாங்கமும் அதற்கு விலக்கல்ல என்பது இப்போது நிரூபணமாகியிருக்கிறது.

சந்திரிகா அரசை இன்னமும் ஒரு முற்போக்கான அரசாகக் கருதி முண்டு கொடுத்துக் கொண்டிருக்கும் வாசுதேவ நாணயக்கார அரசின் இத்தீர்வு திட்டத்தைப் பற்றி என்ன சொல்லப் போகிறார்?

அரசுடன் இணைந்துள்ள இடதுசாரிக் கட்சிகளான ல.ச.ச.கட்சி, இ.க.கட்சி ஆகியன 1972 இல் இழைத்த அதே தவறை மீண்டும் இழைக்கப் போகிறனவா?

அரசுக்கு முண்டு கொடுத்துக் கொண்டிருக்கும் முஸ்லிம், மலையக மக்களின் தலைவர்கள் இந்தத் தீர்வுப் பொதியை ஏற்றுக்கொள்ளப் போகிறார்களா? என்றெல்லாம் கேள்விகள் நீண்டு கொண்டே செல்கின்றன.

இதுதான் அரசின் தீர்வுஎன்றால் அரசு ஏற்கெனவே கூறிய ஜனநாயகம் சமாதானம் என்பனவை எவ்வாறு வரும்? எப்போது வரும்? கவிஞர் லாங்கடன் ஹியூஸ் சொல்கிறார்.

ஜனநாகம் இன்று வராது
இந்த வருடம்
இல்லை எப்போதும் வராது
சமரசத்தின் வாயிலாகவும் பயத்தாலும்.

# கட்டுப்பாடான இராணுவத்தின் தாக்குதல்கள்

சன்சைன் இராணுவ நடவடிக்கை குறித்து இராணுவப் பேச்சாளர் சரத் முனசிங்க ரூபவாஹினிக்கு வழங்கிய பேட்டியில், ''உலகத்திலேயே முதன் முறையாக பொதுமக்கள் எவரும் பலியாகாமல் நடத்தப்பட்ட இராணுவ நடவடிக்கை ''சன்சைன்'' இராணுவ படவடிக்கையே. இராணுவம் மிகுந்த கட்டப்பாட்டுடன் நடந்து வருகிறது''. எனக் குறிப்பிட்டார்.

இராணுவ நடவடிக்கை நடத்தப்பட்ட பிரதேசத்துள் மக்கள் எவரும் இல்லை. ஆகவே, மக்கள் பலியாக வாய்ப்பும் இல்லை. இராணுவ நடவடிக்கைப் பிரதேசத்திற்கு வெளியே, எறிகணைத்தாக்குதல்களாலும், விமானத்தாக்குதல்களாலும் மக்கள் பலியானதைப் பற்றி இராணுவப் பேச்சாளர் அறியவில்லையா? அல்லது, இராணுவம் இராணுவ நடவடிக்கைப் பிரதேசத்திற்குள் மட்டும் தான் ''மிகுந்த கட்டுப்பாட்டுடன்'' நடப்பதாக தீர்மானித்து இருந்ததா?

எறிகணைத் தாக்குதல்களாலும், விமானத் தாக்குதல்களாலும் கொல்லப்பட்ட மக்களின் விபரம் பெறக்கூடியவையாக இருந்தவை மட்டுமே, இங்கே இங்கே தரப்படுகிது இதை விடக்கூடுதலானவர்கள் கொல்லப்பட்டும், காயமடைந்தும் உள்ளார்கள்.

20-11-95- நாவற்குழிப்பகுதியில் எறிகணை வீச்சு; ஒரு சிறுவன் பலி; 11பேர் காயம்.

21-11-95- முல்லை மாவட்டம் - நெடுங்கேணி, கற்சிலைமடு மக்கள் குடியிருப்புக்கள் மீது சுப்பர் சோனிக் தாக்குதல். ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஐவர் உட்பட ஆறு பேர் பலி.

நெடுங்கேணி, நம்பைக்குளம் பகுதியில் மூவர் பலி, பொலிகண்டியில் புக்காரா ரொக்கட் தாக்குதலுக்கு மூவர் பலி.

25-11-95- வல்வெட்டித்துறையில் தெணியம்பை பகுதியில் புக்காரா தாக்குதல்; ஒருவர் பலி.

கைதடியில் எறிகணை வீச்சு மூவர் காயம்.

26-11-95- வல்வெட்டித்துறை ஊரிக்காடு, கம்பர் மலைப் பகுதியில் புக்காரா தாக்குதல் இருவர் பலி. 9பேர் காயம்.

27-11-95- தொண்டமானாறு கெருடாவில் பகுதியில் எறிகணை வீச்சுக்கு ஒருவர் பலி.

இவை ''இராணுவத்தின் மிகுந்த கட்டுப்பாட்டை'' எடுத்துக்காட்ட சில உதாரணங்க மட்டுமே.




எல்லோரும் எதிர்பார்த்துக் கொண்டிருந்த நிகழ்வே இது. கிழக்கின் மட்டக்களப்பில் அரச படைகளால் பாரியதோர் இராணுவ சம்பவங்கள் தொடருமென,

மட்டக்களப்பின் பிரதம இராணுவ அதிகாரி பிரிகேடியர் சிறில் பீரிஸ் அவர்களின் தலைமையில் தென்னிலங்கையிலிருந்தும் , அம்பாறை, திருகோணமலை பகுதிகளிலிருந்தும் கொண்டு வந்து குவிக்கப்பட்ட ஆறாயிரத்துக்கு மேற்பட்ட அரசபடைகளால் றிவிரண இராணுவ நடவடிக்கை தொடர்கிறது.

ஜனவரி 17ம் திகதி புதன் கிழமை அதிகாலை வேளையில் இவ் இராணுவ நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டது. மட்டக்களப்பின் மேற்குப் பிரதேசங்களான படுவான்கரை, வாகரை, வவுணதீவு, உன்னிச்சை, வெல்லாவெளி ஆகிய பிரதேசங்களை நோக்கியே (இப்பிரதேசங்கள் புலிகளின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்து வந்துள்ளன) இராணுவம் தாக்குதலை நடத்துகிறது.

இப்பிரதேசங்கள் மட்டக்களப்பின் மேற்கு பகுதிகளாகும். இவை இராணுவத்தால் தடை செய்யப்பட்ட பிரதேசங்களாக தற்போது அறிவிக்கப்பட்டுள்ளன. இப்பிரதேசங்களுக்கு பொதுமக்கள் செல்லவோ அங்கிருந்து வரவோ முழுமையாக தடைவிதிக்கப்பட்டுள்ளது. இதெல்லாவற்றையும் மீறி ஆயிரக் கணக்கான அகதிகள் மூட்டை முடிச்சுகளுடன் ஒடி வந்து கொண்டுதானிருக்கிறார்கள்.

பழுகாமம் ஊடாக கொக்கட்டிச் சோலை நோக்கி ஓர் அணியும், வலையிறவு ஊடாக வவுணதீவை நோக்கி ஓர் அணியும், ஏறாவூர் புல்லுமலை பகுதியினூடாக ஓர் அணியும் செங்கலடி பதுளை வீதியினூடாக ஓர் அணியும் இப்பிரதேசங்களை நோக்கி நகர்த்தப்பட்டுள்ளன.

ராங்கிகள், கவசவாகனங்கள் பீரங்கிகள் சகிதம் ஆறாயிரத்துக்கு மேற்பட்ட அரசபடைகள் இந்நடவடிக்கையில் இறங்கியுள்ளன வெல்லாவெளி, படுவான்கரைப் பகுதி நடவடிக்கைகளுக்கு விசேட அதிரடிப்படையினரும் துணை நிற்கின்றனர்.

புதன்கிழமை தொடக்கம் மட்டக்களப்பின் மேற்குப் பகுதிகளை நோக்கி தொடர்ச்சியான ஷெல் வீச்சுக்கள் மேற்கொள்ளப்படுகின்றன. குண்டு வீச்சு விமானங்கள் ஹெலிகொப்டர்கள் என்பனவும் இப்பகுதிகளை நோக்கி தாக்குதல்களை நடாத்துகின்றன.

வியாழக்கிழமை பகல் 12.30 இலிருந்து மாலை வரை வாகரை பிரதேசத்தில் பத்துக்கும் மேற்பட்ட தடவை குண்டு வீச்சு விமானங்கள் பறந்து வந்தபடி குண்டுகளை வீசின. இதனால் வாகரை பொது வைத்தியசாலையும் பல வீடுகளும் சேதமடைந்துள்ளன. இங்கு சிகிச்சை பெற்றுக் கொண்டிருந்த ஏழு நோயாளர்களும் படுகாயமடைந்துள்ளார்கள். வாகரையில் நடத்தப்பட்ட குண்டு வீச்சு தாக்குதல்களில் பொதுமக்கள் பலர் கொல்லப்பட்டிருக்கலாமென நம்பப்படுகிறது.

இதைவிட குண்டு வீச்சு விமானங்கள் ஹெலி கொப்டர்கள் என்பன தண்டியடி, உன்னிச்சை, வேப்பவெட்டுவான், படுவான்கரை பகுதிகளிலும் தினமும் சுற்றிச் சுற்றி வட்டமிட்டபடி குண்டுகளை வீசி தாக்குதல்களை நடத்துவதை அவதானிக்க முடிகிறது. குண்டு வீச்சு விமானங்களின் சத்தமும், தாக்குதலும் மட்டக்களப்பு நகருக்குள் தெளிவாக கேட்க முடிகிறது.

அரச படைகள் ஷெல் வீச்சுகளினாலும் குண்டுத் தாக்குதல்களினாலும் இப் பிரதேசங்களிலுள்ள நூற்றுக்கணக்கான வீடுகள் தரைமட்டமாகியுள்ளதாகவும், ஆடு, மாடு போன்ற பல கால்நடைகள் சூடுபட்டு இறந்து கிடப்பதாகவும் தெரியவருகிறது. பல பொதுமக்களும் படுகாயமடைந்துள்ளனர். அறுவடை செய்யக் காத்திருந்த பல ஆயிரக்காணக்கான ஏக்கர் நெல் வயல்களும் நாசமாக்கப்பட்டுள்ளன.

இதை விட அரச படைகளின் ஷெல் வீச்சுக்களினால் காயமடைந்த பல பொதுமக்களை வைத்திய சிகிச்சை பெறுவதற்காக கால்நடையாகவேனும் கொண்டு வருவதற்கு படையினர் அனுமதிக்கிறார்களில்லை. இதனால் காயமடைந்த பல பொதுமக்கள் எவ்வித வைத்திய சிகிச்சையையும் பெறமுடியாத துயர நிலையில் இருப்பதாக அங்கிருந்து அகதிகளாக வருகின்ற பொதுமக்கள் கூறுகிறார்கள்.

உன்னிச்சை, ஆயத்தியமலை, தாண்டியடி, கொடுவாமடு, வேப்பவெட்டுவான், பன்குடாவெளி, உறுகாமம், இலுப்படிச்சேனை, புல்லாறுமலை, கரடியனாறு, பாவற்கொடிச்சேனை போன்ற இடங்களிலிருந்து ஆயிரக்கணக்கான மக்கள் மூட்டை முடிச்சுகளுடன் வீடுவாசல்களை விட்டு வெளியேறியுள்ளார்கள்.

கொடுவாமடுவிலிருந்து வெளியேறிய 400 குடும்பங்களும் வந்தாறுமூலை பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தில் தங்க வைக்கப்பட்டுள்ளார்கள். ஏறாவூர் வாழைச்சேனை, செங்கலடி பிரதேசம் முழுவதும் வெளியேறிய பொதுமக்கள் தமக்குத் தெரிந்த இடங்களிலும் கோயில்களிலும் தங்கியுள்ளார்கள்.

மட்டக்களப்பு நகருக்குள் வரும் புதிதாக எவரையும் தங்க வைக்க வேண்டாமென்று பொலிசார் எச்சரிக்கை விடுத்துள்ளார்கள். இதனால் அங்கு வெளியேறிய பொதுமக்கள் தங்கள் உறவினர் வீடுகளில் தங்குவதற்கு திண்டாட வேண்டிய நிலையில் உள்ளதையும் காணமுடிகிறது.

வலையிறவுப்பாலம், மண்முனைத் துறை ஆகிய இடங்களில் வெளியேறி வந்த பல பொதுமக்கள் படையினரால் திருப்பி விரட்டப்பட்டதையும் காண முடிந்தது.

இவ் இராணுவ நடவடிக்கையினால் மட்டக்களப்பின் பொது வாழ்க்கை முழுமையாக ஸ்தம்பிதமடைந்துள்ளது. மட்டக்களப்பு நகரம் வெறிச்சோடிய நிலையிலேயே உள்ளது. வீதிகளில் செல்லும் வாகனங்களில் இராணுவத்தினரையே காணமுடிகிறது.

மட்டக்களப்பு பஸ் டிப்போவிலிருந்து இருபதுக்கு மேற்பட்ட பஸ் வண்டிகள் இராணுவத்தால் எடுத்துச் செல்லப்பட்டுள்ளது. பல பொதுமக்களின் உழவு இயந்திரங்களும் எடுக்கப்பட்டுள்ளன. வீதிகளில் வாகன நடமாட்டம் மிகவும் குறைந்தே காணப்படுகிறது.

யாழ் குடாவில் இலட்சக்கணக்கான மக்களை இருப்பிடங்களை விட்டு துரத்தியடித்த சந்திரிகா அரசின் போரும் போரின் அதே தீவிரத்தன்மை கிழக்கிலும் பல கிராமங்களை முழுமையாக அழித்து இன்னோர் மரணமும் ரத்தமும் நிறைந்த சமாதானத்தை நோக்கி நகர்த்தப்பட்டுக் கொண்டிருக்கிறது.

பிரதம ஆசிரியர்: சேரன். எல்லாத் தொடர்புகட்கும்: இல.4, ஜெயரட்ன மாவத்தை, திம்பிரிகஸ்யாய, கொழும்பு 05. 593615
வெளியீட்டாசிரியர்: ச.பாலகிருஷ்ணன், 18/2 அலோசாலை, கொழும்பு 03. அச்சுப்பதிவு: நவமக அச்சகம்.334 காலி வீதி இரத்மலானை

960123
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்